ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 6 19 — 25 ஒக்டோபர் 2000 முழக்கம்: 301

FORWARD CONSULTANTS
-CONSULTING FOR PEOPLE-
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants. co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

புதிய கூட்டு ஆட்சியிலும் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசின் அடக்குமுறைகள் — வன்முறைகள் தொடரும்
- மட்டக்களப்பிலிருந்து நடேசன் பக்கம்-06

சிறீலங்காவின் புதிய ஆட்சி எவ்வளவு காலம் நீடிக்கும் ?
- வவுனியாவிலிருந்து தீபன் பக்கம்-15

சிறீமாவின் அரசியல் வாழ்வும் தமிழர் தாயகமும்
- பேப்பியின் அரசியல் ஆய்வு பக்கம்-07

யூகோஸ்லாவியாவில் மாற்றங்களை எதிர்பார்க்கும் மேற்குலகு?
- உலகக் கண் பக்கம்-23

புதிய அமைச்சரவை அமைப்பதில் சந்திரிகாவிற்கு நெருக்கடி

(16.10.00)

கடந்தவாரம் சிறீலங்காவில் நடைபெற்று முடிந்த தேர்தலில் இரு பிரதான கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கோ அல்லது பிராதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், ஆகக்கூடிய ஆசனங்களை பெற்ற கட்சி என்ற ரீதியில் தனது கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியை ஜனாதிபதி என்ற ரீதியில் சந்திரிகா அழைப்பு விடுத்திருந்தார். இதனையடுத்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க சிறீலங்காவின் 11வது பாராளுமன்றத்தின் பிரதம மந்திரியாக சந்திரிகா முன்னிலையில் பதவியேற்றார். இதனையடுத்து புதிய அமைச்சரவையை அமைக்கும் வேலைகளில் பொ.ஐ.மு இறங்கியபோது அமைச்சரவையை அமைக்க முடியாதபடி பொ.ஐ.முவிற்குள்ளேயும் பாராளுமன்றத்தில் அதற்கு முண்டுகொடுக்க முன்வந்த ஈ.பி.டி.பி மற்றும் தேசிய ஐக்கிய முன்னணிக்கிடையேயும் குத்துவெட்டுக்கள் ஆரம்பமாகியுள்ளன. முன்னதாக 16ம் திகதியே புதிய அமைச்சரவை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதிலும் அமைச்சுப் பொறுப்புக்களை ஒதுக்குவதில் தொடர்ந்தும் இடம்பெற்று வரும் குத்துவெட்டுக்கள் காரணமாக புதிய அமைச்சரவை அமைப்பது ஓரிரு நாட்கள் தள்ளிப்போடப்பட்டுள்ளன.

அமைச்சரவைப் பொறுப்புக்களை ஒதுக்குவதில் சந்தி

(☞ 2ம் பக்கம்)

கிளாலித் தளத்தில் நடந்தது என்ன?

(16.10.00)

கிளாலியில் நிலைகொண்டிருக்கும் சிறீலங்காவின் விசேட கடற்படை கொமாண்டோக்களின் படைத்தளம் மற்றும் 52-3 வது பிரிகேட்டின் பிரதான தளம் ஆகியவற்றை தொடர்ந்தும் ஓயாத அலைகள் படையணிகள் முற்றுகைக்குள் வைத்திருக்கின்றன. இத் தளங்களின் பல மினி முகாம்கள் ஏற்கனவே ஓயாத அலைகள் படையணிகளால் அழிக்கப்பட்டு அப் பிரதேசங்கள் மீட்க்கப்பட்டு தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள்ளேயே இருக்கின்றது. இந்நிலையில் கடந்த இதழின் விசேட இணைப்பு இதழொன்றினை ஈழமுரசு வெளியிட்டிருந்தது. அவ் விசேட இணைப்பில் கிளாலிப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதாக ஊர்யிதப்படுத்தப்படாத செய்திகளின் அடிப்படையில் செய்தி எழுதப்பட்டிருந்தது.

உண்மையில் கடந்த 9ம் திகதி அதிகாலை முதல் கிளாலிப் படைத்தளதின் பல முனைகளின் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடுமையான தாக்குதல்கள் காரணமாக கிளாலித் தளத்துடனான சகல தொடர்புகளும் பலமணி நேரமாக துண்டிக்கப்பட்டிருந்தன.

(☞ 2ம் பக்கம்)

மழைக்காலத்தில் தாக்குதல் மேற்கொள்ளலாம் அச்சத்தில் படையினர்

(16.10.00)

ஓயாத அலைகள்-4 இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த விடுதலைப் புலிகள் கிளாலியில் இருந்து நாகர்கோவில் வரையான 12 கிலோ மீற்றர் பிரதேசத்தை மீட்டு சிறீலங்காப் படையினரின் பிரதான விநியோகப் பாதைகளையும் தடைசெய்திருந்தமை தெரிந்ததே. இந்நிலையில் பெரும் தாக்குதல்கள் எதனையும் உடனடியாக மேற்கொள்ளாது புலிகள் அமைதி காத்துவருவதால், மழைக்காலம் தொடங்கிய பின் ஒரு பெரும் தாக்குதலை தென்மராட்சி மற்றும் வடமராட்சி படைத்தளங்கள் மீது மேற்கொள்ளலாம் என்ற அச்சம் படையினர் மத்தியில் ஆரம்பித்துள்ளதாக யாழ்குடாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதான விநியோகப் பாதைகளும் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், வல்லைப் பாலம் ஊடாகவே தென்மராட்சி மற்றும் வடமராட்சி பகுதியிலுள்ள படையினருக்கு அனைத்து விநியோகங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மழைக்காலத்தில் இப்பாதையை பயன்

(☞ 2ம் பக்கம்)

யாழ்.குடாவில் 245 சதுரக் கிலோமீற்றர் புலிகளின் கட்டுப்பாட்டில்

(16.10.00)

யாழ்குடா படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள் தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் இது வரை 245 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ்குடாவின் கிழக்குப் பகுதியிலேயே 245 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவிற்கு குறையாத ளவு பகுதியை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் விடுதலைப் புலிகள் தற்போதுவரை வைத்துள்ளதாக கொழும்பு

(☞ 2ம் பக்கம்)

புதிய பாராளுமன்றம் ஆறு வருடங்கள் நீடிக்குமா?

(16.10.00)

எந்த ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாத நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியினால், ஈ.பி.டி.பி. மற்றும் முஸ்லிம்களின் தேசிய ஐக்கிய முன்னணியின் ஆதரவுடன் புதிய அரசொன்றை அமைத்துள்ளது. ஆனால், தேசிய ஐக்கிய முன்னணி ஆரம்பத்திலேயே சில நிபந்தனைகளை விதித்து அதனை பொதுஜன ஐக்கிய முன்னணி நிறைவேற்றுவதற்கு நூறு நாட்கள் காலக்கெடுவினையும் வழங்கியுள்ளது. இந்த காலக்கெடுவிற்குள் தமது நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அரசிற்கான தமது ஆதரவு விலக்கிக்கொள்ளப்படும் எனவும் தேசிய ஐக்கிய முன்னணி இணைத் தலைவரான ரவூப் கஹ்கிம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளிப்பதற்கு ஈ.பி.டி.பி. இவ்வாறான நிபந்தனைகள் எதனையும் முன்வைக்காதபோதும் எதிர்வரும் ஆறு வருடங்களுக்கு புதிய அரசு நீடிக்குமா என்பது குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இருந்ததை விட

(☞ 2ம் பக்கம்)

மாவீரர்தினத்தை முன்னிட்டு 02.12.2000 எமது நிறுவனம் முடப்பட்டிருக்கும்

தமிழினி
பல்பொருள் அங்காடி

TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269
• எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

RCS PARIS
B 399 673 110 (95B01491)

Directeur de la publication:
P. Velupillai

Redacteur: P. Sivaguru
Impression:
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 40 04 17, 40244 Langenfeld
Tel/Fax: 02102158108 / 0210228672
தர்சனன்: 01732620605

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07801383857
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அமைச்சரவை...

ரிகா மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முன்னைய அமைச்சர்கள் அனைவரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். ஏற்கனவே தாம் இருந்த அமைச்சுப் பொறுப்புக்களை மீண்டும் தம்மிடம் வழங்கப்பட வேண்டும் என பழைய அமைச்சர்கள் யாவரும் சந்திரிகாவிற்கு நெருக்குதல் கொடுத்தபடி உள்ளனர். இதனைவிட ஈ.பி.டி.பி.க்கு வழங்கப்பட இருக்கும் அமைச்சுப் பொறுப்பு தமக்கு கொடுக்கப்பட வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணி சந்திரிகாவிற்கு நெருக்குதலை கொடுத்துள்ளது. புதிய அமைச்சரவை அமைக்கும் தாமதம் குறித்து உண்மை நிலமையை சிங்கள மக்களுக்கு தெரிவிக்க விரும்பாத ரட்ணசிறி விக்கிரம நாயக்க புதிய அமைச்சரவை அமைப்பதற்கு சுபநேரம் இன்னும் கிடைக்காதபடியினால் அமைச்சரவை நியமிப்பு தாமதப்படுவதாகவும் கூறியுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளாலித்...

கொழும்பு இராணுவத் தலைமையலுவலகம் கிளாலிப் படைத் தளத்துடனான தொலைத் தொடர்புகளை மீட்டெடுக்க முயன்றபோதும் அம் முயற்சி கைகூடவில்லை. இவ்வேளை, தளத்தின் விநியோக மார்க்கங்கள் மீதும் விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வந்ததால் குடாநாட்டின் ஏனைய இராணுவ முகாம்களுக்கும் கிளாலி குறித்த நிலை என்னவென்று தெரியவில்லை.

மேற்கூறிய நிலைமைகளால் கொழும்பு இராணுவத் தலைமையலுவலகத்தில் கிளாலிப் படைத்தளம் விடுதலைப் புலிகளின் கைகளுக்குள் முற்றாக வீழ்ந்துவிட்டது என்கின்ற முடிவு ஏறக்குறைய எடுக்கப்பட்டுவிட்டது. இராணுவ அதிகாரிகள் சிலரும் கிளாலிப் படைத்தளத்தின் இழப்புக்கள் குறித்து தமத ஊகங்களை வெளியிட்டனர். அவ்வாறான செய்திகளின் அடிப்படையில்தான் ஈழமுரசின் விசேட இணைப்பு வெளியிடப்பட்டது. எனினும் இந்தச் செய்தி இத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை எனவும் ஈழமுரசு அதில் குறிப்பிட்டிருந்தது. கிளாலித் தளத்தின் நிலைகுறித்து இராணுவத் தலைமையகத்தில் இவ்வாறான சந்தேகங்கள் எழுந்த நிலையில் இராணுவத் தலைமையகத்தில் 10ம் திகதி பிற்பகல் விசேட கூட்டம் நடாத்தப்பட்டு கிளாலிப் படைத்தளம் தொடர்பான நிலைமைகள் அவசரமாக ஆராயப்பட்ட போதுதான் கிளாலித்தளம் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் இருக்கின்றபோதும், அது முற்றாக விடுதலைப் புலிகளின் கைகளுக்குள் போகவில்லை என்ற விடயம் அவர்களுக்கு தெரியவந்துள்ளது.

மேற்படி செய்தி குறித்த ஈழமுரசின் விசேட இணைப்பு தொடர்பான உண்மைநிலையை வாசகர்கள் புரிந்துகொள்வார்கள் என நம்புகின்றோம்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மழைக்காலத்தில்...

படுத்துவது பெரும் சிரமமாக இருக்கும் என்ற நிலையில், புலிகள் வடமராட்சி, தென்மராட்சி படைத் தளங்கள் மீது இக்காலப் பகுதியில் தாக்குதலை தொடுக்கலாம் எனவும் இதனால் படைத்தரப்பு கனரக வாகனங்கள், டாங்கிகள், ஆட்லெறிகளை களமுனைகளுக்கு நகர்த்தி வருவதிலும் படையினருக்கான விநியோகங்களை மேற்கொள்ளுவதிலும் பெரும் நெருக்கடி நிலைகளை எதிர்கொள்ளலாம் என்பதால், மழைக்காலத்தில் புலிகள் தொடங்கப்போகும் இராணுவ நடவடிக்கை குறித்து படைத்தரப்பு அஞ்சுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். குடைவில்...

இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முன்னணிக் காவல்நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டபடி இருப்பதால் படையினர் அடிக்கடி தமது காவலரண்களை மாற்றியமைக்க வேண்டிய நிலையில் இருப்பதாக இராணுவ அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அவர் தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பாராளுமன்றம்...

இந்த பாராளுமன்றத்தில் அரசதரப்பிற்கான ஆதரவு குறைவாக இருப்பதால் இந்த தொங்கு பாராளுமன்றத்தை வைத்துக் கொண்டு பொ.ஐ.முன்னணியினால் அரசை ஆறு வருடங்களுக்கு கொண்டு நடத்துவது சாத்தியம் இல்லை எனவும் ஊகங்கள் தெரிவிக்கின்றன. இதனை விட ப்ரவலான வன்முறைகளுக்கு மத்தியில் இத் தேர்தல் நடைபெற்றுள்ளதால் மக்களின் உண்மையான விருப்பத் தெரிவாக இந்த அரசு அமைகின்றதா என்பதும் கேள்விக்குரியதென கொழும்பு அரசியல் விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதிப் போராட்டம்

காலம்:– 25.10.2000 புதன்கிழமை காலை 9.00 மணி
இடம்:– ஜேர்மன் உள்நாட்டு அமைச்சகம் முன்பாக
(Alt - Moabit 101d , 10559 Berlin
(u - Bhanhof Turmstr .Bus : 245 , 340)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய தமிழ் மக்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களை உலகிற்கு வெளிப்படுத்தவும் நடைபெறும் அமைதிப் போராட்டம்.

Eelam Tamils Welfare Association e.V
Postfach 620472
10794 Berlin

மரண அறிவித்தல்

திரு. அந்தோனிப்பிள்ளை எட்வேட் பிறின்ஸ்

(இளைப்பாறிய யாழ். மாவட்ட முகாமையாளர், அரச மரக்கூட்டுத்தாபனம்)

இல. 23, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. எட்வேட் பிறின்ஸ் 15.10.2000 அன்று யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திருமதி. மரியம்மா எட்வேட் (இளைப்பாறிய ஆசிரியை கன்னியர் மடம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை இராசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி செபஸ்ரியாம்பிள்ளை விக்ரோறியாவின் அன்பு மருமகனும், எடித் அன்திய (லதா-பிரான்ஸ்) பெலிஸியன் (கில்ற்றன்-இலண்டன்) வின்ஸ்லோ (வோல்ற்றன்-பிரான்ஸ்) எடித் மெலானி (ஆசிரியை புனித ரோக் வித்தியாலயம்), எடித் நிலானி (ஆசிரியை திருமறைக் கலாமன்றம்), எல்மோ உவாஷிங்ரன் (பிரான்ஸ்), எடித் சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிறின்ஸ்லி பயஸ் (பிரான்ஸ்), சியாமளா (இலண்டன்) ஆகியோரின் மாமனாரும், ஜோன் சிசிலியா, காலம்சென்ற ஜேம்ஸ் இரத்தினம், காலம்சென்ற ஜோசவ் விஜயன் ஆகியோரின் சகோதரரும், காலம்சென்ற ஜோண் (சீவ் எக்கவுண்டன் கொழும்பு), காலஞ்சென்ற ஜேம்ஸ் (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), யோசவ்வின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் மைத்துனரும், றொபின், பிரவீன், யூலியற் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமகன் (பிரான்ஸ்)
தொலைபேசி இல: 01 41 81 33 74 /06 20 46 40 21
மகன் - கில்ற்றன் (பெலிஸியன்)- இலண்டன் - 00-181-7944046775

நித்தி வாகன சேவை

உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் ஸ்ர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

Pub Fr

நித்தி:
0148050214 / 0613342518
0607348051 / 0148385825

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
Mº: La Chapelle *ou* Louis Blanc

à partir de

Bombay	-	3,900 Frs.
Delhi	-	3,900 Frs.
Bangkok	-	3,400 Frs.
Colombo	-	3,900 Frs.
Singapour	-	3,980 Frs.
Madras	-	4,300 Frs.
Londres	-	790 Frs.
New york	-	2,300 Frs.
Montreal	-	2,800 Frs.
Oslo	-	2,010 Frs.
Toronto	-	2,800 Frs.
Nepal	-	4,820 Frs.

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

யாழ்-காங்கேசன்துறை வீதியில் பாரவண்டி மோதி மூவர் பலி

(15.10.00)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் பாரவண்டி மோதியதில் மூன்றுபேர் பலியாகியுள்ளனர். இதில் கல்லூரி அதிபர் ஒருவரும் அடங்கியுள்ளார். கடந்த 9ம் திகதி திங்களன்று மனோகரா தியேட்டர் சந்திக்கருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் யாழ். நாவலர் மகாவித்தியாலய அதிபர் கதுரைராசா அவ்விடத்திலேயே பலியானார். சண் ரெக்கோடிங் பார் பணிப்பாளர் யோகநாதன் கியூவெட், மாருதி புடவைக்கடை உரிமையாளர் விசுவலிங்கம் ரஞ்சித்குமார் ஆகிய இருவரும் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமாகியுள்ளனர். இன்னும் இருவர் இச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை இவ்விபத்துக்கு காரணமான பாரவண்டியின் சாரதியான அப்துல் சுஹைர் என்பவரை சிறீலங்கா பொலிசார் கைது செய்தனர். ஆனால் பாரவண்டியை தானே ஓட்டிச்சென்றதாக ஆறுமுகம் வேலுப்பிள்ளை என்பவர் நீதிமன்றத்தில் தெரிவித்தபோதும், வண்டியை செலுத்திச் சென்றவர் அப்துல் சுஹைர் என்பவரே என மக்கள் சாட்சிகள் மூலம் நிரூபித்ததையடுத்து, பொய்ச்சாட்சி கூறியதற்காக இவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இவ் விபத்தினாலும், பொய்ச் சாட்சிகளினாலும் ஆத்திரமடைந்த மக்கள், விபத்துக்குள்ளான வீதியில் சரிந்துகிடந்த பாரவண்டியை தீயிட்டு எரித்துள்ளனர். இதனால் பாரவண்டி முற்றாக எரிந்தழிந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றம் செல்லும் முதல் முஸ்லீம் பெண்

சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக முஸ்லீம் பெண் ஒருவர் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். உலங்குவானூர்தி விபத்தில் கொல்லப்பட்ட அமைச்சர் அஸ்ரப்பின் துணைவியாரான பேரியல் அஸ்ரப்பே பாராளுமன்றம் செல்லும் முதல் முஸ்லீம் பெண்ணாவார். திகாமடுல்ல மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிட்டு பேரியல் அஸ்ரப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சரவையில் இவருக்கும், அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சியில் 903 பேர் அவயங்களை இழந்துள்ளனர்

(15.10.00)

சிறீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் மிதிவெடிகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு தமது அவயவங்களை இழந்த 903 பேர் கிளிநொச்சியில் வாழ்ந்து வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன. இதில் 550 பேர் ஆண்கள் எனவும் 353 பேர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது அவயவங்களை இழந்ததால் இவர்கள் தொழில்கள் எதையும் மேற்கொள்ள முடியாது வாழ்க்கைச் செலவிற்கு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரியவருகிறது.

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தினர் மேற்கொண்ட ஆய்விலேயே இவ் விபரங்கள் தெரியவந்துள்ளன.

சந்திரிகா-டக்ளஸ் பேச்சு

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா ஈ.பி.டி.பி. டக்ளஸ் தேவானந்தாவை கடந்த 12ம் திகதி இரவு சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு ஆதரவளித்து அதற்குப் பதிலாக அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பது தொடர்பாகவே இப் பேச்சுவார்த்தை நடைபெற்றதாகத் தெரியவருகின்றது.

கடந்த அரசிற்கு ஈ.பி.டி.பி அளித்த ஆதரவிற்கு சந்திரிகா தேவானந்தாவிற்கு அச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

தேர்தல் வேடிக்கை விநோதங்கள்...!

சிறீலங்கா அரசு 1900ற்கும் மேற்பட்ட வன்முறைகளினதும் 60ற்கு மேற்பட்ட கொலைகளினதும் பின் (வன்முறைகள், கொலைகள் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன...) நடாத்தி முடித்திருக்கும் பாராளுமன்ற தேர்தலில், ஏராளமான கள்ளவாக்குகள் போடப்பட்டுள்ளதாக போட்டியிட்ட கட்சிகளால் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்திவரும் நிலையில், இதுவரை இடம்பெற்ற தேர்தல் வேடிக்கை விநோதங்களை நீங்கள் இங்கு காணலாம்.

★ ★ ★

கள்ள வாக்களிக்கப்போய் 3000 பிணையில் வந்தனர்

வவுனியாவில் வெளிநாட்டில் உள்ள தமது சகோதரர்களின் வாக்குகளை அளிக்க முயன்ற இரு தமிழ்க்குழு ஆதரவாளர்கள் கள்ளவாக்கு அளிக்க முயன்றார்கள் என்று குற்றச்சாட்டப்பட்டு கைது செய்து வவுனியா நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். எதிர்வரும் 20ம் திகதி இவர்களை நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்ட நீதிபதி, 4 மணியுடன் வாக்களிப்பு முடிவடைந்துவிடும் என்பதால், அதற்கு பின்னர் அவர்களால் கள்ளமாக வாக்களிக்க முடியாது என்பதைத் தெரிவித்து 3000 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முயன்றபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

★ ★ ★

2 வீத வாக்குகளுடன் தெரிவாகிய முல்லை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 53,054 வாக்காளர்க்ள் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்கள் என சிறீலங்கா தேர்தல் ஆணையகம் பதிவாக்கியுள்ள நிலையில், இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள கிரிஎப்பன்வெவ பகுதியில் மட்டும் வாக்களிப்பு நிலையம் வைக்கப்பட்டு அப்பகுதியைச் சேர்ந்த 600 வாக்காளர்களின் வாக்குகள் மூலமே முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திற்கான 50,000ற்கு மேற்பட்ட வாக்காளர்களில் ஆயிரம் வரையான வாக்குகளுடன் சிறீலங்காவின் ஐ.தே.க. தெரிவாகியுள்ளது.

★ ★ ★

கள்ளவாக்களிக்க விசேட வாகன சேவை

யாழ். குடாவில் கள்ள வாக்களிப்பதற்கு விசேட போக்குவரத்து வசதிகளை தேர்தலில் போட்டியிட்ட தமிழ்க் குழு ஒன்று மேற்கொண்டிருந்தது. பல்வேறு இடங்களிலும் இருந்தும் இவர்களை ஏற்றிவந்த இக்குழுவினர் அவர்களை வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் இறக்கி விட்டுள்ளனர். வாக்களித்த பின்னர் அவர்களை மீண்டும் ஏற்றிக்கொண்டு வந்து அனைவரையும் தமது அலுவலகத்தின் முன்னால் இறக்கிவிட்டுள்ளனர். தமது சொந்த இடங்களிலேயே கொண்டு சென்று இறக்கிவிடுவார்கள் என எதிர்பார்த்து ஏமாந்த இக் கள்ளவாக்காளர்கள், திரும்பிப்போவதற்கு வசதியில்லாமல் சிரமங்களை எதிர்கொண்டதாக யாழ். செய்திகள் தெரிவித்தன. இதேவேளை, யாழ். மாவட்டத்தில் இம்முறை இடம்பெற்ற வாக்களிப்பில் அதிக எண்ணிக்கையான கள்ள வாக்குகள் போடப்பட்டதாக உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார்.

★ ★ ★

இறந்தவர்களும்-காணாமல் போனவர்களும் வாக்களிப்பு !

யாழ். குடாவில் இறந்தவர்களும் காணாமல் போனவர்களும் வாக்களித்துள்ளதாக தெரியவந்துள்ளது. தேர்தல் நடைபெறுவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னதாக வீடுவீடாகச் சென்ற தமிழ்க்குழுவைச் சேர்ந்தவர்கள், அவ் வீடுகளில் உள்ளவர்களை மிரட்டி இறந்தவர்களினதும், காணாமல் போனவர்களினதும் வாக்காளர் அட்டைகளை பறித்துச் சென்றுள்ளனர். வலிகாமம் மேற்கு, ஊர்காவற்துறை, கரவெட்டி, திருநெல்வேலி, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளிலேயே பெருமளவான இறந்தவர்கள் - காணாமல் போனவர்களது வாக்காளர் அட்டைகள் இவர்களால் பறித்துச் செல்லப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

★ ★ ★

வீதி வீதியாக சாராய விநியோகம்

தேர்தலில் போட்டியிட்ட குழுவொன்று, யாழ்ப்பாணம், கந்தரோடை, சுண்ணாகம், நெல்லியடி, உடுப்பிட்டி பகுதிகளில் வீதி வீதியாக தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட வாகனத்தில் திரிந்து, வீதிகளில் நின்ற மக்களுக்கு சாராயப் போத்தல்களை இலவசமாக வழங்கி வாக்குவேட்டை நடாத்தியுள்ளனர். இதேவேளை, தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக சென்று தங்கியுள்ள மக்களிடமும் சாராயப் போத்தல்களை வழங்கி அவர்களது வாக்குகளையும் தமக்கு அளிக்குமாறு கேட்டுள்ளனர்.

★ ★ ★

புத்தளத்தில் போடப்பட்ட வன்னி மக்களின் வாக்குகள்

வன்னியில் உள்ள மக்களின் வாக்காளர் அட்டைகளை கொண்டு அவர்கள் புத்தளத்தில் வசிப்பதாகக்கூறி புத்தளத்தில் அவர்களது வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளதாக குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. இப்பகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள் இக் குற்றச்சாட்டினை சுமத்தியுள்ளனர். வன்னியில் இருப்பவர்கள் பலரது வாக்காளர் அட்டைகளை, அவர்கள் புத்தளத்தில் வசிப்பதாகக் கூறி பெற்றுச்சென்றனர் என்றும், இவ் வாக்குகள் தற்போது புத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ExcellencE சர்வதேச தொலைபேசி அட்டை

	№ Local	-	№ Vert
இலங்கை	50	-	35
இந்தியா	43	-	32

இன்னும் பல நாடுகளுக்கு அதிக நிமிடங்கள்

CALLnet
59, Rue d'Avron
75020 Paris
Tel: 0146594024

சிறீமாவின் உடல் கொறகொல்லயில் அடக்கம்

சிறீலங்காவின் தேர்தல் தினத்தன்று மரணமடைந்த முன்னாள் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் உடல் கடந்த 14ம் திகதி மாலை கொறகொல்லயிலுள்ள அவரது கணவரும், முன்னாள் பிரதமருமான எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சமாதிக்கருகில் பூரண அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. கணவரின் சமாதிக்கருகிலேயே தன்னை அடக்கம் செய்யவேண்டுமென்ற அவரது இறுதி ஆசைக்கிணங்கவே பண்டாரநாயக்காவின் சமாதிக்கருகில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ் இறுதி அடக்க நிகழ்வுகளின்போது அப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகக் கடுமையாக இருந்தன. இறுதிக்கிரியைகளில் பல சர்வதேச இராஜதந்திரிகள் பங்கெடுத்துக்கொண்டனர். அத்துடன் சிறீமாவின் பிள்ளைகளான ஜனாதிபதி சந்திரிகா, சுநேத்திரா, அநுரா பண்டாரநாயக்கா ஆகியோரும் சிறீமாவின் சகோதரர்களான கில்பேட், ரத்வத்த ஆகியோரும் பங்கெடுத்துக்கொண்டனர்.

பீரங்கி வண்டியில் முப்படையினரின் அணிவகுப்புடன் இவரது உடல் கண்டிப்பிரதான வழியூடாக கொறகொல்லச் சமாதிக்கு எடுத்துவரப்பட்டது.

வாக்களிப்பில் பெரும் வன்முறை

கடந்த வாரம் நடபெற்றுள்ள சிறீலங்காவின் பொதுத் தேர்தலின்போது 57 தேர்தல் தொகுதிகளில் 210 வாக்களிப்பு நிலையங்களில் மிகவும் மோசமான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது. கொலைகள், குண்டுவீச்சுகள், வாக்குப் பெட்டிகளை மாற்றியமை, ஆள்மாறாட்டம், வாக்குச் சாவடிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம், இராணுவ வாகனங்கள் உட்பட அரச வாகனங்கள் மோசடிகளுக்குப் பயன்படுத்தப்பட்டமை உட்பட பல மோசமான சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் மேற்படி கண்காணிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

இரத்தினபுரி வாக்களிப்பு நிலையமொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தேர்தல் முகவரொருவர் பலியாகி, மேலும் சில அதிகாரிகள் முகவர்களும் காயத்திற்குள்ளாகியமையும் இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 100 நாட்கள் காலக்கெடுவுடன் தேசிய ஐக்கிய முன்னணி ஆதரவு

15.10.2000

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைப்பதற்குச் சில முன் நிபந்தனைகளை விதித்திருக்கும் தேசிய ஐக்கிய முன்னணி அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கென 100 நாட்கள் காலக்கெடுவையும் வழங்கியுள்ளது. இதுபற்றி கருத்துத் தெரிவித்த தேசிய ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவரான ரவூப் ஹக்கீம், சுயாதீனமான தேர்தலை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழுக்களை அமைக்க வேண்டும், ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டிருக்கும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவேண்டும். ஆகிய நிபந்தனைகளை தமது கட்சி முன்வைத்திருப்பதுடன் அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசிற்கு 100 நாட்கள் காலக்கெடுவை விதித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு இஸ்திரமான அரசொன்றினை அமைக்கும் நோக்குடனேயே பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைக்க ஆதரவளிக்க முன்வந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை, புதிய அமைச்சரவையில் தேசிய ஐக்கிய முன்னணிக்கான அமைச்சுப் பொறுப்புக்களும் சந்திரிகாவால் ஒதுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக உலங்குவானூர்தி விபத்தில் கொல்லப்பட்ட அமைச்சர் எம்.எச்.எம். அஸ்ரப்பின் துணைவியாருக்கு அமைச்சுப் பொறுப்பொன்று கிடைக்கலாமெனவும் தெரியவருகின்றது.

ஆறு வருடங்கள் அரசு நீடிக்காது - ரணில்

எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை இல்லாத நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைத்திருக்கும் புதிய அரசு மிகக் குறைந்த ஆயுளைக்கொண்ட அரசாகவே இருக்குமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னர் இருந்ததைவிடவும் இந்தப் பாராளுமன்றத்தில் அரசிற்கான ஆதரவு குறைவாகவே இருக்கின்றது, இத்தகைய நிலையில் இந்த அரசு 6 வருடங்கள் நீடிப்பது சாத்தியமில்லையெனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களைத் தனது பணியகத்தில் சந்தித்த ரணில் பரவலான வன்முறைகளுக்கு மத்தியில் தேர்தல் நடந்ததால் பல இடங்களில் வாக்களிப்பு நீதியான முறையில் இடம்பெறவில்லையெனவும் இதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

நாம் நடுநிலைமை - ஜே.வி.பி.

பாராளுமன்றத்தில் எந்தவொரு தரப்பினையும் சாராது ஜே.வி.பி. நடுநிலைமை வகிக்குமென அக்கட்சியின் பிரச்சாரச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் தனது கட்சி நடுநிலைமையைக் கையாளுமென்றும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சிறந்த திட்டங்களுக்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் அதேவேளை, மக்கள் விரோத ஆலோசனைகளை எதிர்க்குமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஜே.வி.பிக்கு பாராளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனம் கிடைத்த போதும் இம்முறை 10 ஆசனங்களை கட்சி கைப்பற்றியிருக்கின்றது.

திருப்பி அனுப்ப வேண்டாம் எனக்கோரி ஜேர்மனியில் பேரணி

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை, சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பக்கூடாது எனக்கோரி கடந்த 10.10.2000 செவ்வாயன்று பேரணியொன்று இடம்பெற்றது. இப் பேரணியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டிருந்தனர். வெஸ்ட்பாலன் மாநிலத்தின் தலைநகரான டுயிஸ்டோப் தொடருந்து நிலையத்திற்கு முன்பாக காலை 11 மணிக்கு ஆரம்பித்த இப் பேரணி மாநில உட்துறை அமைச்சின் பணியகத்திற்கு முன்பாக முடிவுற்றது. இப்பேரணியின் முடிவில் பேரணி ஏற்பாட்டாளர்கள் மூவரை உட்துறை அமைச்சின் பிரதிநிதி சந்தித்துப் பேசினார். இப் பேச்சுக்களில் சிவசோதிராஜா வரதராஜன், விறாஸ் மென்டிஸ், வணபிதா அல்பேட் கோலன் ஆகியோர் கலந்து கொண்டு, சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை அமைச்சின் பிரதிநிதியிடம் விளக்கிக் கூறினார்கள். மனித உரிமை மீறல்களில் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கும் சிறீலங்காவில் தமிழர்கள் மிகக் கொடுமைப்படுத்தப்படுவதனால் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை அங்கு திருப்பி அனுப்பவேண்டாம் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டதுடன், தமிழர்களை சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பவேண்டாம் எனக் கோரி ஐயாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கையொப்பமிட்ட விண்ணப்பம் ஒன்றையும் மாநில உட்துறை அமைச்சின் பிரதிநிதியிடம் கையளித்தனர்.

இப் பேச்சுக்களின் பின்னர் பதிலளித்த அமைச்சின் பிரதிநிதி, தமிழர்களின் சார்பில் கூறப்பட்ட அனைத்து விபரங்களையும் தாம் உட்துறை அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும், இலங்கையில் தேர்தல் நடந்து முடிந்தபின் அந்நாட்டின் நிலை குறித்து புதிய அறிக்கை வரும்வரை உட்துறை அமைச்சர் காத்திருப்பதாகவும் தெரிவித்தார். இதனையடுத்து மாலை மூன்று மணியளவில் பேரணி முடிவுற்றது.

சுவிஸ் வாழ் மாவீரர் குடும்ப விபரம்

எதிர்வரும் 27.11.2000ம் திங்கட்கிழமை மதியம் 1.00 மணிக்கு சுவிஸ் Bern Bea (பேயா) மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மாவீரர் நாள் நிகழ்வில், மாவீரர் குடும்பத்தினருக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவிருப்பதால் சுவிசிலுள்ள மாவீரர் குடும்பத்தினர் தங்களது பெயர் விபரங்களை அல்லது முகவரி மாற்றங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி: WTCC - Postfach 2257, 8031 Zürich.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி 01/2713731 - தொலைநகல்: 01/4404572

ரத்வத்தயின் மகன் பொலிஸ் காவலில்

சிறீலங்காவின் மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணியகத்தின் மீது கடந்த வியாழக்கிழமை இரவு (12.10.2000) துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தயின் மகன் பிரதான சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்டதையடுத்து அவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா விசேட அதிரடிப்படையினர் மூலமாக உத்தரவிட்டிருந்தார். இதனையடுத்து, ரத்வத்தயின் மகன் தனது சட்டத்தரணியுடன் கண்டிப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். தற்பொழுது இவர் மேலதிக விசாரணைக்கென விசேட புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார். ரத்வத்தயின் மகன் தெரிவித்த தரவுகளின் அடிப்படையில் இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இன்னும் சிலர் தேடப்பட்டுவருவதாகவும் சிறீலங்காப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தவேளை ரத்வத்தயின் மகனும் அவரது 40 ஆதரவாளர்களும் கண்டிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகத்தையும், கைக்குண்டுத்தாக்குதலையும் நடாத்தியது குறிப்பிடத்தக்கது.

திருமலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியும் - ஐ.தே.க.வும் 'வந்த கதை'

திருமலை மாவட்டத்தில் கடந்த 50 வருடங்களாக சிறீலங்காவின் பாராளுமன்றத்திற்கு தமிழ் பிரதிநிதித்துவம் இருந்தபோதும், கடந்த தேர்தலில் அவ்வாறன பிரதிநிதித்துவம் முற்றாகப் பறிபோயுள்ளது. இத்தேர்தல் முடிவுகளின்படி திருமலை மாவட்டத்தின் பிரதிநிதிகளாக 3 பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும், 1 ஐ.தே.க. உறுப்பினரும் தெரிவிக்கப்பட்டுள்ளனர். திருமலை மாவட்டத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டபோதிலும் அது தோல்வியடைந்துள்ளது. சுமார் 79,000 மேற்பட்ட தமிழ் வாக்காளர்கள் திருமலையில் இருந்தபோதும், தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கட்சியும் அங்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் 'பெற்ற கதை' நடந்தேறியுள்ளது.

4 அமைச்சர்கள் 11 பிரதி அமைச்சர்கள் தேர்தலில் தோல்வி

சிறீலங்காவில் நடந்து முடிந்த தேர்தலில் 4 அமைச்சர்களும், 11 பிரதி அமைச்சர்களும், 40 பாராளுமன்ற உறுப்பினர்களும் தோல்வியடைந்துள்ளனர். அமைச்சர்களான கிங்ஸிலி விக்கிரமரட்ண, நந்தா மத்தியூ, டி.பி.விக்கிரசிங்க, ஹேம ரட்நாயக்க ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர். பிரதியமைச்சர்கள் 11 பேரும் தோல்வியடைந்துள்ளனர். இவர்களில் ஹிஸ்புல்லாவும் அடங்குகின்றார். முன்னாள் அமைச்சரும், லலித் முன்னணியின் அமைச்சருமான சிறீமணி அத்துலத்முதலியும் தோல்வியடைந்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் அதன் முக்கிய பிரமுகர்களான ரேணுகா ஹேரர், எம்.எஸ். அதிகாரி, எம். தர்மதாசபண்டா, றொகாண் அபயகுணசேகர உட்பட சிலர் தோல்வியடைந்துள்ளனர். ராஜமனோகரி புலேந்திரனும் தோல்வியடைந்துள்ளார். வடக்குக் கிழக்கை பொறுத்தவரையில் ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த ஐவர், புளொட் சித்தார்த்தன், புளொட்டின் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வை. பாலச்சந்திரன், கூட்டணியின் மட்டுமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவும், மலையகத்தைப் பொறுத்தவரையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த ரி. இராஜரட்ணம், ஆர். யோகராஜன் ஆகியோரும் தோல்வியடைந்தோரில் அடங்குவர்.

அக்கரைப்பற்றில் தொடரும் மோதல்கள்

அக்கரைப்பற்று, பட்டினப்பள்ளி ஆகிய இடங்களில் ஐக்கியதேசியக் கட்சி, முஸ்லீம் ஆதரவாளர்களுக்கிடையே தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்றுவருவதால் அப் பகுதிகளில் பதட்ட நிலை தொடர்ந்துவருகின்றது. மேற்படி மோதலைக் கட்டுப்படுத்த முயன்ற சிறீலங்காப் பொலிசார் மீதும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் தாக்குதல் நடாத்தியதில் 5 பொலிசார் காயமடைந்ததுடன், இவர்களது வாகனமும் சேதத்துக்குள்ளாகியது. இதேவேளை, ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய இடங்களிலும் ஹிஸ்புல்லாவின் ஆதரவாளர்கள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டுவருவதால் அப்பகுதிகளிலும் பதட்ட நிலை தொடருகின்றது. தற்பொழுது சிறீலங்காப் படையினர் இப்பகுதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் தேர்தல் மோசடிகள்

யாழ். மாவட்டத்தில் நாடத்தப்பட்ட சிறீலங்காவின் பாராளுமன்றத் தேர்தலில் பெரும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகத் தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அபகரிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகளைக் கொண்டு கள்ளவாக்குகள் செலுத்தப்பட்டமை, வாகனங்களில் ஆட்களை ஏற்றிச் சென்று கள்ளவாக்குகள் செலுத்தப்பட்டமை, இறந்தவர்களின் வாக்காளர் அட்டைகளைப் பெற்று சில கட்சிகள் வாக்குகள் செலுத்தியமை உட்பட பல தேர்தல் மோசடிகள் நடைபெற்றுள்ளதாக இக் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்கு, கரவெட்டி, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நல்லூர், ஊர்காவற்துறை ஆகிய தொகுதிகளிலேயே பெருமளவு வாக்கு மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமுடி, உதிர்கின்றதா?

கவலை வேண்டாம். தலைமுடி பாதுகாப்பு தயாரிப்பு

Naturina® நட்டுறினா

உங்கள் கவலையை போக்குகின்றது

நட்டுறினா தயாரிப்புகளான கூட்டுகுளிகைகள், ஷம்பு, சூந்தல் தைலம் ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக உபயோகிப்பதன் மூலம் **தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம்** போன்ற குறைபாடுகளை தடுத்து நிறுத்தலாம். பயன் நிச்சயம்.

இத்தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு. **நட்டுறினா** இயற்கை மூலிகைகளின் கலவையில் தயாரிக்கப்பட்ட ஓர் உயிர்ப்பு கலவையாகும். இத் தயாரிப்பு எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.

கடந்த இரண்டு வருடங்களாக ஆயிரக் கணக்கானவர்கள் நட்டுறினா தயாரிப்புக்களை ஜேர்மனியில் மட்டுமன்றி உலகின் மற்றும் பல நாடுகளிலும் உபயோகித்து சிறந்த பலனைப் பெறுகின்றனர்.

நட்டுறினா தயாரிப்புக்களை உபயோகிப்பதின் மூலம் தலைமுடி தொடர்பான குறைபாடுகளைத் தடுத்து நிறுத்தி தலைமுடியின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதுடன், சர்மத்தில் பளபளப்புத் தன்மையையும் பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம். **நட்டுறினா உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்.**

நீங்கள் மூன்று மாதங்களுக்குத் தேவையான நட்டுறினா தலைமுடிப் பாதுகாப்புத் தயாரிப்புகளை (3 ஷம்பு, 3 சூந்தல் தைலம், 3 கூட்டுகுளிகைப் பெட்டிகள்) ஒரே முறையில் பெறுவதற்கு விண்ணப்பித்தால் செலுத்த வேண்டிய தொகை, அனுப்பும் செலவு தனிப்பட 348,00 DM இவற்றை ஒவ்வொரு மாதமும் வாங்குவதற்கு விண்ணப்பித்தால் செலுத்த வேண்டிய தொகை அனுப்பும் செலவு தனிப்பட 419,55 DM. ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம், சுவிஸ், டென்மார்க், நோர்வே, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வங்கி மூலம், வங்கி அட்டை மூலம் அல்லது அஞ்சல் அலுவலகம் ஊடாக பணம் அனுப்பும் விடயங்களுக்கும், அனுப்பும் செலவுகளுக்கும் தயவுசெய்து நேரடித் தொடர்பு கொள்ளவும்.

நட்டுறினா தலைமுடி பாதுகாப்புத் தயாரிப்புக்களை உங்கள் மூன்று மாத காலப் பாவனைக்குப் பின்பு, அதனால் ஏற்படும் பலாபலன்களை நீங்கள் எங்களுக்கு எழுத்து மூலம் அனுப்பிவைத்தால் உங்களுக்கு 50,00DM அனுப்பிவைக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
Intercare Handels Gmbh
Nassauer str.33-37, 59065 Hamm-Germany.
Tel: 0049 2381 915910 Fax: 0049 2381 91591-21

0049 2381 915910 - 0049 2381 9159115 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் எம்முடன் தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்.
வார நாட்களில்: 3.00 - 6.00 மணிவரை *(ஜே.நேரம்)*

Pub.Ger.

இந்திய துணை ஜனாதிபதி கொழும்பில்

சிறீலங்காவின் முன்னாள் பிரதமர் சிறீமாவின் இறுதிக் கிரிகைகளில் பங்குபற்றுவதற்கென இந்தியாவின் சார்பில் துணை ஜனாதிபதி கிருசாந் காந் கொழும்பு சென்றிருந்தார். இதனைவிட, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் இறுதிக் கிரிகைகளில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வந்திருந்தனர்.

கதிர்காமர் நோர்வே பயணம்

சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கடந்த 13ம் திகதி நோர்வேக்குப் பயணமாகியுள்ளார். நோர்வேக்கும் சிறீலங்காவிற்குமிடையே இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்ட 50 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு நடைபெறவிருக்கும் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அவர் நோர்வே சென்றுள்ளதாக சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது. நோர்வேயில் தங்கியிருக்கும்வேளை இவர் எரிக் சொல் ஹெய்ம்ஐ சந்திக்கவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

மலையகத் தமிழ் வாக்காளர்கள் விரட்டியடிப்பு

மலையகத்தின் தோட்டப் பகுதி மக்கள் சிறீலங்காவின் தேர்தல் தினத்தன்று வாக்குச் சாவடிகளுக்குச் சென்றபோது அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். வாக்கு அட்டைகளை அவர்களிடமிருந்து பறித்தெடுத்த கும்பல்களே அவர்களை விரட்டியடித்துவிட்டு அந்த அட்டைகளைக் கொண்டு கள்ள வாக்குப் பதிவினை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

நாவலப்பிட்டி, கம்பளை, டெல்தெனிய, உடதும்பற, ஹரிஸ்பத்துவ ஆகிய தேர்தல் தொகுதிகளிலேயே அதிகளவில் தோட்டத் தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பிச்சை கிடைக்காத பெருமாள்

சந்திரிகாவின் நெருங்கிய ஆதரவாளரான வரதராஜப் பெருமாளின் அணி கடந்த தேர்தலில் மிகச் சொற்பளவான வாக்குகளையே பெற்றுள்ளது. பெருமாள் அணியை எதிர்த்து இத்தேர்தலில் குதித்த சுரேஸ் அணிக்கும் மிகக் குறைந்த அளவான வாக்குகளே கிடைத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

புதிய கூட்டு ஆட்சியிலும் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசின் அடக்குமுறைகள்–வன்முறைகள் தொடரும்

மட்டக்களப்பிலிருந்து நடேசன்

சிறீலங்காவின் 11வது பாராளுமன்றத் தேர்தல், எந்தக் கட்சியுமே அறுதிப் பெரும்பான்மை பெற முடியாத தீர்ப்பை எழுதியுள்ளது. கடந்த 1994 தேர்தலில் 105 ஆசனங்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மை இல்லாத போதிலும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி நடாத்திய பொதுஜன ஐக்கிய முன்னணி, நடந்து முடிந்த தேர்தலில் 107 ஆசனங்களைப் பெற்றுள்ளது. 94 ஆசனங்களைப் பெற்றிருந்த ஐக்கிய தேசியக்கட்சி 89 ஆசனங்களையே பெற்றுள்ளது. 225 ஆசனங்களை கொண்ட சிறீலங்கா பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையைப் பெற 113 ஆசனங்கள் தேவை. இந்நிலையில், ஏதாவது சிறிய கட்சிகளின் ஆதரவின்றி ஆட்சி அமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் விடுதலை முன்னணி [ஜே.வி.பி] மூன்றாவது சக்தியாக 10 ஆசனங்களுடன் வெற்றி பெற்ற போதிலும் அக்கட்சி எந்த பிரதான கட்சிக்கும் ஆதரவு வழங்கப் போவதில்லை என அறிவித்ததையடுத்து, சிறுபான்மை மக்களின் கட்சிகளை நாடும் நிலை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் தலா நான்கு ஆசனங்களைப் பெற்ற ஈ.பி.டி.பி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மறு பிறப்பான தேசிய ஐக்கிய முன்னணி என்பவற்றின் ஆதரவோடு அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கவுள்ளது. அத்தோடு அம்பாறை மாவட்டத்தில் சுயேட்சை குழு - 2ன் சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. ஒருவரும் அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்.

கடந்த ஆட்சியின்போது, பொதுஜன ஐக்கிய முன்னணி 105 ஆசனங்களை பெற்ற போதிலும், 7 ஆசனங்களை பெற்றிருந்த சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், ஒரு ஆசனத்தை பெற்றிருந்த நுவரெலியா சுயேட்சை குழுவும் வழங்கிய ஆதரவில் அறுதிப்பெரும்பான்மை எட்டப்பட்டது. அதேவேளை ஐக்கிய தேசிய கட்சி சின்னத்தில் போட்டியிட்டு 9 ஆசனங்களை வென்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அரச தரப்பில் இணைந்ததால் அரசின் பலம் 122 ஆக அதிகரித்தது. அத்தோடு 9 ஆசனங்களைக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி, 2 ஆசனங்களை கொண்டிருந்த புளொட் என்பனவும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கியதன் மூலம் 133 ஆசனங்களின் மூலம் பலம்மிக்கதாக அமைந்தது. ஒரு கட்சி நினைத்தால் ஆட்சியை இறக்க முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி பெற்றுள்ள 107 ஆசனங்களில் நான்கு ஆசனங்கள் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும், 3 ஆசனங்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு உரியன. அதாவது தற்போது தேசிய ஐக்கிய முன்னணியும், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசும் சேர்ந்து 8 ஆசனங்களை கொண்டிருக்கின்றன. ஈ.பி.டி.பியும் அம்பாறை மாவட்ட சுயேட்சை உறுப்பினரையும் சேர்த்து ஐந்து உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

ஆகவே 11வது பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்கவுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கவுள்ள இரண்டு பங்காளிக்கட்சிகளில் ஒன்று காலை. இடறினாலும் ஆட்சி கவிழக்கூடிய நிலையே உள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் ஒன்று இடறினால் இன்னொன்று தோள் கொடுக்க கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இப்போது ஆட்சியின் பங்காளியாகவுள்ள இரு கட்சிகளில் இரண்டும் இடறும் பட்சத்தில் 10 ஆசனங்களைக் கொண்ட ஜே.வி.பி. தோள் கொடுத்தால் மட்டுமே ஆட்சி நீடிக்கும். ஒரு போதும் ஜே.வி.பி இரண்டு பிரதான கட்சிகளுக்கும் முண்டு கொடுக்காது என்றே அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். அதனால் ஒரு கட்சி இடறினாலும் ஆட்சி கவிழும் நிலையே ஏற்படும்.

ஆட்சிக்கு பிள்ளையார்சுழி போடுவதற்கு முன்பே, இரண்டு பங்காளி கட்சிகளும் 'பறியில் கைவைப்பது போல' பங்கு கேட்க ஆரம்பித்துள்ளன. இதனால் இன்று திங்களன்று திட்டமிட்டது போல அமைச்சரவை பதவியேற்கவில்லை. சிறீலங்காப் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்க, 'சுபவேளை சரியில்லை' என்று சமாளித்துவிட்டார். எப்படியோ சமாளித்து அமைச்சரவை பதவியேற்றாலும் பல்வேறு இழுபறிகளுக்கு ஆட்சியாளர்கள் முகம் கொடுக்க வேண்டியேற்படும். இரண்டு பங்காளிக் கட்சிகளும் சிறுபான்மை மக்களின் கட்சிகள். தம்மை வளர்க்கவும், வளப்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் வேலை வாய்ப்புகளில் தமது அமைச்சுக்களில் தம்மை சார்ந்தவர்களுக்கு முக்கிய இடமளிக்கும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் மற்றும் சிஹல உருமய போன்ற சிங்கள மக்களின் 'சிறுபான்மை' அங்கீகாரம் பெற்ற இனவாதக் கட்சிகளும் ஆட்சியின் மீது தீவிர கண்டன பிரச்சாரங்களை

மேற்கொண்டு, நாட்டை புலிகளுக்கு தாரை வளர்த்து கொடுக்கிறார் என்று கூக்குரல் இடத் தயங்கமாட்டார்கள். ஆட்சியில் பதவியேற்க முன்பே மக்கள் விடுதலை முன்னணி கருத்து தெரிவிக்கையில், சிறுபான்மை மக்களே ஆட்சியாளர்களின் அசைவுகளை தீர்மானிக்கப் போகிறார்கள். ஆட்சி தரகர்களாக, பலம்மிக்கவர்களாக இருக்கப் போகிறார்கள் என்று தெரிவித்துள்ளது.

அத்தோடு பௌத்த மகாசங்கத்தினர் பொதுஜன ஐக்கிய முன்னணி சிறுபான்மை கட்சிகளோடு இணையாது மக்கள் விடுதலை முன்னணியோடு இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது. நடந்து முடிந்த தேர்தல்



உறுதிமிக்க ஆட்சி அமைப்பதற்கான தீர்ப்பை வழங்கவில்லை. மூன்றாவது சக்தியாக 10 ஆசனங்களுடன் தெரிவு செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் வளர்ச்சி, உறுதி மிக்க ஆட்சி மத்தியில் ஏற்படுவதற்கு தடையாக உள்ளது. இதனால் அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைவதற்கு விகிதாசார பிரதிநிதித்துவ முறை தடையாகவே இருக்கும். 17 தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 89 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஒரு தொகுதியிலும் வெற்றி பெறாத மக்கள் விடுதலை முன்னணி 10 ஆசனங்களையும் பெற்றிருப்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. ஆக, 'நீடித்த ஆயுள் நித்திய கண்டமென்ற நிலையில்' ஆட்சியில் அமரப்போகும் பொதுஜன ஐக்கிய முன்னணி, தனது ஆட்சிக் காலத்திற்கான ஆறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் மிகமிக குறைவாகவே இருக்கும். தற்போதைய பேரம் பேசல் இழுபறிகள் இதனை தெளிவாக கட்டியம் கூறுகின்றன. பத்தாவது பாராளுமன்ற ஆட்சிக் காலத்தில் 11வது பாராளுமன்றத்தை எப்படியும் கைப்பற்றுவோமென்ற நம்பிக்கையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி கோட்டைவிட்ட நிலையில், சும்மா இருக்காது. பல்வேறு வியூகங்களை அமைத்து ஆட்சியை கவிழ்ப்பதற்கு முழு சக்தியையும் பிரயோகிக்கும்.

இந்த எதிர்ப்பார்ப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை பலவீனப்படுத்தும் கைங்கரியங்களை சில சக்திகள் மேற்கொண்டு வருகின்றன. பலமான தலைமைத்துவம் ஐக்கிய தேசியக்கட்சிக்கு இருப்பது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு எப்போதும் அச்சுறுத்தலாகவே இருக்கும். நடந்து முடிந்த தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சியின் பலம் மிக்க தலைவர்களாக இருந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் புதல்வன் சகித் பிரேமதாசா, காமினி திசாநாயக்காவின் புதல்வன் நவீன் திசாநாயக்கா ஆகியோர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பொறுப்பு ஏற்ற பின்னர் நடை பெற்ற மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலிலும், ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தலிலும் ஐக்கிய தேசிய கட்சி தோல்வி அடைந்திருக்கிறது. ஆட்சியாளர்கள் மீது மக்கள் மத்தியில் வெறுப்பு இருந்தாலும் அதனை வசீகரித்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக எதிர்ப்பு அலைகளை உருவாக்கக்கூடிய ஆளுமை மிக்க தலைமைத்துவம் கட்சிக்கு இல்லையென்ற விமர்சனம் பலமாக வைக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எழக்கூடிய உள் முரண்பாட்டை 'துல்லியமாக பயன்படுத்துவதன் மூலமே' ஆட்சியை நீடிக்க செய்யலாம். ஐக்கிய தேசிய கட்சியில் முரண்பாடு இல்லாது பலமிக்கதாக இருந்தால் இந்த ஆட்சி நீடிப்பது சந்தேகமே. அத்தோடு பௌத்த மகா சங்கமும் இந்த ஆட்சியில் சிறுபான்மை மக்களின் கை ஓங்குவதை பார்த்துக் கொண்டிருக்காது என்பதும் எதிர்பார்க்கக் கூடிய யதார்த்தமாகும்.

தமிழர் பிரதேசங்களில் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் தெம்பூட்டக் கூடிய முடிவுகள் கிட்டியுள்ளன. 40 வருடங்களுக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஒரு பிரதிநிதியைப் பெற்றுள்ளது. அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில், இலங்கைத் தேர்தல் வரலாற்றில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெறவே இல்லை. இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரு ஆசனத்தை பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றுக்கு குறையாத ஆசனங்களை கடந்த மூன்று தேர்தல்களில் பெற்ற தமிழர் விடுதலை கூட்டணி இரண்டு ஆச

னங்களை மயிரிழையில் பெற்றுள்ளது. இது எதிர்காலத்தில் தேசியக் கட்சிகள் தமிழர் பிரதேசங்களில் பலமாக காலூன்றக் கூடிய சமிக்ஞையை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணக் கூடிய ஜனநாயக நடைமுறைகளும் ஏற்படும் ஏது நிலை இல்லை. மேலும் பிரதமர் தேர்தல் மேடைகளில், 'புலிகளுடன் பேச மாட்டோம். யுத்த மூலம் அழிப்போம். நோர்வேயின் 3ம் தரப்பு மத்தியஸ்தத்திற்கு இடமே இல்லை' என்று அறுதியாக கூறிவிட்டார். இதனால் சிறுபான்மைக் கட்சிகளோடு சேர்ந்து ஆட்சி செய்வதால் தென் பகுதியில் எழக் கூடிய உணர்வலைகளை தணிக்க, யுத்த பேரிகையையே அரசு கொட்டும். இதனால் தமிழ் மக்கள் மீது அடக்கு முறைகளும் வன்முறைகளும் தொடர்ந்து திணிக்கப்படும் என்பது மட்டும் உண்மையிலும் உண்மையாக இருக்கும்.

தமிழர் வித்தியாலயம்

75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16
Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 60, 65

டியூசன் கல்வி Soutien Scolaire

* École: CP.CE1. CE2. CM1. CM2
  Collège: 6e. 5e. 4e. 3e
  Lycée: 2nd, BEP, 1ère, la Terminale
* பல்கலைக்கழகப் பட்டம் பெற்று, தமிழும் தெரிந்து, கற்பிப்பதில் ஈடுபாடுடைய 25 பிரெஞ்சு ஆசிரியர்கள் தனிக்கவனத்துடன் கற்பிக்கிறார்கள்.
* Français Math. SVT. Biologie. Physique. Chimie. Histoire Géographie. Anglais. Allemand. Espagnol. Philosophie. உடன் Tamoul (Bac) என 13 பாடங்கள்.
* சனி, புதன் 14 மணி - 19 மணிவரை. ஞாயிறு : 10 மணி - 17 வரை
* வார நாட்களில் 17h15 - 19h15 ⇨ CE, CM, Collège
* 6h30 - 7h30 ⇨ 1ère, Terminale

வீணை, சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கள், வயலின்

யோகாசனம், கராட்டி, ஓர்கன்

பிரெஞ்சு வகுப்புக்கள் Le cours de français
* வாரநாட்கள்: காலை–மாலை வகுப்புக்கள் ➂ மாத கற்கை நெறி
* சனி–ஞாயிறு: பகல் –மாலை வகுப்புக்கள் ➅ மாத கற்கை நெறி

நல்ல ஆங்கிலம் Good English
TOEFL பரீட்சைக்குத் தயார்செய்யும் வகுப்பும் தொடங்குகிறது.
சிறுவர்களுக்கு என தனியான வகுப்பும் ஆரம்பிக்கப்படுகிறது.

கம்பியூட்டர் பயிற்சி நெறிகள்:
Windows 95, 98, NT. C.C+ +Visual Basic Internet. HTML. Javascript. Flash 4.E -mail Free Phone.

இங்கு தரப்படும் டியூஷன் கல்வியினால், படிப்பில் பின்தங்கி உள்ள மாணவர்கள் முன்னேற்றம் அடைகிறார்கள். விவேகமான மாணவர்கள் வகுப்பேற்றப்படுகிறார்கள். தேர்ச்சி அறிக்கையில் பாடங்களுக்கு Progrès, Encouragements, Excellent, Félicitations போன்ற குறிப்புக்கள் இருக்கின்றன. மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் மாணவர் மையக்கல்வி.
ஒப்பனை, தையல், அலங்கார, ஐசிங் கேக் வகுப்புக்கள்

நல்ல தமிழ்
தமிழ், பிரெஞ்சு மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகிறது.

பிரெஞ்சு - வகுப்பு:
வார நாட்கள்: 11h.30 - 13h.30. 14h00 - 16h.00. 16h.00-18h.00 18h.00-20h.00
சனி – ஞாயிறு: 11h.00 - 12h.30. 12h.30 -14h.00. 15h.00-16h.30. 17h.15. -18h.45. 18h.45 -20h.15

ச.சச்சிதானந்தம் M.A. D.S. Ph.D (10 பிரெஞ்சு, ஆங்கில நூல்களின் ஆசிரியர்)

Pub

சிறீமாவின் அரசியல் வாழ்வும்-தமிழர் தாயகமும்

கடந்த வாரம் உலகின் கவனத்தை ஈர்த்துவிட்ட ஒரு நாடாக சிறீலங்கா இருந்திருக்கின்றதென்றால் அது பொய்யான கூற்றாக இருந்துவிடப்போவதில்லை. அந்த நாட்டில் நடைபெற்ற இரு விடயங்களே இந்த ஈர்ப்புக்கு காரணமாக இருந்திருக்கின்றது.

1. அந்த நாடு பிரித்தானியக் குடியேற்றவாதத்திடமிருந்து சுதந்திரம் பெற்றதன் பின்னர் சந்தித்த 11வது பாராளுமன்றத் தேர்தல்.

2. உலகின் 1வது பெண் பிரதமராகவும், சிறீலங்காவின் முன்னாள் பிரதமராகவுமிருந்த சிறீமாவோ பண்டார நாயக்காவின் மரணம்.

மேற்கூறிய இரு சம்பவங்களும் இருவேறானவையாக இருந்தாலும், ஒன்றுடனொன்று தொடர்புடையவையாக இருந்தது. ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். தேர்தலில் வாக்களித்துவிட்டுத் திரும்பும் வழியிலேயே சிறீமா தனது மரணத்தைத் தழுவியுள்ளார்.

சிறீமாவின் மரணத்தையடுத்து சில 'கதை'களும் கொழும்பில் உலாவத் தவறவில்லை. சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் தனக்கென ஒரு காத்திரமான இடத்தை வைத்திருந்த சிறீமாவின் மரணம் உலகின் சில பகுதிகளைத் தொட்டுச் சென்றாலும், இலங்கைத் தீவில் அமைந்திருக்கும் தமிழர் தாயகத்தையும் இதற்கு எதிர்மறையான கண்ணோட்டங்களே காணப்பட்டன. உலகின் 1வது பெண் பிரதமர், அணிசேரா நாடுகள் அமைப்பின் முன்னாள் தலைவி ஆகிய பெருமைகளை சிறீமா பெற்றிருந்தாலும், இந்தப் பெருமைகளையெல்லாம் நினைவுகொள்ளத்தக்க வகையில் தமிழர் தாயகம் இருக்கவில்லை. சிறீமாவைப் பற்றிய பேச்சு எழும்போதெல்லாம் தமிழர் தாயகத்தில் ஆழப்புதைந்துள்ள ஆழமான கனல் வெளியே பீறிடுகின்றது. தமிழர் தாயகத்திற்குச் சிறீமாவோ பண்டார நாயக்கா தனது அரசியல் வாழ்வில் விதைத்ததெல்லாம் பெரும் இன்னல்களைத்தான். மறைந்த ஒருவரைப் பற்றி இழிவாக உரைப்பது தமிழர் தம் வாழ்வியலுக்குப் பொருந்தாது என்றாலும், சில வரலாற்றுப் பதிவுகளைச் சுட்டிக்காட்டுவது அவசியமாக இருக்கின்றது. தமிழ் மக்களின் கல்விச் சொத்திற்கே ஆப்பு வைத்தவரே இந்த அம்மணிதான். சிறீமாவின் அரசியல் வாழ்வில் பல முரண்பாடுகள் இருந்தாலும், அவர் செம்மையாகச் செய்த ஒருவிடயமென்றால் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைதான். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் 1959ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ம் திகதி சிறீமாவின் கணவரான எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா பௌத்த பிக்கு ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு சிறீமாவிடம் அக் கட்சியினர் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், அப்போது அவ்வாறான ஒரு பொறுப்பையேற்க சிறீமா மறுத்துவிட்டார். அரசியல் பொது வாழ்விலோ அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பொறுப்பையோ ஏற்றுக்கொள்வதைத் தான் விரும்பவில்லையென அவர் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். ஆனால், சிறீமாவின் இந்த நிலையை உடைத்து அவரை அரசியலுக்குக் கொண்டுவந்தது, கொண்டுவரத் தூண்டியது ஒரு தமிழர்தான். அந்த 'நன்றியினால் தானோ என்னவோ அவர் தமிழர் தாயகத்தின் மீது மிகக் கொடுமையான ஒடுக்குமுறைகளை பின்னர் கட்டவிழ்த்துவிட்டார். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவரும், பண்டாரநாயக்கா குடும்பத்தின் நெருங்கிய நண்பராகவுமிருந்த ஈ.எம்.வி.நாகநாதன் தான் சிறீமாவை அரசியலில் பிரவேசிக்கும்படி வற்புறுத்தியவர். பண்டாரநாயக்காவின் பெயர் சிறீலங்காவின் வரலாற்றில் நிலைக்க வேண்டுமாயின் நீங்கள் தான் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பையேற்க வேண்டுமென அவர் கூறிய யோசனைகளின் விளைவுதான் சிறீமாவின் அரசியல் பிரவேசம்.

பேம்பி

அரசியலில் பிரவேசித்த சிறீமா தமிழ் மக்களுக்கு எதிரான பல நடவடிக்கைகளை பல்முனைகளிலும் முடுக்கிவிட்டதை மனச்சாட்சியுடன் சிந்திக்கும் எவருமே மறுத்துரைக்க மாட்டார்கள். இந்த வரிசையில் சில விடயங்களில் இப்போது திரும்பிப் பார்ப்பது அவசியமானது.

1972ம் ஆண்டு இவர் ஆரம்பத்திலிருந்த சோல்பரி அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கெதிரான வகையில் சில மாற்றங்களைச் செய்தார். அதுவும், கம்யூனிச சித்தாந்தம் பேசிய கலாநிதி கொல்வின் ஆர். டி.சில்வா மூலமே இதனைச் செய்தார். சோல்பரி அரசியலமைப்பும் தமிழ் மக்களுக்கு எதிரானதாகவிருந்தாலும், அதில் சில சரத்துக்கள் சிறுபான்மை இனங்களுக்கு பாதகமான அரசியலமைப்பு ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை ஓரளவு தடுத்திருந்தது. ஆனால், சிறீமா இந்த அரசியலமைப்பை இல்லாமல் செய்து, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் புதிய அரசியலமைப்பு ஒன்றினை கொல்வின் ஆர்.டி. சில்வா மூலமாக வரைந்துகொண்டார். இந்தப் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்போகும் தாக்கங்கள் குறித்து, தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சியும் முன்வைத்த சில யோசனைகளை தூக்கியெறிந்தவர் இந்த சிறீமா பண்டாரநாயக்காதான்.

இதனைவிட, சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கிளைத்த பெரும் வரலாற்றுக்கொடுமையை அறிமுகப்படுத்தியவர் சிறீமாதான். தமிழ் மக்களின் கல்விச் சொத்திற்கு தரப்படுத்தல் முறை என்ற ஒரு கொடுமையான முறையினைக் கொண்டு வந்து, தமிழ் மக்களின் உயர்கல்வியினை இவர் மழுங்கடிக்க திட்டமிட்ட ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால், அன்று தான் விதைத்த அந்த விதை, இன்று தன் தேசத்தையே உலுக்கி எடுக்கும் பெரும் அக்கினி விருட்சமாக மாறுமென்பதை அன்று சிறீமா உணர்ந்திருக்க மாட்டார். இவ்வாறாகப் பண்டார நாயக்காவின் அரசியல் வாழ்வில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது முதல், இன்றைய ஜனாதிபதி சந்திரிகா தமிழ் மக்கள் மீது போர் பிரகடனம் செய்வதுவரை பண்டாரநாயக்கா குடும்பம் கடந்த 4 தசாப்த காலமாக தமிழ் மக்களுக்கு கட்டவிழ்த்துவிடும் ஒடுக்குமுறைகளில் சிறீமாவிற்கும் ஒரு அத்தியாயமுண்டு. இதனையாரும் மறுக்கமுடியாது.

தனது வாழ்வின் இறுதிக்காலப் பகுதியை பெரும்பாலும் முச்சக்கர நாற்காலியிலேயே கழித்த சிறீமாவை அல்லது அவரது 84வது வயதிற்கான தோற்றத்தை காணும் ஒருவருக்கு சிறீமா மீது ஒரு பச்சாத்தாபம் பிறக்கலாம். ஆனால், அவர் தமிழர் தாயகத்தில் விதைத்த அந்தக் கொடுமையான விதைகள் தமிழ் மக்களின் வாழ்வில் எவ்வளவு தூரம் பெரும் இன்னல்களை ஏற்படுத்தின என்பதை ஒருகணம் சிந்தித்தால் இந்தப் பச்சாத்தாபமெல்லாம் பறந்தோடிவிடும். தனது கணவரான பண்டாரநாயக்காவே சாதிக்கமுடியாத சில அரசியல் தந்திரோபாயங்களை இந்த அம்மையார் சாதித்ததென்னவோ உண்மைதான். சிறீலங்காவின் சக்திமிக்க இடது சாரித்தலைவர்களை (என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பீற்றர் கெனமென்) தனது அணியில் ஒன்றுதிரட்டி அவர்களை தனது தலைமையிலான அமைச்சரவையில் பணிபுரியவைத்தவர் இந்தச் சிறீமா. ஆனால், தனது தேசத்திற்கு அருகிலுள்ள ஒரு தேசத்தின் குடிமக்களுக்கு நேசக்கரம் நீட்டுவதற்குப் பதிலாக இவர் நாசக்கரம் நீட்டியதால், இன்று இவரது மரணச் செய்தி தமிழீழ மக்களுக்கொரு வெறும் பத்தோடு பதினொராவது செய்தியாகவே இருக்கின்றதை யாரும் மறுக்க முடியாது.

சிறீமாவைப் பற்றிய பேச்சு எழும்போதெல்லாம் தமிழர் தாயகத்தில் ஆழப்புதைந்துள்ள ஆழமான கனல் வெளியே பீறிடுகின்றது.

எமது வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்கள்

VIDEO WORLD

மலிவு விற்பனை

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பிரமிட் ஒரிஜினல் CD க்கள்

0.99 P இல் இருந்து

இன்னும் பல...

430 Alexandra Ave
Rayners Lane, Harrow Haz 9 SE.
Tel: 0208 8680083 / Fax: 0208 8680083

9ம் ஆண்டு நினைவு



தமிழீழ
விடுதலைப்
பணிக்கான
வெளிநாட்டுச்
செயற்பாட்டில்
நீண்டகாலம்
உழைத்து
தன்னலமற்ற
சேவையினூடு
விடுதலையை
நேசித்த
உத்தமர்களே!

ஒக்ரோபர் 18

தாய்நாட்டின் விடுதலைக்காக
வெளிநாட்டிற் பணிபுரிந்து விதையான
எங்கள் செல்வங்களே!
உங்களைப் பற்றிய தூய
நினைவுகளோடு உங்களைப் பணிந்து
எங்கள் தலை நிமிர்கின்றோம்!!
உங்கள் வழி தொடர உங்கள்
நினைவுகள்
எமக்கு துணைசெய்யும்!!!

தமிழீழ விடுதலைப் பணியின்போது விபத்தொன்றில் விதையாகிப் போன தமிழீழ விடுதலைப் புலிகள்அமைப்பின் ஜேர்மனிப் பொறுப்பாளர்
மேஜர் சுரேந்தி (சுரேந்திரகுமார்)
ஜேர்மனிப் பணியக கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்
அமரர் **கிருஷ்ணகுமார் (குஞ்சன்),** தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனிப் பணியக மாநிலப் பொறுப்பாளர்
அமரர் **சௌந்தரராஜன் (சௌந்தி),** அவரது மனைவி **விஜயகுமாரி,** மகள் **சபிலா** ஆகியோரது ஒன்பதாவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
ஜேர்மனிப் பணியகம்.

சிறீலங்காப் படையினர் கடும் சித்திரவதை விடுதலையான மீனவர்கள் தெரிவிப்பு

சிறீலங்காக் கடற்படையால் கைதுசெய்யப்பட்டு கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்ட. ஐந்து தமிழக் மீனவர்கள், சிறைவைக்கப்பட்டிருந்த 1½ வருட காலப்பகுதியில் தம்மீது படையினர் கடுமையான சித்திரவதைகளைப் புரிந்ததாகக் கூறியுள்ளனர். கடலில் வைத்து கைது செய்த படையினர் கண்களைக் கட்டி இலங்கைக்குக்கொண்டு சென்று அங்கு கண்களைக் கட்டியபடியே துப்பாக்கிப் பிடியினால் கடுமையாகத் தாக்கியதாகவும் பின்னர் தினமும் சிகரெட்டினால் உடம்பு முழுவதும் சூடு போட்டனர் எனவும் தெரிவித்துள்ளனர். சிறைவைக்கப்பட்டிருந்த 1½ ஆண்டு காலமும் ஒரு நேரமே உணவு தரப்பட்டதாகவும் கூறியுள்ளனர். விடுவிக்கப்பட்டு சென்னை வந்த இவ் ஐந்து மீனவர்களையும் மீன் வளத்துறை அதிகாரிகள் வரவேற்று அவர்களது சொந்தக் கிராமங்களுக்கு அனுப்பிவைத்தனர்.

'கடவுளின் கொடை' அன்னை தெரேசா வரலாறு திரைப்படமாகிறது

அன்னை தெரேசாவின் வாழ்க்கையை மையமாக வைத்து 'கடவுளின் கொடை' என்ற திரைப்படம் ஒன்று தயாராகி வருகின்றது. சமூக சேவைக்காக நோபல் பரிசுபெற்ற அன்னை தெரேசாவின் பாத்திரத்தில் அஸ்வதி மேனன் நடிக்கிறார். மலையாள மொழியில் தயாராகும் இப்படத்தை பிரபல இயக்குநர் ஷாஜி இயக்க, செவாலியே நடிகர் திலகம் சிவாஜி கணேசன், பாலச்சந்திரமேனன் உட்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். அன்னை தெரேசாவின் குழந்தைப் பருவம் முதல் இறுதிக் காலம் வரையான சம்பவங்கள் படத்தில் இடம்பெறுமென தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த 'ஈஸ்டர்' பண்டிகைக்கு இப்படம் திரையிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடருந்துப் பாதையில் கிடந்த ஏழு உடல்கள்

உத்திரப் பிரதேசம் கோவும் பாவ் என்ற பகுதியில் உள்ள தொடருந்துப் பாதையிலிருந்து ஏழு உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக மாநிலப் பொலிசார் தெரிவித்துள்ளனர். கண்டெடுக்கப்பட்ட ஏழு உடல்களில் ஐந்து குழந்தைகள் எனவும் தெரிவித்த பொலிசார் இவர்கள் கொல்லப்பட்ட பின்னரே தொடருந்துப் பாதையில் போடப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்துப் பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக மாநில பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

பழ. நெடுமாறன் தூதர் குழுவுக்குத் தீவிரவாத முத்திரை தமிழர் அமைப்புகள் கண்டனம்

கன்னட நடிகர் ராஜ்குமாரை வீரப்பனிடமிருந்து மீட்பதற்கு நக்கீரன் ஆசிரியர் கோபாலுடன் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் உட்பட்ட தூதர்குழுவிற்கு, தீவிரவாத முத்திரைகுத்தி அறிக்கை வெளியிடுவோருக்குத் தமிழர் அமைப்புகள் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

மனித நேய அடிப்படையில் பல அபாயங்களுக்குத் தங்களை உட்படுத்திக்கொண்டு காட்டிற்குச் சென்றுள்ளனர். நடிகர் ராஜ்குமாரை மீட்பதற்கான முயற்சியை யார் செய்தாலும் அது மனிதநேய அடிப்படையில் செய்யப்படுகின்றது என்பதையும், தமிழ்நாடு கர்நாடக மாநில

மக்களின் நல்லுறவை மேம்படுத்துவதற்கான முயற்சி என்றும் பாராமல் குறுகிய அரசியல் கண்ணோட்டத்தில் சிலர் கண்டன அறிக்கைகள் விடுவது வருந்தத்தக்கதென தமிழர் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டறிக்கை தேசப் பொதுவுடமைக் கட்சி பெ. மணியரசன், தமிழர் இயக்கத் தலைவர் சுப. வீரபாண்டியன், விடுதலை இராஜேந்திரன் தமிழர் தேசிய இயக்கப் பொதுச் செயலாளர் பரந்தாமன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க வீரப்பனைச் சந்திப்பதற்குச் சென்றுள்ள இத் தூதர் குழு வீரப்பன் இருக்கும் இடத்தை சென்றடைந்துள்ளதாகவும், தற்போது பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீன மக்களுக்கு இந்தியா உதவி

இஸ்ரேலின் தாக்குதலில் பாதிக்கப்பட்ட பாலஸ்தீனர்களுக்குச் சுமார் 25 இலட்சம் ரூபா மதிப்புள்ள மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கு முடிவு செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இம் மருந்துப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தோ - பாலஸ்தீன அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

இந்தோ - பாலஸ்தீன அமைப்பினர் புதுடில்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகத்தின் முன்னால் கடந்த 14ம் திகதி சனியன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். இஸ்ரேல் பாலஸ்தீனத்தில் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவே இவ் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டுள்ளது. இவ் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் இஸ்ரேல் தூதரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

இந்தியச் செய்திகள்

நரசிம்மராவுக்கு 3 ஆண்டுகள் சிறை

முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, முன்னாள் அமைச்சர் பூட்டா சிங்கிற்கும் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.. நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றில் வாக்களிப்பதற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கிலேயே தனி நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. தீர்ப்பு வழங்கப்பட்டதையடுத்து, ஆந்திர மாநில அரசு கல்லூரிப் பாடப் புத்தகங்களில் உள்ள நரசிம்மராவ் பற்றிய பகுதிகளை நீக்கமுடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படவுள்ளதாகவும், நரசிம்மராவின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இந்திய அரசியல் வரலாற்றில் முன்னாள் பிரதமர் ஒருவருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாரச் செய்திகள்

★ அ.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினராக ஜெயலலிதாவின் தோழி சசிகலா நியமிக்கப்பட்டார்.

★ டான்சி நில ஊழல் வழக்கில் ஜெயலலிதாவிற்குத் தண்டனை வழங்கப்பட்டதால், அரச பேருந்துகளுக்குத் தீ வைத்த அ.தி.மு.க. தொண்டர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

★ உச்ச நீதிமன்ற நுழைவாயிலில் மூன்று கைக்குண்டுகளைத் தொடர்ந்து வீசி வெடிக்கவைத்த நபர் ஒருவர் உடனடியாகப் பொலிசாரால் சுற்றிவளைத்து கைது செய்யப்பட்டார். இக் குண்டு வெடிப்பில் மூவர் காயமடைந்தனர்.

★ மகாத்மா காந்தியின் ஆதரவாளருக்கும் ஹிட்லரின் ஆதரவாளருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிவடைந்தது. பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் கற்கும் இம் மாணவர்கள் இருவரும் 20ம் நூற்றாண்டு குறித்த விவாதம் ஒன்றில் ஈடுபட்டிருந்தவேளை, ஆத்திரமடைந்த காந்தியின் ஆதரவாளர் ஹிட்லரின் ஆதரவாளரைக் கத்தியால் குத்தியுள்ளார். காயமடைந்த ஹிட்லர் ஆதரவு மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

★ நிறுத்தப்புட்டிருந்த பாரவண்டி ஒன்றுடன் வேகமாக வந்த வாகனமொன்று மோதியதில் 7 பேர் பலியானார்கள் 16 பேர் காயமடைந்தனர். கோலார் தங்கவயல் பகுதியில் இச் சம்பவம் வெள்ளியன்று இடம்பெற்றது.

★ பீகார் சிவன் மாவட்டத்தில் இனந்தெரியாதவர்களால் வெள்ளியன்று இரவு 11 மணியளவில் 11 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

★ நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் மத்திய அரசு உதவி செய்யத் தயாரென மத்திய உட்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்தார்.

★ ராஜஸ்தான் பிகானர் மாவட்டத்தில் விமானப் படையின் பயிற்சி விமானமான மிக்-2 வீட்டின்மேல் வீழ்ந்து நொருங்கியது. விமானி பலியானதுடன் வீட்டிற்குள் இருந்த பெண் ஒருவரும் பலியாகியுள்ளனர்.

பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு

திறந்த முறைப் பல்கலைக்கழக அமைப்பு

Open University System (OUS)

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமும், பாரிஸ் சர்வதேச உயர்கல்வி நிறுவன (International Institute of Higher Studies) திருவள்ளுவர் தமிழ் மேற்படிப்பு மையம் இணைந்து நடாத்தும் திறந்த முறை பல்கலைக்கழக (Open university System) பட்டப்படிப்பு.

தமிழ் மூலம் தமிழ் இளங்கலை - B.A 2000: 2001 ஆம் ஆண்டுக்கான சேர்க்கை அறிவிப்பு

அனுமதிக்கு முறையான கல்வித்தகுதி தேவையில்லை கல்வியை விரும்பும் எவரும் விண்ணப்பிக்கலாம்.

பாடங்கள்: தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம், ஆங்கிலம், பிரெஞ்சு, மொழிப்பாடம், தமிழீழ வரலாறு.

தொடர்புகள்: Le Directeur. Institut International Des Etudes Supérieures Centre d'études et d'Information 70,75 Rue Philippe de Girard. 75018 Paris.

Phone: 01 40 05 11 16.
Fax: 01 60 28 19 61
Web Site: www.iiES.FR.FM
E-Mail: Sachchithanantha@aol.com.

குரொஸ்னியில் குண்டு வெடிப்பு; பலர் பலி!

(15.10.2000)

செச்சினியத் தலைநகர் குரொஸ்னியின் மத்திய பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பொன்றில் பத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டு, முப்பது பேர்வரை காயமடைந்துள்ளனர். இக் குண்டு வெடிப்பு வியாழக்கிழமை காலை இடம்பெற்றது. இக்குண்டு வெடிப்புக்கு செச்சினியத் தீவிரவாதிகள் தான் காரணமென ரஷ்யா தெரிவித்துள்ளது.

நகரின் மத்தியில் அமைந்துள்ள பொலிஸ் திணைக்களக் கட்டடத்தின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் வாகனமொன்றே வெடித்துச் சிதறியது. இக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த கடவுச் சீட்டு வழங்கும் நிலையத்தின் முன்னால் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர் என்றும், குண்டு வெடிப்பினால் கொல்லப்பட்டவர்களில் ஏழுபேர் ரஷ்ய ஆதரவு செச்சினிய பொலிசார் என்றும் ஏனையோர் பொதுமக்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையே பதவியில் இருந்து அகற்றப்பட்ட 'செச்சினிய அதிபர் அஸ்லான் மஸ்காடோவின் பேச்சாளர் அண்டைநாடான இங்கு ஷெட்டியாவில் இருந்து பத்திரிகையாளர்களுடன் தொடர்புகொண்டபோது, இத்தாக்குதல் இஸாமுனாயெவ் எனும் தீவிரவாத தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள போராளிகளால் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

சீனப் பிரதமர் ஜப்பான் விஜயம்

(15.10.2000)

சீனப் பிரதமர் சூ ரொன்ஜி ஆறு நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு ஜப்பான் வந்துள்ளார். வெள்ளியன்று ஜப்பானியப் பிரதமர் ஜோசிரோ மோரியுடன் தனது பேச்சுவார்த்தையை ஆரம்பித்தபோது, இரு நாடுகளுக்குமிடையே இரண்டாம் உலக யுத்த நிகழ்வுகளால் ஏற்பட்டு வந்த முரண்பாடுகளைக் களைந்து விடும்படி கோரினார். 40 களின் போது ஜப்பானியப் படைகள் சீனாவில் ஆக்கிரமிப்பு யுத்தம் மேற்கொண்டதால் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. இவைகள் காலத்துக்குக் காலம் சீனத் தலைவர்களால் எடுத்துக் கூறப்பட்டு வந்தது. யுத்த காலத்தில் ஏற்பட்ட வடுக்களால் இரு நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டதாகக் கூறிய சீனப் பிரதமர், தனது நாட்டின் கடந்த கால அறிக்கைகளை மறந்து விடும்படி ஜப்பானைக் கோரினார்.

ஜப்பான், கடந்த 20 வருட காலமாக சீனாவின் பல திட்டங்களுக்கு உதவிகளை மேற்கொண்டு வருவதை நினைவுபடுத்திய அவர், அதற்காக தனது நன்றியையும் தெரிவித்தார். சீனாவுக்கும் ஜப்பானுக்குமிடையே கடல் எல்லைத் தகராறு ஒன்று ஏற்பட்டது. ஜப்பானிய கடற்பிராந்தியத்துக்குள் அடிக்கடி சீன கடற்படை ஊடுருவல்களை மேற்கொள்வது ஜப்பானின் ஆத்திரத்துக்கு காரணமாகியது. இப்பிரச்சினையும் இரு அதிபர்களின் சந்திப்பில் எடுத்துக் கொள்ளப்பட்ட்து. இதன்படி இரு நாட்டு கடற்படை கப்பல்களும் மற்றைய நாட்டு துறைமுகங்களுக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்யுமென்றும் எல்லை விவகாரங்களில் கூட்டு நடவடிக்கைகளை அவைகள் மேற்கொள்ளுமென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், புதிய தொழில்துறை நடவடிக்கைகள், பிராந்திய அரசியல் முன்னேற்றங்கள் போன்றவைகளும் இந்த ஆறு நாள் விஜயத்தில் ஆராயப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுகோஸ்லாவியா–அமெரிக்கா இராஜதந்திர உறவுகள் புதுப்பிப்பு

(15.10.2000)

யுகோஸ்லாவியாவுடன் இராஜதந்திர உறவுகளை அமெரிக்கா மீண்டும் ஏற்படுத்தப்போவதாகத் தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் பில்கிளின்டனின் பல்க்கன் பிராந்திய விசேட தூதுவர் ஜேம்ஸ்

ஓபிறையன் யுகோஸ்லாவிய புதிய அதிபர் வொஜிஸ்லாவ் கொஸ்தோனிச்சாவை கடந்த புதனன்று சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதன்பின் மேற்கண்ட அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கடந்த வருடம் நேட்டோ படைகள் யுகோஸ்லாவியா மீது விமானத் தாக்குதல்களை நடாத்தியதை தொடர்ந்து இரு நாட்டு உறவுகளும் விரிவடைந்தன. புதிய அதிபர் பதவியேற்றதன் பின்னர் தனது பேச்சில் சர்வதேச நாடுகளுடன் உறவுகளை தாம் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப்போவதாகக் கூறினார். அமெரிக்காவுக்கும் யுகோஸ்லாவியாவுக்குமிடையே பாரிய பிளவுகள் ஏற்பட்டுள்ளது என்று கூறிய கொஸ்தோனிச்சா தொட-ர்ந்த பேச்சுக்கள் மூலம் அப்பிளவு நீக்கப்படும் என்றும் கூறியிருந்தார். இதற்கிடையே அமெரிக்க பிரதிநிதி புதிய அதிபருடன் சுமார் 90 நிமிடங்கள் பேச்சு நடாத்தினார். இதன்போது, அமெரிக்க விமானங்களின் பயணத் தடை அகற்றப்பட்டது என்றும், யுகோஸ்லாவியாவுக்கான உலக வங்கி உதவித்தடைகளை அமெரிக்கா நீக்கியுள்ளதென்றும் அறிவித்தார். அத்துடன் சேர்பியாவின் சிதைவடைந்த கட்டிடங்களை மீளப் புதுப்பித்து உண்மையான ஜனநாயக சமுதாயம் ஒன்றினை ஏற்படுத்த அமெரிக்கா எப்போதும் சேர்பியாவுடன் இணைந்து செயற்படுமென்றும் தெரிவித்துள்ளது.

உகண்டாவில் எபோலா பரவலால் ஆபத்து

(16.10.2000)

உகண்டாவின் வடபகுதியில், 'எபோலா வைரஸ்' தாக்கத்தினால் இதுவரை 33 பேர் மரணமடைந்துள்ளனர். திங்களன்று வரை 63 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

உகண்டாத் தலைநகர் கம்பாலாவில் இருந்து வடக்கே குலு எனும் நகரப் பகுதியிலேயே இந்த மரணங்கள் அதிகளவில் சம்பவித்துள்ளன. எபோலா வைரசினால் தாக்கப்பட்டவர்கள் தப்புவதில்லையென்று கூறும் வைத்தியர்கள், சில நோயாளிகள் ஆச்சரியப்படத்தக்க வகையில் உயிர் பிழைத்துள்ளனர். இது எப்படி என்பது புரியாததொன்றாகவே உள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். 1976ம் ஆண்டு கொங்கோவில் இவ்வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் இருந்து இது எபோலா எனும் ஆற்றின் பெயர்கொண்டு அழைக்கப்படுகின்றது. 1995ம் ஆண்டு கொங்கோவில் இந் நோயினால் 245 பேர் மரணமடைந்தனர். அதன் பின் 97ம் ஆண்டு மீண்டும் இந் நோயின் காரணமாக 10 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய இராணுவத் தளபதி போராளிகளால் கைது!

(15.10.2000)

லெபனானில் தளமமைத்து செயற்படும் ஈரானிய ஆதரவு ஹிஸ்புல்லா போராளிகள் அமைப்பின் தலைவர் செய்யத்ஹசன் நசபுல்லா தமது அணியினர் இஸ்ரேலிய இராணுவத்தின் தளபதியொருவரை கைது செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஹிஸ்புல்லா அமைப்பின் இராணுவ பிரிவான இஸ்ரேலிய எதிர்ப்பு அமைப்பு இஸ்ரேலிய பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றும் அதிகாரி தரத்திலான ஒருவரைக் கைது செய்துள்ளது. இது பற்றிய செய்திகள் பின்னர் வெளியிடப்படும் என்று அமைப்பின் தலைவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய சிறைகளில் வாடும் பாலஸ்தீன லெபனான் இளைஞர்களின் குடும்பத்தினருக்கு இனிப்பான இரண்டாவது செய்தி. இந்த இராணுவத்தினரின் விடுதலையுடன் இளைஞர்களின் விடுதலை இணைக்கப்பட்டுள்ளது என்று கூறிய ஹிஸ்புல்லா தலைவர் இஸ்ரேல் தனது தளபதியை தேடட்டும் என்றும் கூறியுள்ளார்.

மரண அறிவித்தல்

மலர்வு: 17.09.1947 உதிர்வு: 13.10.2000

அமரர் சதாசிவம் சந்திரலேகர்

(ஓய்வுபெற்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பரிசோதகர்)

ஜெனீவாவில் வசித்தவரும், அம்மினிபாதி கரணவாய் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவருமான **சதாசிவம் சந்திரலேகர்** அவர்கள் 13.10.2000 அன்று மாரடைப்பால் மரணமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பரிசோதகராவார். இவர் காலஞ்சென்ற திரு. சதாசிவம், திருமதி கனகம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வரும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், பாபு, ரமணன், கண்ணன், சுகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கிளி (ராஜா), தேவன், மதி, இராசாத்தி, தேவி, கௌரி, காலஞ்சென்ற ரூபா, ராதா ஆகியோரின் அன்புச் சகோதரரும். கௌரி, கிருஸ்ணா ஆகியோரின் அன்பு மாமனாரும், சோனியா, தனுசாந், அபிராம் ஆகியோரின் பாசமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் எதிர்வரும் 18.10.2000 புதன்கிழமை அன்று மதியம் 1.45 மணிக்கும் 3.45 மணிக்கும் இடையில் 13Chemin du Bois de la Bâtie, 1213 Petit - Lancy யில் அமைந்துள்ள CENTRE FUNERAIRE DE SAINT - GEORGE இல் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிகத் தொடர்புகளுக்கு:
தேவன்- 079 330 63 70
பாபு - 022 732 05 82 / 078 609 75 42 / 078 760 35 78
முகவரி:- Mrs. R.Sandralegar Rue de Fribaurg - 6 CH - 1201 Geneva.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்



அமெரிக்க யுத்தக் கப்பல் மீது தாக்குதல்! 17 படையினர் பலி

(15.10.2000)

யேமன் நாட்டின் தலைநகர் ஏடனின் துறைமுகத்தில் எரிபொருள் நிரப்ப வந்த அமெரிக்க கடற்படையின் அதி நவீன யுத்தக் கப்பல் ஒன்றின் மேல் தற்கொலைத் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதல் கடந்த வியாழன்று மதியம் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் 17 கடற்படையினர் கொல்லப்பட்டு 30 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் அநேகமானோர் விசேட விமானம் மூலம் ஜேர்மனிக்கு மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வெள்ளியன்று அதிகாலை மற்றொரு நகரான கானாவில் அமைந்துள்ள பிரித்தானிய தூதரகத்தின் மேலும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதன் போது யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் கட்டிடம் சேதமடைந்துள்ளது.

அமெரிக்காவின் அதி நவீன யுத்தக் கப்பல்களில் Mss.Col, புதிய ரக ஏவுகணைகள், ராடார்கள், பீரங்கிகள் போன்றவற்றைக் கொண்ட ஒன்றாகும். இதில் 300 பேர்வரை இருந்துள்ளனர். கரையை நோக்கி கப்பல் நகர்வதற்குப் பல சிறு படகுகள் ஈடுபடுத்தப்பட்டதாயும், இத் தருணத்தில் வெடிமருந்துடன் வந்த ரப்பர் படகொன்றே கப்பலுடன் மோதியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தாக்குதலால் கப்பலின் இயந்திர அறைப் பகுதியில் பாரியதுளை ஏற்பட்டு கடல் நீர் புகுந்துள்ளது. ஆனால், மாலுமிகள் தீவிரமாக ஈடுபட்டு நீரைத் தடைசெய்துள்ளனர். இத்தாக்குதலுக்காகச் சுமார் அரைத்தொன் வெடிப்பொருட்கள் பாவிக்கப்பட்டிருக்கலாமென்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, இக்குண்டுத் தாக்குதலுக்கான பொறுப்பு, ஆப்கானில் தங்கியுள்ள ஒசாமா பின் லாடெனின் குழுவினர் தான் என்று தெரிவித்துள்ளது. பல விசேட புலனாய்வுக் குழுக்கள் யேமனுக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈரான் அமைச்சர் விமானம் மூலம் பாக்தாத் வருகை

(15.10.2000)

ஈரானின் வெளியுறவு அமைச்சர் கமால் கராஷி, ஈரானிய விமானம் சேவை நிறுவனத்தின் விமான மூலம் பாக்தாத்துக்கு வெள்ளியன்று வந்துசேர்ந்தார். ஈராக்கியத் தலைநகரில் விமான நிலையம் மீளத் திறக்கப்பட்டதன் பின் வந்த முதலாவது இராஜ தந்திர விமானம் இது வென்பதும், பத்து ஆண்டுகளின் பின் ஈரானிய உயர் அமைச்சர் ஒருவர் ஈராக் வருவதும் முக்கியத்துவமானது. மனிதாபிமான உதவி விமானங்கள் மட்டும் ஈராக் வந்து செல்லலாமென ஐ. நா. சபை கூற, அரச தலைவருடன் விமானமொன்று தடையை மீறிப் பறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பாக்தாத் வந்திறங்கிய ஈரானிய அமைச்சரை ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் மொகமத் அல் 'சகாப் மற்றும் உயர் அரச அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றனர். பாக்தாத் வந்து சேர்ந்த அமைச்சர் இரு நாடுகளுக்குமிடையே இன்னமும் உள்ள பிரச்சினைகள் குறித்தும், பரஸ்பர நல்லுறவுக்ளை வளர்த்துக் கொள்ளவும், வர்த்தக ரீதியான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவும் பேச்சுக்கள் மேற்கொள்ளப் போவதாகக் கூறினார்.

ஈக்குவடோரில் வெளிநாட்டவர் கடத்தப்பட்டனர்

(15.10.2000)

ஈக்குவடோர் நாட்டின் அமேசன் காட்டுப் பகுதியில் எண்ணெய் வயல் பகுதியில் வைத்து உலங்குவானூர்தி ஒன்றில் ஏற முயன்ற பத்து வெளிநாட்டுப் பிரஜைகளை ஆயுதம் தாங்கிய குழுவினர் கடந்த வியாழன்று கடத்தியுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. இங்குள்ள எண்ணெய் வயல் பகுதியில் இடம்பெற்றுவரும் வேலைகளைக் கண்காணிக்க வந்த ஆறு அமெரிக்கர், இரண்டு பிரெஞ்சுப் பிரஜைகள், ஒரு சீலியர், ஒரு ஆர்ஜென்டீனியரே கடத்தப்பட்டுள்ளனர். இவர்களது உலங்குவானூர்தியும் தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படைகளே இக்கடத்தலுக்குப் பொறுப்பேற்றுள்ளன என்றும் கூறப்படுகின்றது. கொலம்பியாவிற்கு அமெரிக்கா போதைப் பொருள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக 1.3 பில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது. இந் நிதியை கொலம்பியா போராளிகளுக்கெதிராகப் பயன்படுத்தும் என்றும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே மேற்கண்ட கடத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட கடத்தல் சம்பவத்துக்கும், தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று 'Farc' எனும் கொலம்பிய புரட்சிகர இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பம்

(16.10.2000)

மத்திய கிழக்கில் தொடரும் பதட்ட நிலையை தணித்து மீண்டும் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முன்னோடியாக சர்வதேசம் கோரிய மாநாடு, எகிப்திய நகரான சர்ம் அல் சேர்க்கில் ஆரம்பமாகியது. இம் மாநாட்டில் அமெரிக்க அதிபர் பில்கிளின்டன், ஐநா. பொதுச் செயலர் கோபி அனான், ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜாலியர் சொலானா போன்றோர்களும், பாலஸ்தீன் அதிகார சபையின் தலைவர் யாசீர் அரபாத், இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக் போன்றோர்களும் கலந்து கொள்கின்றனர். எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் இம் மாநாடு நடத்தப்படவேண்டுமென நீண்ட நாட்களாகவே அழைப்பு விடுத்திருந்தாலும் பாலஸ்தீன, இஸ்ரேல் தலைவர்கள் தாம் இனிமேல் சமாதானப் பேச்சுக்களில் சந்தித்துக்கொள்ளப் போவதில்லையென பிடிவாதமாக இருந்தனர்.

இந்நிலையில் பிராந்தியத்தின் நிலை மிக மோசமாகி வருகையில் அதனை தணிக்க உடனடியான பேச்சுக்கள் அவசியமென சர்வதேச நாடுகளால் வலியுறுத்தப்பட்டது. ஐ.நா. பொதுச் செயலர் கடந்த ஒருவார காலமாக மத்திய கிழக்கில் தங்கியிருந்து மாநாட்டுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார். ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோவ் ஜனாதிபதியின் விசேட அறிக்கையுடன் இஸ்ரேலுக்குச் சென்றார். இவ்வாறு பலதரப்பாலும் கோரப்பட்ட மாநாடு இப்போது ஆரம்பமாகியுள்ளது. இம் மாநாட்டில் ஜோர்தான் மன்னர் அப்துல்லா மற்றும் வேறு சில மத்திய கிழக்குத் தலைவர்களும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம் மாநாட்டில் பாலஸ்தீனத்தில் இடம்பெற்ற இஸ்ரேலியத் தாக்குதல்களுக்குச் சர்வதேச விசாரணைக்குழு அமைக்கப்படவேண்டும் என்று பாலஸ்தீனத் தூதுக்குழுவினர் வலியுறுத்துவார்கள் என நம்பப்படுகின்றது.

விமான கடத்தல்காரர்கள் ஈராக்கில் கைது

(15.10.2000)

சவுதி அரேபியாவின் ஜித்தாவில் இருந்து இங்கிலாந்து நோக்கிப் பறந்து கொண்டிருந்த சவுதி அரேபியன் விமான நிறுவனத்தின் போயிங் 777 ரக விமானம் நடுவானில் வைத்து கடந்த சனியன்று கடத்தப்பட்டது. இவ் விமானத்தில் 95 பயணிகளும் 16 சிப்பந்திகளுமாக 111 பேர் பயணம் செய்தனர். இவ் விமானத்தை நான்கு சவுதி அரேபியர்களும், ஒரு எதியோப்பியரும் இணைந்து கடத்தினர். இவர்களில் ஒருவர் தாம் ஈராக் செல்ல விரும்புவதாயும், அப்படி விமானம் திசை திருப்பப்படாது விட்டால் தாம் விமானத்தை தகர்க்கப் போவதாயும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து விமானம் ஈராக் தலைநகர் பாக்தாத் 'சதாம் சர்வதேச விமான நிலையத்தில்' இறக்கப்பட்டது. அங்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடான ஈராக்கில் தாம் அரசியல் தஞ்சம் கோருவதாகவும், ஈராக்கிய மக்கள் நெடுங்காலப் பொருளாதாரத் தடைகளால் படும் கஸ்டங்களை மக்களுக்கும், சவுதி அரசுக்கும் புரியவைக்கவே விமானத்தைக் கடத்தியதாயும் கடத்தல்காரர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கிடையே ஈராக் கடத்தல் காரர்களைக் கைது செய்து பயணிகளை எந்தவித ஆபத்துக்களுமில்லாமல் விடுவித்துவிட்டதாக அறிவித்துள்ளது.

தென்னிந்தியத் திருத்தலச் சுற்றுலா

எதிர்வரும் ஆண்டு (2001) கோடை விடுமுறையை இந்தியாவில் கழிக்கும் வகையில் இரண்டு திருத்தலச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களைக் கண்டு, கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் ஆகிய திருத்தலங்களைத் தரிசித்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, மேல்மருவத்துர் அம்மா பங்காரு அடிகளார், கேரளாவில் உள்ள அம்மா அமிர்தானந்தமகி, புட்டபர்த்தி பகவான் சத்திய சாயிபாபா ஆகிய மகான்களின் அருளாசி பெற்றுவருவோம்.

காணும் இடங்கள்:

மேல் மருவத்தூர்
பாண்டிச்சேரி, ஆரோவில்
சிதம்பரம், சீர்காழி
திருநள்ளாறு, நாகூர், வேளாங்கன்னி, தஞ்சாவூர்
கும்பகோணம்
ஸ்ரீரங்கம்
திருச்சி
மதுரை
பழமுதிர்ச்சோலை
திருப்பரங்குன்றம்
திருச்செந்தூர்
கன்னியாகுமரி
பழனி
திருவனந்தபுரம்
குருவாயூர்
மைசூர்
பெங்களூர்
புட்டபர்த்தி
திருப்பதி
திருத்தணிகை
காஞ்சிபுரம்
மகாபலிபுரம்
சென்னை

மேலும் டி.வி.யில் பேட்டி, எம்.ஜி.ஆர். திரைப்பட நகரம் காணல், சினிமா நட்சத்திரங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் அறிமுகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மொத்தக்கட்டணம் 9950 பிராங்குகள் மட்டுமே.

(குழந்தைகளுக்குத் தள்ளுபடி உண்டு)

இதில் முதல் 15 நாட்களுக்கு விமானக் கட்டணம், சொகுசுப் பேருந்து வண்டியில் திருத்தலப் பயணம், உணவு, தங்கும்வசதிகள், ஆலயங்களில் விசேட தரிசனக் கட்டணங்கள் ஆகியவை அடங்கும்.
இதனைத் தொடர்ந்து மீதி உள்ள நாட்களில் உங்கள் சொந்தப் பொறுப்பில் இந்தியாவில் தங்கியிருந்து வரலாம்.

முதல் பயணம்:		இரண்டாம் பயணம்:	
புறப்படும் நாள்:	30.06.2001 சனி	புறப்படும் நாள்:	31.07.2001 செவ்வாய்
திரும்பி வரும் நாள்:	29.07.2001 ஞாயிறு	திரும்பி வரும் நாள்:	01.09.2001 சனி
அல்லது	05.08.2001 ஞாயிறு	அல்லது	02.09.2001 ஞாயிறு

கோடை விடுமுறையை முன்னிட்டு விமானத்தில் இடம் கிடைப்பது கடினம். ஆகையால், மிகக் குறைந்த இடங்களே ஏற்பாடு செய்யப்படுகின்றது. அதனால் காலம் தாழ்த்தாது உடனே உங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: ஐரோப்பிய ஒன்றியக் கழகம்,
6 Rue Démarquay, Paris - 10 (Métro: Gare du Nord)
தொலைபேசி: 01 42 05 48 11 / 06 09 90 33 39 / 01 34 24 12 82 Pub.Fr.

ஆறே மாதங்களில்
கணினியை சரளமாக கையாள
Senith Computer Institute
★ சுவிற்சர்லாந்தில் கணிணி கல்விநிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
★ கணிணி அறிமுக வகுப்புக்கள் கட்டணமின்றி அமர்வுகளுடன் ஆரம்பமாகி 8 மாதகாலம் தொடர்ந்து நடைபெறும்.
★ மத்தியதர, உயர்தர [9-16 வயது] வகுப்புக்கள்
தொடர்புகளுக்கு: Senith Computer Institute
Militar str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60 Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

Palm Beach
RESTAURANT
10%OFF
ALL TAKE
AWAY ORDERS
P.Sivarupan
Proprietor

17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

ARCHIE'S
Audios - Videos - CD's
Whole Salers & Retailers
205 Edgware Road,
Colindale,
London NW9 6LY
T.P: 0181-205 3652

உங்களுக்குத் தேவையான
மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள்,
சஞ்சிகைகளுக்கு
KANNA
Euro Enterprises
198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate,
N6 5BB, London.
T. Phone- 0181-3483356

ஈழமுரசு
Eelamurasu Weekly

பிரித்தானியாவிற்கான சந்தாக் கட்டணத்தினை (வருடம் ஒன்றிற்கு £60, 6 மாதங்களுக்கு £32) செலுத்துவதன் மூலம் ஈழமுரசு உங்கள் வாசல் தேடி வருவதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பிரித்தானிய வணிகம்

பிரித்தானியா நாட்டிற்கான விளம்பரங்களை ஒரே பக்கத்தில் பிரித்தானியப் பதிப்பில் 'பிரித்தானிய வணிகம்' என்ற பகுதியில் இடம் பெறுவதற்கான விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. குறைந்த கட்டணத்துடன் விளம்பரப்படுத்த இப்பகுதி உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றது.

உங்கள் விளம்பரம் தொடர்பான தேவைகளுக்கு நாடுங்கள்
EELAMURASU (அஞ்சல் வழி)
5, Saxony Parade, Hayes,
UB3 2TQ
Fax/Tel: 0181-56 16 877

சிறிய வரி விளம்பரங்களுக்கு £5 மட்டுமே!

ஜெயந்தன் Tel: 0956908145
ஹரி Tel: 07887874177
பாஸ்கரன் Tel: 07811040188

ASIAN FUNERAL DIRECTORS
24 மணிநேரச் சேவை

அமரத்துவம் அடைந்தவர்களது இல்லங்களுக்கான பிரத்தியேக விஜயங்கள், அமரர்களைக் குளிப்பாட்டுதல் - ஆடை அணிவித்தல் - அஞ்சலிக்கு வைத்தல், வார இறுதி ஈமக்கிரியைகளுக்கான ஒழுங்குகள், மலர் வளையங்களுக்கான ஒழுங்குகள், மதச் சடங்குகளுக்கான ஒழுங்குகள் ஆகியவற்றுடன் அமரர்களின் பேழைகளைச் சர்வதேச ரீதியில் காவிச்செல்லும் பணி.
LONDON 0800 026 2335
MIDLANDS **0800 026 2334**
F·O·S
Part of the SCI Group of Funeral Directors
Member of the Funeral Ombudsman Scheme and the Funeral Standards Council
Pub Lon

A.J
VIDEO & AUDIO
A.J. VIDEO & AUDIO
Leading Agent for:
Tamil videos, Audios, CDs,
Sri Lankan News papers,
Tamil magazines
14, Loampit hill, Lewisham London SE13 7SW
Contact:
VASANTHAN & SUGNTHAN
Tel: 0181-694-6653

SHASME
Super Store
இலங்கை இந்திய மளிகைச் சாமான்கள்
வீடியோ, ஓடியோ, CD, சஞ்சிகைகள்,
பத்திரிகைகள், மரக்கறி வகைகள், கடல்
உணவுப்பொருட்கள் Gnanam Phone
Card அனைத்தையும் பெற்றுக்கொள்ள
Birmingham த்தில் ஒரே தமிழ்க்கடை
211, Lady Pool Road,Balsall Heath,
Birmingham B 12, 8 LG
Tel No: 0121-4465896

MEGA STARS MUSICAL SHOW
SOUTHERN SPICE
[a joint venture by Radaan Mediaworks [I] Ltd and AMEC]
BY

'சித்தி' ராதிகா
மற்றும்
அர்ஜுன், சிம்ரன், மனிசா கொய்ராலா, ஜோதிகா, மீனா, அபாஸ் மற்றும் சூர்யா.
சரத்குமார்
நகைச்சுவை – விவேக், செந்தில்
உங்கள் அபிமான பாடகர்கள்
மனோ, சுஜாத்தா, ஹரனி, உன்னிமேனன், மால்குடி சுபா, 'சகலக பேபி' வாசுந்தரா மற்றும் குழுவினர்
Thrilling dances by Raju Sundaram and his team of colourful dancers
at
WEMBLEY ARENA on 21st OCTOBER at 7 p.m
TICKETS
Wembley Hotline Telephone Number: 020 8795 9555 and 01344 638 572 - 01344 874 727
Wembley ARENA
£20, £30, £ 50, £ 100
[Four family tickets for £ 100 in £ 30 enclosure]
SOUTHERN SPICE

ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

நொண்டி - நொண்டி எத்தனை காலம் ?

சின்னஞ்சிறு நாட்டில் 196 சொற்ப உறுப்பினர்களுக்காக 5048 பேர் போட்டியிட்டு சிறீலங்காவின் ஜனநாயக வரலாற்றை உலகம் கேலியாகப் பார்த்த தேர்தல் 'ஆட்டங்க'ளெல்லாம் ஆடி ஓய்ந்துள்ளன. பல தசாப்தங்களாகத் தமிழ் மக்களின் உரிமைகளைக் காலடியில் போட்டு மிதித்த சிங்கள தேசத்தின் சின்னதும் பெரியதுமான அரசியல் கட்சிகள் பல இத் தேர்தலை ஏட்டிக்குப் போட்டியான வன்முறைகளை விதைத்து, தேர்தல் முடிவுகளை அறுவடையும் செய்துள்ளனர். இத் தேர்தலை கண்காணிக்கவென ஐரோப்பாவிலிருந்து வந்து குதித்த கண்காணிப்புக் குழுவினர் தேர்தல் ஜனநாயக நடைமுறையில் ஏற்றுக்கொள்ளமுடியாத வன்முறைகள் நிகழ்ந்ததற்கும், மக்களின் விருப்பத்தை முற்றிலும் வெளிப்படுத்தாத தேர்தல் இதுவென்ற சான்றிதழையும் வழங்கிமேலும் பெருமை சேர்ந்துள்ளது. யுத்த முனைப்புக்களோடு தமிழர் தாயகத்தை அழித்தே தீருவதென்று குரலெழுப்பிய பேரினவாதி ஒருவரை முதன்மைப்படுத்திப் பொதுஜன ஐக்கிய முன்னணி ஒரு பக்கமும், மறுபக்கம் தமிழ் மக்களுக்கு எள்ளளவு உரிமைகளேனும் வழங்கப்படக்கூடாதென்ற முனைப்புடன் செயலாற்றும் ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தத் தேர்தல் ஓட்டத்தை முடித்துள்ள போதிலும், சில முண்டுகொடுப்புக்களோடு பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியலே இனிமேல் தொடரப் போகின்றதென்னும் 'கதை'யுடன் தேர்தல் முடிவுகள் வெளிவந்துள்ளன. இந்தப் பங்காளிகளின் ஆசனங்களின் 'பிச்சை'யில் நகர முனையும் இந்த அரசு என்னும் எவ்வளவு காலத்திற்குத் தாக்குப்பிடிக்குமென்பது சிறீலங்காவின் குடிமக்களுக்கே வெளிச்சமாகட்டும்.

இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், பேரினவாதம் பேசியபடி களத்தில் குதித்த சிறிய கட்சிகள் மக்களின் வாக்கு வங்கிகளினால் நிராகரிக்கப்பட்டபோதும், பெரும் பேரினவாதிகளான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, தினேஸ் குணவர்த்தன போன்றவர்களின் தலைமைத்துவங்கள் சிங்கள மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சிறிய கட்சிகளில் பேரினவாதம் செய்வதைப் பார்க்கிலும், நிறுவனமயப்படுத்தப்பட்ட பேரினவாதக் கட்சிகளையே தமிழ் மக்களை ஒடுக்கிவிடக் கூடியவர்களென்ற சிங்கள மக்களின் எண்ணம்கூட இந்த வெற்றிக்குச் சாதகமாக இருந்திருக்கலாமென்பதும் மறுக்கமுடியாது. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் வாக்குகளின் மூலம் ஒரு ஆசனத்தைக்கூடப் பெறமுடியாத சிகல உறுமயக் கட்சிக்கு சிறீலங்காவின் விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவப்படி தேசியப் பட்டியலில் ஒரு இடம் கிடைத்ததுதான்.

தேர்தல் முடிந்துவிட்டது, இனியென்ன பேரம் பேசுதல்களோடும் எலும்புத் துண்டுகளை வீசி எறிதலோடும் இந்த அரசு நொண்டி நொண்டி நடைபோடப்போகின்றது. ஏற்கனவே பொதுஜன முன்னணியென்ற பெயரோடு ஆறுஆண்டுகாலம் அரசியல் வக்கிரங்களை வியாபாரம்செய்த அதே கதைதான், இனிமேலும் நடந்தேறப் போகின்றது. அதேவேளை,தமிழர் தாயகத்தின் மீதான இந்தப் பேரினவாதிகளின் யுத்தமும் இன்னும் முனைப்பாகத்தான் நகரப்போகின்றது. மொத்தத்தில் சிறீலங்காவில் நடைபெற்றுமுடிந்த இந்தத் தேர்தல் அதன் பாரம்பரியப் பேரினவாத ஓட்டத்திலிருந்து எள்ளளவேனும் குறையாது தனது பாராளுமன்றக் கோடு வரை நீண்டிருப்பதென்னவோ உண்மைதான்.



பார்வை

ஆட்டம் தொடருமா?

சிறீலங்காவின் தேர்தல்கள் பல்வேறான அரசியல் சமிக்ஞைகளை உலகுக்கு அனுப்பியுள்ளன. இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்கும் இடையேயுள்ள சமநிலை, புதிய சக்தியாக உருவெடுக்கும் ஜே.வி.பி பற்றிய சந்தேகங்கள், தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டு கேலிக்கிடமான முறையில் தெரிவாகியுள்ள பிரதிநிதிகள் எனப் பல அம்சங்கள் உலகின் பார்வையில் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கும்.

புதிய பாராளுமன்றம், முன்பு சந்திரிகா – நீலன் கும்பலால் ஆடப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தம் என்ற ஆட்டத்தை மீண்டும் ஆடுவதற்கு ஏற்புடைய சமநிலையைக் கொண்டதல்ல. பௌத்த பிக்குக்களின் சம்மதத்துடன் மட்டுமே அரசமைப்பை திருத்துவோம் எனப் பகிரங்கமாகவே சொன்ன பிரதமரும், அரசமைப்பு சீர்திருத்தத்தை எதிர்ப்போம் என்பதில் உறுதியாகவுள்ள ஐ.தே.க.வும் பாராளுமன்றத்தில் உள்ளன. புதிய சக்தியான ஜே.வி.பி. அரசமைப்பு சீர்திருத்தம் என்ற ஆட்டத்தில் பங்கேற்கத் தயாராகவில்லை என அறிவித்துவிட்டது.

மறுபுறம் நோர்வேயை வேண்டாம் என தேர்தல் பரப்புரைக் காலத்தில் அறிவிப்புச் செய்த பிரதமர், மீண்டும் நோர்வேயுடன் பேசுவது சிங்களத்தின் சர்வதேச உறவுக்கு முக்கியமானது என்ற நெருக்குவாரம் காரணமாக குத்துக்கரணம் அடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் போது, ஏற்கனவே நோர்வேயின் பாத்திரம் பற்றிய அதிருப்திகளைக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்ச போன்ற அரசின் பெருந்தலைகள் புதியதொரு கூட்டணிக்கு முயல்வார்கள் என்ற ஊகம் பலதரப்பிலும் காணப்படுகின்றது. தாயாரை 'டம்மி' பிரதமராக அமர்த்தி காய்களை நகர்த்திய சந்திரிகா, தற்போது 'டம்மியாக இருந்தாலும் தீவிர இனவாத விசுவாசம் கொண்ட' பிரதமர் மற்றும் சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கும் மகிந்த ராஜபக்ச போன்ற அமைச்சர்கள், கதிர்காமர் போன்ற அடிவருடிகள், முஸ்லீம் காங்கிரசின் நிபந்தனைகள் என்ற சிக்கல்களுக்கிடையே தான் காய்களை நகர்த்த வேண்டும்.

சந்திரிகாவைப் பொறுத்தவரை இக் காய் நகர்த்தல்களின் சிக்கல் தன்மைக்கு இலகுவான தீர்வு, 'தொடர்ச்சியான போரை வெற்றிகரமாக தொடரல்' மட்டுமேயாகும். போரை தொடரும் தீவிர இனவாத முகம் சந்திரிகாவிடம் உண்டு. ஆனால் போரை வெல்லும் திறனை சிங்களம் இழந்து வருவதை அனைத்து அவதானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர் !

★★★

இந்தியா எதிர்ப்பு குரல்களின் வெற்றி

சிறீலங்காவின் தேர்தல் முடிவுகள் பற்றி பல முன்னணி இந்திய ஆங்கிலப் பத்திரிகைகள் ஆசிரியர் கருத்துரை எழுதியுள்ளன. ஆனால் அக் கருத்துரைகள் கொழும்பிலிருந்து எழுதப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட கருத்துக்களையே கொண்டிருந்தன. எந்த இந்திய ஆங்கில ஏடும் தமிழர்களின் தாயக பூமியான திருமலையில் தமிழர்களுக்கு பிரதிநிதிகள் இல்லாமல் போனதை எழுதவில்லை. முல்லைத்தீவு மக்களுக்கு பிரதிநிதிகளை பொலநறுவை - மணலாறு பகுதிகளில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் தேர்வுசெய்ததை எழுதவில்லை.

இந்தியப் பார்வையில் ஜே.வி.பி.யின் வெற்றி முக்கிய இடத்தைப் பிடிக்க வேண்டும். மேலும் அண்மைக்காலத்தில் சந்திரிகா ஆதரவு நிலையை எடுத்தார்கள் என்ற ஊகத்தில் இந்தியாவை பகிரங்கமாக கண்டித்த ஐ.தே.க. இப்போதும் பலமான நிலையில் உள்ளது அவதானிக்கப்பட வேண்டும். அத்துடன் பாகிஸ்தான் உட்பட பல தரப்புக்களுடன் நல்லுறவைக் கொண்ட முஸ்லீம் காங்கிரஸ் புதிய அரசில் முக்கிய பாத்திரம் வகிப்பது இந்திய நலன்களுக்கு எவ்வாறான பாதிப்பை தரும் என்பது ஆராயப்பட வேண்டியது. இந்திய நலன்களுக்கு அல்லது ஏற்புடைய 'பாராளுமன்றக் கலவை' உருவாகவில்லை என்பது பலராலும் உணரப்பட்ட விடயமாகும். சிங்கள உருமய உறுப்பினர் ஒருவரும், ஜே.வி.பியும், பகிரங்கமான இந்திய எதிர்ப்புக் கருத்துக்களை பாராளுமன்றத்தில் 'கக்குவார்கள்' என எதிர்பார்க்கலாம்.

★★★

வீரப்பனிடம் 'அகப்பட்ட' புலி எதிர்ப்பாளர்கள்

தமிழீழ மக்களுக்கு எதிரான பகிரங்கமான பாசிசக் கருத்துக்களை தனது ஆசிரியர் கருத்துரைகள் மூலம் எழுதும் இந்திய செய்தி ஏடான 'தி ஹிண்டு'வுக்கு இப்போது கிடைத்துள்ள ஆயுதம் வீரப்பன் விவகாரமாகும். வீரப்பனுக்கும் - புலிகளுக்கும் தொடர்பு உண்டு என்றும் அதனால் புலிகள் இந்தியாவை உடைப்பதற்கு முயல்கின்றார்கள் எனவும் தி ஹிண்டு எழுதத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டுத் தமிழர்களை புலிகள் கொல்லப் போவதாக கதிர்காமர் கட்டிவிட்ட கதையை அச்சில் படித்த மக்களுக்கு, வீரப்பன் விவகாரம் மூலம் ஹிண்டு குடும்பம் மூளைச்சலவை செய்யப் புறப்பட்டுள்ளது. ஹிண்டுவின் இதே நிலையை தமிழீழத்தை எதிர்க்கும் இந்திய கம்யூனிஸ்ட்டுகளும் சில விசமத்தனமான செய்தியாளர்களும் தொடர்ந்து எடுத்து வருகின்றனர்.

'புலிகளின் மறைமுகக் கரங்கள்?' என்ற தலையங்கத்தில் தி ஹிண்டுவின் முக்கிய செய்தியாளர்– ஆய்வாளர் எனச் சொல்லப்படும் ஜெயந் என்பவர் ஒரு வீரப்பன் விவகாரக் கட்டுரை எழுதினார். பொய்யான தரவுகளுடனும், ஊகங்களுடனும் புலிகளை வீரப்பன் விவகாரத்துடன் தொடர்பு படுத்த 'அந்த' ஜெயந் முற்பட்டுள்ளார். அதே பாணியில் இன்னுமொரு செய்தியாளரான (?) ஜோர்ஜ் என்பவர், வீரப்பன் ஆட்கள் புலிகளின் தேசிய பாடலைப் பாடுவதாகவும், பிரபாகரனை புகழ்வதாகவும் எழுதியுள்ளார். 'அது என்ன பாடல்' என அவர் எழுதவில்லை.

இவர்களது புலி எதிர்ப்பு கோட்பாடுகளுக்கு முகமூடி போடும் அரசியல்வாதியான சுப்பிரமணிய சுவாமி ஒருபடி மேலே சென்று, இத்தாலியும், அமெரிக்காவும் இலங்கையில் காலூன்றிவிட்டன எனவும்,பிரபாகரன் பின்லாடன் என்ற பிரபல இஸ்லாமிய தீவிரவாதியை கண்டு பேசியது அமெரிக்காவுக்கு தெரிந்துவிட்டது எனவும், இனி பிரபாகரனை அமெரிக்கா கவனித்துக் கொள்ளும் எனவும் அளக்கின்றார். அமெரிக்கா இலங்கையில் காலூன்றுவதை மூச்சுள்ளவரை எதிர்ப்பதாகக் கூறும் கம்யூனிஸ்ட்டுக்கள், 'இதனைக் கண்டு கொள்ளாது' வீரப்பன் - நெடுமாறன் - புலிகள் விவகாரத்தை ஆராய்கின்றனர்.

★★★

புலிகள் சிறுவர்களை போருக்கு அனுப்புவதாகக் கூறி பல தமிழ் இளையவர்களை பத்திரிகையாளர்கள் முன் காட்சிப் பொருள் போன்று நிறுத்தும் சிங்கள அரசும் அதன் வெளிவிவகார அமைச்சரும் உலக நிறுவனங்களின் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்களுக்காக கண்ணீர் வடிக்கும் அரசு, சிறுவர்களை காட்சிப் பொருளாக்குவது பிழை என சிறுவர் அமைப்புக்கள் கூறுகின்றன. மறுபுறம் போர்க் கைதிகளாக ஒருவரை கைது செய்தால் அதற்குரிய கௌரவம் கொடுக்கப்பட வேண்டும். இல்லாவிடில் அது உலக உடன்பாட்டு மீறல் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறுகின்றது.

'எல்லாம் தெரிந்த' கதிர், அது பற்றி மூச்சுவிடாது நோர்வேக்கு சென்று, அங்கு தமது பிரதமர் நோர்வேக்கு எதிராகக் கூறியவற்றை மறந்துவிடுமாறு சமாதானக் கொடி பிடித்துள்ளார். சிங்கள அரசின் நலன்களுக்கு சர்வதேசரீதியாக நோர்வே விடயம் தேவைப்படுகின்றது. புலிகள் நோர்வேயுடன் தொடர்ச்சியான நிலைப்பாட்டைப் பேணுகையில், சிங்களம் 'மாறிமாறி' பேசுவதை உலகம் அவதானிக்கின்றது.

யூகோஸ்லாவியாவில் மாற்றங்களை எதிர்பார்க்கும் மேற்குலகு?

அமெரிக்க எதிர்ப்பாளராகவே இவர் இருந்தார். இவர் முழுமையானதோர் தேசியவாதியாவார். கடந்த வருடம் நேட்டோ யூகோசிலாவியா மீது மெற்கொண்ட விமானத் தாக்குதல்களை கடுமையாகக் கண்டித்தவர். அத்துடன் கொசோவோ பிரிவை முற்றாக எதிர்த்து வருபவர். யூகோசிலாவிய கூட்டமைப்பில் இருந்து மொன்டினிகுரோவை விலகவிட முடியாது என்ற கொள்கையில் தீவிரமாக இருந்தவர்.

யூகோசிலாவியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மொன்ரினிகுரோ சுதந்திரம் அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மேற்கு நாடுகள் பின்னணியில் நின்று செயற்பட்டன. ஆனால், கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் மிலோசோவிச் இருக்கும் வரை அது செயற்படுத்தப்பட முடியாது என்பது தெளிவாக இருந்தது. இதே வேளை, சேர்பியாவில் மிலோசோவிச்சின் ஆட்சியை முடக்கி அவரது 'வெளியேற்றத்திற்கான செயற்பாடுகளுக்கும் மேற்கு நாடுகள் பின்னணியில் நின்று செயற்பட ஆரம்பித்தன. ஏற்கனவே பொருளாதாரத் தடைகளால் சிக்கலடைந்திருந்த சேர்பியாவில் ஓரளவிற்கு எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்திருந்தது. இந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணியை தமக்குச் சாதகமாக மேற்கு நாடுகள் பயன்படுத்திக் கொண்டன. இவைகளின் தொடர்ச்சியான நடவடிக்கைளின் விளைவுதான் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமாகும்.

மிலோசோவிச் ஆரம்பத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்து பின்னர் தனது கட்சியை சோசலிசக் கட்சியாக மாற்றிக்கொண்டவர். ஆனாலும், காலத்தின் தேவைக்கேற்ப தன்னை சேர்பியத் தேசியவாதியாகக் காண்பித்துக் கொண்டார். கடந்த காலங்களில் பல தடவைகள் அவரது பதவிக்கு ஆபத்து ஏற்பட்ட போதெல்லாம் அவரைக் காப்பற்றியது இந்த சேர்பிய தேசியவாதப் போர்வைதான். குரோசியாவின் பிரிவின்போதும், பொஸ்னியப் பிரிவின்போதும் அங்கிருந்த சேர்பி

யர்களுக்காக தனது படைகளை அனுப்பியவர் இந்த மிலோசோவிச். பெயரளவில் கூட்டமைப்பின் நன்மைக்காக படைகளை அனுப்பவதாக கூறிக் கொண்ட போதிலும், சேர்பிய நலன்களே அந்த நாடுகளில் காக்கப்பட்டன. பொஸ்னியா, குரோசியா போன்ற நாடுகளில் சேர்பியர்கள் வாழும் பகுதிகளில் ஆயுதக் குழுக்களையும் இராணுவ அணிகளையும் ஏற்படுத்தி அவற்றிற்கு ஆயுத உதவிகளையும் வழங்கியவர் மிலோசோவிச். ஆனால், மேற்கண்ட நாடுகள் பிரிவடைந்தபோது அங்கிருந்த சேர்பியர்களும் துரத்தப்பட்டார்கள். இன்று பல மில்லியன் பொஸ்னிய சேர்பியர்களும், குரோசிய சேர்பியர்களும் சேர்பியாவிற்குள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். மிலோசோவிச்சிற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மிகப்பெரும் ஆதரவினை தற்போது வழங்கியுள்ளவர்களும் இவர்கள்தான். மிலோசோவிச்சின் அதிகாரம் அனேகமான பகுதிகளில் கடுமையாகவே இருந்தன. பல பகுதிகளில் குறிப்பாக, அல்பேனிய எல்லைப் பகுதி, மொன்டினிகுரோ மற்றும் பொஸ்னியா, ருமேனியா போன்றவைக்கு அண்மித்த பகுதிகளில் எல்லாம் நட

ந்து வந்த சட்டவிரோத வர்த்தகங்கள், கடத்தல்கள் போன்றவை இராணுவத்தால் தடுக்கப்பட்டன. இவைகளால் ஏராளமான வர்த்தகர்களது எதிர்ப்பையும் மிலோசோவிச் சம்பாதித்துக் கொண்டார். மிலோசோவிச்சிற்கான பெரும் ஆதரவு பின்னணியாக இருந்தவர்கள் நாட்டின் பாரம்பரிய கிறிஸ்தவ சபையினராவர். இவர்களது தேசிய வாத, தீவிர வாத தன்மைகள் மிலோசோவிச்சின் ஆட்சியை முண்டுகொடுக்க பயன்பட்டன. ஆனாலும் நேட்டோவின் குண்டு வீச்சுக்களின் பின், பாரம்பரிய கிறிஸ்தவத்தின் சின்னங்கள் கொண்ட கொசோவோவில் இருந்து சேர்பியர்கள் துரத்தப்பட்டபோது, அங்கு வசி-த்த சேர்பிய அடிப்படைவாத கிறிஸ்தவ பாதிரியார்களும் அச்சுறுத்தல்களால் வெளியேறிக் கொண்டனர். பின்னர் சேர்பியாவிற்குள் வந்துசேர்ந்த அவர்களை, மிலோசோவிச் சந்தித்தபோது இனிமேலும் அவருக்கு பதவியில் இருக்க தகுதியில்லை எனக்கூறி மிலோசோவிச்சின் இராஜினாமாவை மேற்கோள் காட்டினார்கள். இப்படி பல வகைகளிலும் எதிர்ப்புக்களை சந்தித்திருந்த மிலோசோவிச் தனது அரச பதவிக்காலம் முடிவடைவதற்குள் தேர்தல்களை அறிவித்தது மிகவும் முட்டாள்த் தனமான ஒரு நடவடிக்கையாகும். தனக்கு இன்னமும் ஆதரவு உள்ளன என்ற குறுட்டுத்தனமான ஒரு நம்பிக்கையில் தேர்தல்களை அவர் அறிவித்திருந்தார். இவைகளைத்தான் எதிர்க்கட்சி கூட்டணியும் மேற்கு நாடுகளும் எதிர்பார்த்திருந்தன. அமெரிக்கா மிலோசோவிச்சிற்கு எதிரான 18 கட்சிகளின் கூட்டமைப்பின் தேர்தல் வேலைகளுக்காக 35 முதல் 37 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது. இதேயளவிலான தொகையை ஐரோப்பிய நாடுகளும் வழங்கியிருந்தன என சொல்லப்படுகிறது. இதேவேளை யூகோசிலாவியாவின் எதிர்க்கட்சிகளின் உதவிகளுக்காக மேலும் 105 மில்லியன் டொலர்களை வழங்க அமெரிக்க செனட் சபை தீர்மானம் மேற்கொண்டது. ஆனால் இந்த 18 கட்சி கூட்டமைப்பின் ஒற்றுமையை உதவி வழங்கும் நாடுகள் எதிர்பார்த்தன. இவர்கள் பொதுவாக மிலோசோவிச்சிற்கு எதிரான கொள்கைகளை கொண்டிருந்தபோதிலும் அதனை செயற்படுத்துவதில் திறமைமிக்கவர்களாக காணப்படவில்லை. சேர்பிய அரசினால் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், வேட்பாளரை நிறுத்துவதில் இக்கட்சிகளுக்கிடையே போட்டிகள் ஏற்பட்டன. ஒவ்வொரு கட்சியும் தனது வேட்பாளரை அறிவித்தன. ஆனால் ஒரு பொது வேட்பாளர் மாத்திரமே நிறுத்தப்பட வேண்டும் என்பதில் மேற்கு நாடுகள் உறுதியாக நின்றன. இந்நிலையில் தெரிவு செய்யப்பட்டவர்தான் வோஜிஸ்லாவ் கொஸ்தோநிச்சா.

56 வயதான இவர் பெல்கிரேட் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பேராசிரியராவார். மிலோசோவிச்சிற்கு எதிரான பொது வேட்பாளராக இவர் தெரிவு செய்யப்பட்ட போதிலும் அமெரிக்க எதிர்ப்பாளராகவே இவர் இருந்தார். இவர் முழுமையானதோர் தேசியவாதியாவார். கடந்த வருடம் நேட்டோ யூகோசிலாவியா மீது மெற்கொண்ட விமானத் தாக்குதல்களை கடுமையாகக் கண்டித்தவர். அத்துடன் கொசோவோ பிரிவை முற்றாக எதிர்த்து வருபவர். யூகோசிலாவிய கூட்டமைப்பில் இரு-ந்து மொன்டினிகுரோவை விலகவிட முடியாது என்ற கொள்கையில் தீவிரமாக இருந்தவர். மிலோசோவிச் போர்க்குற்றவாளி என மேற்கு நாடுகளால் கூறப்பட்ட நிலையில் அவரை நெதர்லாந்தில் உள்ள மனித உரிமை நீதி மன்றத்தின் விசாரணைக்காக ஒப்படைக்க வேண்டும் என்ற கூற்றினை முற்றாக மறுத்து வருபவர். இவர் புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார் என கட்சிக் கூட்டணி அறிவித்த போது நாட்டின் அடிப்படைவாத கிறிஸ்தவ சபை தனது முழுமையான ஆதரவை அவருக்கு வழங்கியது. அதேவேளை, கொசோவோவில் இருந்து இடம் பெயர்ந்த சேர்பியர்களும் தங்களது முழுமையான ஆதரவை கொஸ்தோநிச்சாவிற்கே வழங்கினர். இவர் தனது முதலாவது உரையை பெல்கிரேட்டில் வைத்து ஆற்றியபோது தெரிவித்த 'விட

யங்களில் இடம்பெயர்ந்துள்ள கொசோவோ சேர்பியர்களை மீண்டும் கொசோவோவிற்குள் மீளக் குடியேற்றுவதே தனது பிரதான விடயம் என்றார். அத்துடன் நேட்டோவின் பாதுகாப்பு கொசோவோவிற்கு அவசியம் இல்லை என்ற பாணியிலும் அவரது பேச்சு அமைந்திருந்தது. ஏற்கனவே கொசோவோவில் நிலை கொண்டுள்ள சேர்பிய ஆயுதக் குழுக்களுடன் இவரது தொடர்புகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. கடந்த மாதம் இவர் கொசோவோவில் பயணம் செய்தபோது நேட்டோ படையினர் பாதுகாப்பு வழங்க முன்வந்தனர். ஆனால் அவர்களது பாதுகாப்பு தனக்கு அவசியம் அற்றது எனக் கூறி தனது சொந்த பாதுகாவலர்களுடன் பயணத்தை தொடர்ந்தவர். இப்படியானவர் இப்போது யூகோசிலாவியாவின் புதிய அதிபராக உத்தியோகபூர்வமாக பதவியேற்றுள்ளார். மிலோசோவிச்சிற்கு எதிரான ஓர் தலை

மைதான் மேற்கு நாடுகளுக்கு தேவையாக இருந்தே தவிர, அவர் எப்படியானவராக இருக்கவேண்டும் என்பதை மேற்கு நாடுகள் நிர்ணயிக்கவில்லை. இறுதியில் அமெரிக்க நலன்களுக்கு துணைபோக மறுக்கும் ஒருவர் யூகோசிலாவியாவின் ஜனாதிபதியாக தெரிவாகியுள்ளார். இது அமெரிக்காவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் ஏற்பட்டுள்ள முதலாவது அடியாகும். ஆனால் தம்மால் வளர்க்கப்பட்ட எதிர்க் கட்சிகள் தாம் விரும்பிய ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவர்களை திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இம் மேற்கு நாடுகள் இப்போது உள்ளன. ஏற்கனவே மிலோசோவிச் பதவியில் இருந்து அகற்றப்பட்டால் சேர்பியா மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை தாம் அகற்றுவோம் என இவைகள் கூறியிருந்தன. இதனை செயற்படுத்த வேண்டிய நிலையில் இப்போது அங்கு தடைகள் அகற்றப் படுகின்றன. ஆனால், தொடர்ந்தும் இந் நாடுகளின் எண்ணப்படியான நிகழ்வுகள் யூகோசிலாவியாவில் அரங்கேறுமா என்பது கேள்விக்குறி.

இன்று எதிர்க்கட்சி கூட்டணிக்கு 'கொற்றோவிச்சாவிற்கும் ஆதரவு தெரிவிக்கும் சேர்பியர்கள்தான் 91ம் ஆண்டில் வுக்கோவார் பகுதியில் யூகோசிலாவிய கூட்டமைப்பின் டாங்கிகள் நுழைந்தபோது அவைகளின் மேல் பூச்செண்டுகளை எறிந்தவர்கள். அன்று மிலோசோவிச்சின் படங்களை பெரிதாக்கி ஆரவாரமாக கொண்டு சென்றவர்கள்தான் இன்று அதனை போட்டுடைத்துள்ளார்கள். இன்று அரச பதவியை ஏற்றுள்ள யூகோசிலாவிய கூட்டு கட்சிகள் கடந்த காலங்களில் பல தடவைகள் தமக்கிடையே மோதிக்கொண்டுள்ளன. இக் கட்சிகளுக்குள் பல பெரும் வர்த்தகர்களும் தலைவர்களாக உள்ளனர். இவர்கள் தங்கள் பதவிகளை சட்ட விரோத நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக இந்த 18 கட்சி கூட்டணியானது யூகோசிலாவிய கூட்டமைப்பின் நலன்களை முற்றுமுழுதாக பேணுமா என்பது சந்தேகத்திற்கு இடமானது. ஜனாதிபதி கொஸ்தோநிச்சா மட்டும் கூட்டமைப்பின் நலனை காக்கும் நடவடிக்கைகள் பற்றி பேசுவது வேடிக்கையானது. இவர் மேற்கிற்கும் அமெரிக்காவிற்கும் எதிரான போக்கினை கொண்டிருக்கலாம். ஆனால் இவர் அங்கம் வகிக்கும் கூட்டணியில் அமெரிக்க, ஐரோப்பிய ஆதரவு சக்திகள் பலமாக உள்ளன. ஆகவே தலைமைக்கு எதிரான பல நிகழ்வுகள் யூகோசிலாவியாவில் இடம் பெறலாம்.

இன்று தடைகள் நீக்கப்பட்டு பொருளாதார நிலை அந்நாட்டில் சீரமைக்கப்பட்டாலும் பலம் மிக்கதொரு யூகோசிலாவியா எதிர்காலத்தில் இருக்குமா என்பது கேள்விக்குறி. அத்துடன் பல கட்சிகள், பலவிதமான எண்ணங்களுடன் கூடிய தலைவர்கள் தாம் விரும்பிய பக்கம் தலையை திருப்பிக்கொள்ளும் அரசியல்வாதிகள் இவைகளைக்கொண்ட ஓர் கூட்டு அரசு யூகோசிலாவியாவில் அரங்கேறியுள்ளது. இது இங்குவாழும் மக்களின் வாழ்வு நிலையிலோ அல்லது நாட்டின் அரசியலிலோ எவ்விதமான மாற்றத்தை ஏற்படுத்தப்போகின்றது என்பதை நாமும் பொறுத்திருந்து பார்ப்போம்.

— உதயன்

சிறீலங்காவின் புதிய ஆட்சி எவ்வளவு காலம் நீடிக்கும்?

வவுனியாவில் இருந்து தீபன்

பல்வேறு சந்தேகங்களின் நிலைக்களமாக இருந்த தேர்தல்களம் நிச்சயமற்ற, தெளிவில்லாத அரசியல் போக்கிற்கான முடிவுகளையே வெளிப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக எந்த வேளையிலும் சரிந்துவிடலாம் என்ற நிச்சயமற்ற நிலையிலான ஓர் அரசாங்கத்தை சிறு கட்சிகளின் கடும் நிபந்தனைகளுடன் கூடிய ஆதரவோடு அமைக்க வேண்டிய நிலைமைக்குள் பொதுஜன ஐக்கிய முன்னணியும், அதன் தலைவியாகிய சந்திரிகா பண்டாரநாயகாவும் தள்ளப்பட்டுள்ளனர். தேசிய பட்டியல் ஆசனத்துடன் சேர்த்து 4 ஆசன வலிமையைக் கொண்ட முஸ்லிம் காங்கிரசாகிய தேசிய ஐக்கிய முன்னணியினதும், அதேபோன்று 4 ஆசன வலிமையைக் கொண்டுள்ள ஈ.பி.டி.பியினதும் ஆதரவைப் பெற்று பொதுஜன ஐக்கிய முன்னணி, அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மையைச் சம்பாதித்துள்ளது.

இந்தப் பெரும்பான்மை பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு அது கொடுக்க வேண்டிய விலை அதிகமாகவே உள்ளது. புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ,தனக்கு வேண்டும் என்று ஈ.பி.டி.பி பிடிவாதம் பிடிக்க, தமது முன்னாள் தலைவரால் அணிசெய்யப்பட்ட அந்த அமைச்சு தனக்கே தரப்பட வேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியும் முரண்டு பிடித்துக் கொண்டிருந்த ஒரு சூழ்நிலையிலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரண்டாம் கட்ட அரசாங்கம் பதவி ஏற்றது. பொதுஜன ஐக்கிய முன்னணியின் சின்னத்தில் போட்டியிட்டதன் மூலம் பெற்றுள்ள ஆறு ஆசனங்களோடு மரம் சின்னத்தின் கீழ் தேசிய ஐக்கிய முன்னணி தனியாகப் போட்டியிட்டுப் பெற்றுள்ள தேசியப் பட்டியல் ஆசனம் உட்பட 10 ஆசனங்களைத் தனது பங்களிப்பாகக் காட்டும் தேசிய ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவராகிய ரவூப் ஹக்கீம் இதற்குப் பரிகாரமாக இரண்டு அமைச்சுக்களையும், 3 பிரதி அமைச்சுப் பதவிகளையும் கோரியுள்ளார். அது

மட்டுமல்லாமல், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப் போவதில்லை என்றும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே காணப்போவதாகவும் பறைசாற்றிக்கொண்டிருக்கும் பிரதமரின் போக்கிற்கமைய பேச்சுவார்த்தைகளுக்குரிய கதவை இழுத்து மூடக்கூடாது என்பதுடன், விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்பதும் அவருடைய நிபந்தனையாகும். அத்துடன் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய அரசாங்கத்தின் தீர்வுப்பொதியை 100 நாட்களுக்குள் நிறைவேற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் அவருடைய நிபந்தனையாகும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அரசாங்கத்திற்குத் தாங்கள் அளித்துள்ள ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாகவும் அவர் திட்டவட்டமாக வலியுறுத்தி வருகின்றார்.

தேசிய ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி. ஆகிய இரண்டு கட்சிகளின் நிபந்தனைகளுக்கிடையில் இப்போது சிக்கியுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி எவ்வளவு காலத்திற்கு அதிகாரத்தில் ஒட்டியிருக்கப் போகின்றது என்பது பலத்த சந்தேகம் மிக்க கேள்வியாக உருவெடுத்துள்ளது. கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய தேர்தல் மாவட்டங்களில் எண்ணற்ற தேர்தல் மோசடிகளிலும், கட்டுக் கட்டாகக் கள்ள வாக்குகள் போடுவதிலும் ஆளும் கட்சியாகிய பொதுஜன ஐக்கிய முன்னணி ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டி, இந்த மாவட்டங்களின் தேர்தல்களை ரத்துச் செய்ய வேண்டும் எனக்கோரி பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சி, நீதிமன்றத்தின் உதவியை நாடியுள்ளது. இருபத்திநான்கு ஆசனங்களைக் கொண்டுள்ள இந்த 3 மாவட்டங்களில் இருந்து, பொதுஜன ஐக்கிய முன்னணி 13 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதன் காரணமாகவே தாங்கள் அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மை பலத்தைப் பெற முடியாமல் தோல்வியடைந்துள்ளதாகவும் ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அதிகூடிய தேர்தல் வன்முறைகள் இடம்பெற்ற மாவட்டமாக விளங்குகின்ற கண்டி மாவட்டத்தின் தேர்தல் வன்முறைகளிலும், மோசடிகளிலும் கொலைச் சம்பவங்களிலும் ஈடுபட்டமைக்காக பிரதி பாதுகாப்பு அமைச்சராகிய அனுருத்த ரத்வத்தையின் மகன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு கொழும்பில் உளவுப்பிரிவினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இது ஒன்றே தேர்தல் வன்முறைகளிலும், வாக்களிப்பு மோசடிகளிலும் ஆளும் கட்சி ஈடுபட்டிருந்தது என்பதற்கான உறுதியான சாட்சியமாக அனைவராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. காடைத்தனமிக்க வகையில் கள்ளவாக்குகளைத் திணித்தது, எண்ணற்ற தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டது போன்ற பல சம்பவங்களோடு வாக்களிப்பு தினத்தன்று 8 கொலைகளும் நிகழ்ந்துள்ளதைத் தேர்தல் கண்காணிப்பாளர்களும், பொது அமைப்புக்களும் சுட்டிக்காட்டி, இந்தப்பொதுத் தேர்தல் சுதந்திரமானதும், நீதியானதுமாக நடைபெறவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள். இதனை ஏற்றுக்கொண்டுள்ள தேர்தல் ஆணையாளர், 23 வாக்களிப்பு நிலையங்களின் வாக்குகளை நிராகரித்துள்ளதுடன் - முல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளில் அளிக்கப்பட்ட வாக்குகளும் நிராகரிக்கப்பட்ள்ளதாக அறிவித்துள்ளார்.

தேர்தல் மோசடிகள் இடம்பெற்றுள்ளமைக்கு ஆதாரமாகப் பல்வேறு சாட்சியங்கள் காட்டப்பட்ட போதிலும், விகிதாசாரத் தேர்தல் முறைமையின் கீழ் எந்த ஒரு பிரதேசத்தினதும் தேர்தலை ரத்து செய்வதற்குத் தமக்கு அதிகாரமில்லை என்றும், தேர்தலை மீண்டும் நடத்துவதற்குரிய அதிகாரமும், நடைபெற்ற தேர்தலை ரத்துச் செய்வதற்கும் ஜனாதிபதிக்கு மாத்திரமே அதிகாரம் இருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். நேர்மையான முறையில் தேர்தலை நடத்துவதற்குத் தமது அதிகார வரம்புக்குட்பட்ட வகையில் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் 11வது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தலின் 5 வாரங்களைக் கொண்ட பிரச்சார காலம் தொடக்கம் வாக்களிப்பு தினம் வரையிலும், 64 கொலைகளும், ஆயிரத்துக்கும் அதிகமான தேர்தல் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணித்த கண்காணிப்பு குழுக்களும், ஐரோப்பிய கண்காணிப்பாளர்களும், தேர்தல் வன்முறைகளைப் பதிவு செய்த பொலிஸ் பிரிவினரும் தெரிவித்துள்ளனர். இந்த வகையில் ஜனநாயகத்திற்கு அதிகூடிய அச்சுறுத்தல் மிகுந்த பொதுத் தேர்தலாக இந்தத் தேர்தல் பதிவாகியுள்ளது.

இந்தப் பின்னணியில், தள்ளாட்டத்துடன் பதவியேற்றுள்ள அரசாங்கத்தின் உருவாக்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி சட்ட நடவடிக்கையில் இறங்கியிருப்பதை இலங்கையின் வர்த்தக உலகம் பதட்டத்தோடு நோக்கியிருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் திங்களன்று தெரிவித்தன. நாட்டை அச்சுறுத்துகின்ற பல்வேறு அரசியல் பிரச்சினைகள் வரிசையாக அரசின் முன்னால் நிற்கின்ற போதிலும், நாட்டின் பொருளாதார நிலைமை வலுவானதானதாக அமைந்திருப்பதை அரசாங்கம் முதலில் உறுதிசெய்ய வேண்டுமென்று, இலங்கை வர்த்தக சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது. 'பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய கட்சியையுடன் இணைத்து ஒரு தேசிய அரசாங்கத்தை உருவாக்குவதன் மூலம் உறுதியான ஓர் அரசியல் நிலையை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரம் உலகளாவிய ரீதியில் தொடர்ந்து நகர்ந்து செல்லச் செய்ய வேண்டியதே இப்போதைய அவசரம் மிக்க அத்தியாவசியத் தேவையாக உள்ளது' என்று மிகப் பெரிய ஒன்றிணைந்த வர்த்தக நிலையங்களின் தவைராகிய கென் பாலேந்திரா தெரிவித்துள்ளார். 'இதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் உலக ஓட்டத்துடன் இணைந்த பொருளாதாரச் செயற்பாட்டை சிறீலங்கா இழந்து, பொருளாதாரம் மிக மோசமாகப் பாதிக்கப்படும்' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுப் பொருளாதாரத்தின் தேக்க நிலையைப் போக்கவும், வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரவும் தேவையான அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் விடயம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகாவுடன் பேச்சுக்கள் நடத்துவதற்குரிய முயற்சிகளைத் தாங்கள் மேற்கொண்டுள்ளதாகவும் வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தெளிவான பெரும்பான்மை பலத்தை முதலாவது பார்ராளுமன்ற அமர்வின்போதே அரசு நிரூபிக்கத் தவறுமேயானால், அதன் அரசியல் உறுதியற்ற நிலைமையானது புதிய அரசாங்கத்தைப் பாதாளத்தில் தள்ளிவிடும் என்பதில் சந்தேகமில்லை என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

தொகுதிவாரியான தேர்தல் முறையின் கீழ் ஒரு தொகுதியின் தேர்தலில் திருப்தி இல்லையென்றால், அதனை ரத்துச் செய்துவிட்டு மீண்டும் அதனை நடத்த முடியும். அதேபோல, பொதுத் தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உயிரிழக்க நேர்ந்தால், அந்தத் தேர்தல் தொகுதிக்கு இடைத்தேர்தலை நடத்தி புதிய உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளலாம். அதே போல, பொதுத் தேர்தலின் போது குறிப்பிட்ட தேர்தல் தொகுதியின் நடைமுறைகளில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டால், அந்தத் தொகுதிக்கான தேர்தலை ரத்துச் செய்துவிட்டுப் புதிதாக மீண்டும் தேர்தல் நடத்த முடியும். ஆனால், விகிதாசாரத் தேர்தலில் அவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமில்லை என்பதுடன், தேர்தல் ரத்துச் செய்யப்படுவதானால், முழுமையாகவே ரத்துச் செய்யப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி பொதுத் தேர்தலில் இடம் பெற்றுள்ள மோசடிகள், முறைகேடுகள் குறித்து நீதிமன்றத்தில் நியாயம் கோருமேயானால், அந்த வழக்கு எப்போது முடிவடையும், எவ்வாறான தீர்ப்பு கிடைக்கும் என்பதை நிச்சயமாக் கூற முடியாது. தேர்தல் செல்லுபடியற்றதென நீதிமன்றம் தீர்ப்பளிக்குமெயானால், அடுத்த தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்டு, நியமனப்பத்திரங்கள் ஏற்கப்பட்டு பிரசாரத்திற்கான காலம் ஒதுக்கப்பட்டு தேர்தல் நடைபெற்று முடியும் வரையில் நாட்டின் பொருளாதார நிலைமைகள் உறுதியான ஒருநிலையில் பார்த்துக் கொண்டிருக்கமாட்டாது. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் பொறுமையாகப் பார்த்திருக்கமாட்டார்கள். இந்த நிலையில் நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைய நேரிடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான பொருளாதார அழுத்தமும், அரசியல் நெருக்கடிகளும் நிலவுகின்ற இந்தச் சூழ்நிலையில், நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கின்ற நாட்டின் வடக்குப் போர்முனைகளில் எந்த வேளையிலும் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற தீவிரமான யுத்தம் ஆரம்பமாகுமேயானால் நாடு கொந்தளிப்பு நிலையை அடையலாம் என்பதில் சந்தேகமில்லை.

தேசப் புதல்வர்கள் நாள்

மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை. அவர்கள் காலத்தை உருவாக்குபவர்கள். காலத்தின் குறிப்பேட்டில் கால்பதித்துச் செல்பவர்கள். சாவு அவர்களைத் தீண்டுவதில்லை. அவர்கள் காலத்தின் காவியமாக எமது தேசத்தின் ஆன்மாவில் காலமெல்லாம் நிலைத்திருப்பவர்கள்.
– தேசியத் தலைவர்

தமிழீழ விடுதலைக்காக தங்கள் உயரிய உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை கௌரவிக்கும் நவம்பர் மாதத்தில், வெளிவரும் ஈழமுரசு இதழ்கள் அனைத்தும் மாவீரர் சிறப்பிதழ்களாக வெளிவர உள்ளன. அந்த மாவீரர்கள் பற்றிய வரலாறு, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் அந்த மாவீரர்களோடு நீங்கள் பழகியிருந்தால் அவர்களுடனான அனுபவங்களை இந்தச் சிறப்பிதழ்களூடாக நீங்களும் பகிர்ந்துகொள்ளுங்கள்.

தேசத்தின் விடுதலைக்காக காற்றோடு கலந்த கரும்புலிகளும், கடலோடு காவியமான கடற்புலிகளும், மார்பிலே குண்டேந்தி மாய்ந்த மறவர்களும், எதிரியின் பாசறைக்குள் வேவுப்புலியாகி விதையாகிப் போன வீரர்களும் இப்படி எத்தனை எத்தனை வீரர்கள் எம் மண்ணிலே... இவர்கள் சாவினைத் தழுவிக்கொள்ளும் அந்த இறுதிக் கணத்தில் எதனை எண்ணியிருப்பார்கள், யாரை எண்ணியிருப்பார்கள், இந்த தேச விடுதலை பற்றி என்ன கனவு கண்டிருப்பார்கள்...?

உங்கள் பேனாக்கள் திறந்து கொள்ளட்டும்... அந்த வீரமறவர்களின் கனவுகளை, அவர்களின் நினைவுகளை அவை பதிவாக்கட்டும்...

தேசப்புதல்வர்களின் வீரத்திற்கு, இலட்சிய உறுதிக்கு தலைவணங்குவோம்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

ஈழமுரசு - 22, Rue Perdonnet, 75010 Paris, France.

யாழ். குடா மீட்பு ஓயாத அலைகள்-4ல் வீரச்சாவைத் தழுவிக்கொண்டோர்

(15.10.00)

தொடரும் ஓயாத அலைகள்- 4 நடவடிக்கையில்
வீரவேங்கை யாழரசி (ஜோசப் சுதர்சினி - யாழ்.)
வீரவேங்கை மகிழிசை (சின்னத்தம்பி ஜெகதீஸ்வரி - யாழ்.)
வீரவேங்கை எழில்வதனி (இராசு நாகேஸ்வரி - கிளிநொச்சி)
வீரவேங்கை முகிலன்
(சண்முகவேல் தமிழ்ச்செல்வன் - மாத்தளை)
வீரவேங்கை சம்பத் (தர்மலிங்கம் குமணன் - யாழ்.)
வீரவேங்கை சுதர்சன் அல்லது செந்தமிழ்
(தங்கராசா பிரபாசுதன் - புதுக்குடியிருப்பு)
வீரவேங்கை உருத்திரன்
(உருத்திரானந்தம் சிவானந்தன் - கிளிநொச்சி)
வீரவேங்கை அலையமுதன்
(சிவராசா தவச்செல்வன் - முல்லைத்தீவு)
வீரவேங்கை முல்லை (திருநேசன் சசீந்திரன் - கிளிநொச்சி)
வீரவேங்கை கண்ணியவேலன்
(தயாபரன் சுரேந்தர் - ஒட்டுசுட்டான்)
வீரவேங்கை வித்தி (சிவபாலன் சிவானந்தராசா - யாழ்ப்பாணம்)
கப்டன் முத்துவேல் (கந்தப்பு சுகுமார் - யாழ்.)
வீரவேங்கை சரணம் (சிவலிங்கம் சிவமயில் - கிளிநொச்சி)
வீரவேங்கை விழிக்கதிர் (இரத்தினசிங்கம் மலர்விழி - யாழ்.)
வீரவேங்கை தீச்செல்வி (பதுமநிதி முகிந்தா - கிளிநொச்சி)
வீரவேங்கை தமிழ்மொழி (தேவராசா சிறிரஞ்சனி - கிளிநொச்சி)
2ம் லெப். கானரசி (சண்முகதாஸ் சுபாசினி - யாழ்.)
லெப். கலைத்தேவி (செபமாலை மரியான் நிர்மலா - யாழ்)
லெப். ஈகைவேங்கை (தங்கவேல் பக்தகௌரி - கண்டி)
காவல்துறை தலைமைக்காவலர்
பரமு தவச்செல்வன் - யாழ்ப்பாணம்,
சிறப்பு எல்லைப்படை வீரர் மாமா
(சீனித்தம்பி வர்ணகுலசிங்கம் - மட்டக்களப்பு),

ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களாவர்.

இதேவேளை 13.10.2000 அன்று எழுதுமட்டுவாள் பகுதியில் ஏற்பட்ட மோதலின்போது தலைமைக்காவலரான சிவரஞ்சினி என்றழைக்கப்படும் யாழ். மாவட்டத்தை சேர்ந்த சிவஞானம் சிவதர்சினி என்பவரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளார். கல்வயல் பகுதியில் படையினருடனான மோதலில்
வீரவேங்கை செல்வன் (செபமாலை செரஸ்ரீன் - மன்னார்)
வீரவேங்கை மணிமாறன்
(நேசரத்தினம் சசிகரன் - புதுக்குடியிருப்பு)
வீரவேங்கை செல்வி (இராசரட்னம் சுலோசனா - யாழ்.)
வீரவேங்கை வான்முகில்
(கஜேந்திரன் புவனேஸ்வரி - கிளிநொச்சி)
வீரவேங்கை இளம்பிறை
(பத்மஜேசுபாலன் மரீஸ்ரெலாவதி - முல்லைத்தீவு)

ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

கனகம்புளியடிப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில், சிறப்பு எல்லைப்படை வீரர் கந்தையா தங்கராசா பூநகரி என்பவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இதேவேளை ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையில், கடந்த 17.09.2000 அன்று சாவகச்சேரி பகுதியில் பெருமெடுப்பில் முன்னேறிய படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது, மேஜர் கயல்விழி (திருநாவுக்கரசு யோகேஸ்வரி - கிளிநொச்சி), கப்டன் தீம்பொழில் அல்லது சுவர்ணா (சிவராசா செல்வமதி-வவுனியா), 2ம் லெப். ஒளிநிலா (பாலசுப்பிரமணியம் சுபாசினி - முல்லைத்தீவு), 2ம் லெப். சாமினி (முத்துலிங்கம் உசாந்தினி - யாழ்.), 2ம் லெப். சிந்து (சின்னராசா லோகிதா - கிளிநொச்சி), 2ம் லெப். பல்லவி (தங்கராசா திசனா - யாழ்.) ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வு

(15.10.00)

தமிழீழ விடுதலைப் போரில் முதல் மாவீரரான பெண் போராளியான 2ம் லெப் மாலதியின் நினைவு நாளும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளும் வன்னியிலும், மற்றும் மீட்கப்பட்ட பிரதேசங்கள் எங்கும் உணர்வெழுச்சியுடன் நினைவுகூரப் பட்டுள்ளன. கடந்த பத்தாம் திகதி நினைவெழுச்சி நிகழ்வை முன்னிட்டு கலைநிகழ்வுகளும், கருத்தரங்குகளும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் வீதிகளை மக்கள் அலங்கரித்து, எழுச்சி வாசகங்களுடனான பதாதைகளையும் கட்டியிருந்தனர்.

இதேவேளை மட்டக்களப்பிலும் முக்கிய சந்திகள், வீதிகள் எங்கும் சிவப்பு - மஞ்சள் நிறக்கொடிகள் கட்டப்பட்டதுடன் கலைநிகழ்வுகளும், சிறப்புரைகளும் இடம் பெற்றுள்ளன.

கிபீர்-மிக் தாக்குதல்களில் ஐவர் படுகாயம்

(15.10.00)

சிறீலங்கா வான்படையின் கிபிர் குண்டு வீச்சு விமானங்களும், மிக்-27 ரக குண்டு வீச்சு விமானங்களும் நேற்று முல்லைத்தீவில் நடாத்திய தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். நண்பகல் 12 மணியளவிலும் பிற்பகல் 2 மணியளவிலும் மாலை 6.30 மணியளவிலுமாக மூன்று தடவைகள் வான்படைகள் இந்தக் குண்டு தாக்குதலை நடாத்தியுள்ளன.

மாலை 6.30 மணியளவில் மிக்-27 குண்டுவீச்சு விமானம் முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசியதில், அப்பாவிப் பொதுமக்கள் ஐவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். ஆழியவளையைச் சேர்ந்த செல்லையா சிவபாதம் (51), உடுத்துறையைச் சேர்ந்த இராசரத்தினம் செல்வமலர் (44), வேலும் மயிலும் சிவரூபா (17) வத்திராயனைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை (67) ஆகியோரே காயமடைந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா வான்படையின் இத் தாக்குதல்களில் பெருமளவான மக்கள் குடியிருப்புகளும் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கிளைமோர் பொருத்த முயன்றவர் பலி

(16.10.00)

மட்டு. பட்டிருப்புக்கு அப்பால் உள்ள பழுகாமத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் ஊடுருவி கிளைமோர் கண்ணிவெடியை பொருத்திய ஒருவர் அது தற்செயலாக வெடித்ததில், அவ்விடத்திலேயே உடல்சிதறிப் பலியாகியுள்ளார். இச்சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் அணிகள் சென்று வரும் வழியில் அவர்களை இலக்கு வைத்தே இந்த கிளைமோர் பொருத்தப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. இக் கிளைமோர் வெடிப்பில் உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. எனினும் இவர் சிறீலங்கா இராணுவத்தின் துணைப் படையைச் சேர்ந்தவராக இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தந்தை சுட்டுக் கொலை

(15.10.00)

மட்டக்களப்பு கிண்ணையடியில் குடும்பத்தவர் ஒருவர் சிறீலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஐந்து பிள்ளைகளின் தந்தையான கைலாயபிள்ளை ஜெயக்குமார்(32) என்பவர், கடந்த திங்களன்று இரவு 8.45 மணியளவில் கிண்ணையடி கிருஷ்ணர் கோவிலுக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்த போது வழிமறித்த சிறீலங்காப் படையினர் அவரை விசாரணைக்கு எனக்கூறி கூட்டிச் சென்றுள்ளனர். ஆனால் மறுநாள் காலை துப்பாக்கி சூட்டுக்காயங்களுடன் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வல்லிபுரத்தில் படையினர் மீது பொதுமக்கள் தாக்குதல்; மூவர் காயம்

(15.10.00)

யாழ். வல்லிபுரம் பகுதியில் சிறீலங்காப் படையினர் மீது பொதுமக்கள் நடாத்திய தாக்குதல் ஒன்றில் மூன்று படையினர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. வல்லிபுரம் கோவில் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொண்ட பக்தர்கள் தீர்த்த உற்சவத்தில் கலந்துகொள்ள கடலிற்கு செல்லமுனைந்தனர். அவர்களை தடுத்து நிறுத்த சிங்களப்படையினர் முயன்றபோது, மக்களுக்கும் படையினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்தே தம்மை தடுத்து நிறுத்திய படையினர் மீது மக்கள் கற்களால் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இதில் மூன்று சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

தீர்த்தத் திருவிழாவை நேரடி ஒலிபரப்புச் செய்ய, அங்கு வந்திருந்த சிறீலங்கா அரச வானொலியின் வாகனம் ஒன்றும் பொதுமக்களால் அடித்துநொருக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் தாக்குதல்களால் ஆத்திரமடைந்த படையினர் மக்களை ஆயுதங்களால் பலமாகத் தாக்கியுள்ளனர். அத்துடன் பலரைக் கைதுசெய்து முகாமிற்கு கொண்டு சென்றும் உள்ளனர்.

மிதிவெடியில் கால் இழந்தார்

(15.10.00)

யாழ்ப்பாணம் கலட்டி பகுதியில் கைவிடப்பட்ட சிறீலங்காப் படையினரின் காவலரணுக்கு அருகில் சென்ற மாணவன் ஒருவர் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் தனது வலது காலை இழந்துள்ளார். வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இராமன் ஜெகதீசன் (14) என்பவரே தனது காலை இழந்தவராவார். இதன்போது அவருடன் கூடச்சென்ற அவரது சகோதரனும் காயமடைந்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி பகுதியில் பாம்பு தீண்டிய சிறுவன் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் போதிய மருத்துவ வசதிகள் இல்லாததால் பரிதாபகரமாக இறந்துள்ளார். வட்டக்கச்சி இரத்தினம் வீதியைச் சேர்ந்த க.கனேந்திரன்(14) என்ற சிறுவனே மரணமாகியுள்ளார்.

எமது விடிவிற்காக தமது உயிர்களை...

தமிழன்னையின் மடிமீது தினமும் உயிர்ப் பூக்கள் உதிர்ந்து கொண்டுதானிருக்கின்றன. தாம் வாழ வேண்டிய வயதில், நமது இனம் வாழ வேண்டுமென்பதற்காய் தம் உயிர்களை ஈகம் செய்து விடுகிறார்கள் மாவீரர்கள். காலம் அழித்துவிடாத அவர்களின் நினைவுக்குள் ஒரு கணம்...

லெப். மாங்கனி

‘மண்ணாய் போகும் உடலே ஈழமண்ணுக்காகட்டும்’... நெஞ்சைத் தொடும் இந்தப் பாடல் நிச்சயம் எல்லோர் மனங்களிலும் ஞாபகமிருக்கும். இந்தப் பாடலின் குரலுக்குச் சொந்தக்காரிதான் லெப். மாங்கனி.

இயல்பாகவே, அவளிடம் கலைகள் குடிகொண்டிருந்தன. பாடுவதிலும்சரி, நடிப்பதிலும் சரி, நடனமாடுவதிலும்சரி, முழுமையாக அதனுடன் ஒன்றிப் போய் எல்லோருடைய பாராட்டையும் பெற்றுவிடுவாள். இவளுடைய பாடலைக் கேட்பதற்கென்றே ஒரு கூட்டம் எந்நேரமும் இவளுடன் இருக்கும். பயிற்சிப் பாசறையில் இரவு நேரங்களில் இவளுடைய பாட்டுக் கச்சேரியைக் கேட்பதில் எல்லோருக்குமே ஒரு தனி விருப்பம்தான். ‘அம்மாவே தெய்வம், ஆகாய தீபம்’ என்கிற பாடலை ஒரு நாளுக்கு ஒரு தடவையாவது பாடாமல் விடமாட்டாள். அந்தப் பாடல் வரிகள், இவளது குரலுடன் குழைந்து வந்து எல்லோர் நெஞ்சங்களையும் உருக்கும். பயிற்சியின் களைப்பைப் போக்கும் அமைதியான தூக்கத்தைக் கொடுக்கும்.

‘மின்னல்ச்’சமர் - அடர்ந்த காடு, மரக்கிளைகள் குடைவிரித்து நிற்க, எதிரி விமானங்கள் எப்போது குண்டு வீசுகின்றன, எந்தத் திசையில் வீசுகின்றன என்பது எதுவுமே தெரியாது. அந்தக் குண்டு மழைக்குள் நின்று சமராகும் போராளிகளுக்கான விநியோக வேலையே மாங்கனியின் முதலாவது கள அனுபவமாக இருந்தது. ‘பலவேகய-2’ இவளது ஆவலுக்கேற்ப இரண்டாவது சமர்க் களமாக அமைந்தது. சண்டைக் களமே போராளிகளின் பயிற்சிக் களமாகவும் இருந்தது.

இரவு, பகல் பயிற்சி... இந்த வேளையில் மாங்கனிக்குக் காய்ச்சல் பிடித்துவிட்டது. உடலை அசைக்கமுடியாத அளவுக்குக் கடும் காய்ச்சல். களத்தைவிட்டு வெளியேற அவளுக்கு விருப்பமில்லை. பதுங்குகுழியில் இருந்தே மருந்து சாப்பிட்டாள். ஆனாலும், காய்ச்சல் விட்டபாடாக இல்லை. கட்டாயமாக மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டாள். காய்ச்சலின் கடுமையால் எப்போதுமே அபிநயம் பிடிக்கும் இவளது கைவிரல்கள் பாதிப்படைந்தன. இதற்கான வைத்தியத்தைச் செய்து கொண்டு வெளியில் வந்த மாங்கனிக்கு கலைபண்பாட்டுக் கழகத்தில் பணி ஒதுக்கப்பட்டது. இங்கே தனது கலைகளை வளர்த்துக் கொண்டாள். சங்கீதம், நடனம் என்பவற்றை முறைப்படி பயின்றதுடன், இசைக் கருவிகளையும் கற்றுத் தேர்ந்தாள். இன்னும் இன்னும் சாதிக்கவேண்டும் என அயராது உழைத்தாள்.

யாழ்ப்பாணம் வலிகாமத்தில், சிங்கள இராணுவப் படைகள் ‘சூரியக்கதிர்’ நடவடிக்கையை ஆரம்பித்து எம் வளமான மண்ணின் வளங்களை அழித்து முன்னேறிக் கொண்டிருந்தது. ‘இது நாம் பிறந்து தவழ்ந்து, நடைபயின்ற மண், இதை எதிரியிடம் விடமாட்டோம்’ என கொட்டுகின்ற செல்மழைக்குள்ளும் நின்று எம் போராளிகள் களமாடிக்கொண்டிருந்தார்கள். மாங்கனியும் சண்டைக்கான அணியில் இணைந்து தனது துப்பாக்கியுடன் களமிறங்கினாள்.

1995-10-30 எமது போராளிகளின் உயிர்களை குடித்துக் கொண்டிருந்த எதிரியின் எறிகணைச் சிதறல்களில் ஒன்று மாங்கனியின் உயிரையும் பறித்துக்கொண்டது.

ஈழமண்ணுக்கு தன்னாலான மட்டும் உழைத்த லெப். மாங்கனியின் நினைவுகளுடன் அவள் நேசித்த மக்களும், மண்ணும், இயற்கையும், கலையும் இன்றும் காத்திருக்கின்றன.

தொகுப்பு: சேம்பிள்றாஜ்

மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்

பாகம் - 16

களமுனையில் இருந்து

இராணுவத்தினரின் நகரும் பதுங்குகுழிகள் நீண்ட தூரத்திற்கு மிகக் கிட்டிய இடைவெளிகளில் அமைக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. சிறுவர் கதைகளில் வரும் பூதத்திற்கு வேலை கொடுப்பதுபோல இத்தனை வருடமும் சும்மா இருக்கவிடாமல் வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காக கொடுத்ததுபோல் அது தோன்றினாலும் புலிகளின் தாக்குதலில் இருந்து குறிப்பாக எறிகணைத் தாக்குதலில் இருந்து தப்புவதற்காகவே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதை எம்மால் உணர முடிந்தது. சிறிய காவலரண்கள் என்பவற்றைக் கடந்து இயக்கச்சி சந்திவரை சென்றடைந்தோம்.

அங்கு கொடிகாமத்தில் ஆ.க.வெ. நடவடிக்கையில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்குக் கட்டிய நினைவு மண்டபம் போன்ற ஒரு அமைப்பு இருந்ததெனினும் இதனை நாம் பார்வையிடவில்லை. கொடியேற்ற வைபவம் தாமதிக்கக் கூடாதென்பதற்காகத் தொடர்ந்து பயணித்து IRON SIDE க்குச் சென்றோம். அங்கு இராணுவத்தினரின் பாவனையிலிருந்த வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நின்றது. 769 வழிப்பாதையில் பயன்படுத்தவேண்டிய இதன் வண்டி இலக்கம் 62-4766 என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பஸ்ஸில் ஜெயந்தன் படையணி என்று பெரிதாக எழுதியிருந்தது.

மிகப் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும், மிக அழகான முறையிலும் இந்த முகாம் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு பகுதியில் வைத்தியசாலைக்குரிய அமைப்பு [கட்டடங்கள் உட்பட] காணப்பட்டது. ஒரு கொன்ரெயினர் மண்ணால் மூடப்பட்டுச் சிறிய பகுதி மட்டும் வெளியில் தெரியக்கூடியதாக இருந்தது.

மேலோட்டமாகப் பார்த்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். கண்டி வீதி கார்ப்பெட்டினால் அமைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து செல்கையில் அங்கு புதிதாக அமைக்கப்பட்டிருந்த பள்ளிவாசல் ஒன்றையும் கண்டோம். படையிலுள்ள முஸ்லிம்களுக்கென அமைக்கப்பட்டிருந்தது இது. கண்டி வீதியின் இருமருங்கிலும் இராணுவத் தேவைக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்திலேயே இது அமைக்கப்பட்டிருந்தது.

பிரதான முகாமை அண்மிக்கும் வேளையில் தொடர்ச்சியாகக் குண்டுகள் வெடிக்கும் சத்தம்கேட்டது. ஆயுதக் களஞ்சியம் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. வீதியால் வந்த வாகனங்களுக்கு மேலாக ஆர்.பி.ஜி. புறொப்பளர்கள் சீறிக் கொண்டுவந்தன. தேசியக் கொடியினை ஏற்றும் நிகழ்வை பாப்பா ஏற்பாடு செய்திருந்தார். அவரது ஏற்பாடுகள் பூர்த்தியானதும் அனைவரும் வாடிவீட்டுச் சந்திக்குச் சென்றோம். அதன் அருகில் தான் ஆயுதக் களஞ்சியம் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது.

சந்தியில் பட்ட மரக்கிளையொன்றும் சதுரக்கள்ளிச் செடியொன்றும் அழகுக்காக நாட்டப்பட்டிருந்தன. இந்த முகாம் இயற்கையான பாதுகாப்பு அரணைக்கொண்டுள்ளது. இரு பக்கமும் கடல், ஆகையால் இது முன்னர் இராணுவ முகாமுக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. கடல்நீர் மட்டத்தை அறிவதற்கென நாட்டப்பட்டிருந்த அளவு கோலிலிருந்து நீரின் அளவு 3 அடி என அறியமுடிந்தது. கடல்தானே என்று பாதுகாப்பு ஏற்பாடுகளில் எந்தக் குறைகளும் விடப்படவில்லை. அதற்குள்ளும் முள்ளுக்கம்பி வேலிகள், நீருக்குள்ளால் மின்சாரக்கம்பிகள் என எல்லாம் அமைக்கப்பட்டிருந்தது. வாடிவீடுவரை மிக நெருக்கமாக காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. காவலரண்களில் மின் வசதிகள் உட்பட அனைத்து வசதிகளும் இருந்தன.

சந்தியில் என்.வை. 4277 என்ற இலக்கமுடைய ஆமட்கார் நின்றது. இது இராணுவத் தோற்றத்தைக் காட்டுவதற்கென்றே அங்கு விடப்பட்டிருந்தது.

தேசியக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து வாடிவீட்டுப் பகுதியில் உள்ள மிக உயரமான தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஒரு தேசியக் கொடியை பறக்கவிட ஏற்பாடு செய்யுமாறு பானு கூறினார். இதன்படி அங்கு நின்ற சிறப்பு எல்லைப்படைவீரர் சோழன் தேசியக்கொடியை வாங்கிக்கொண்டு தனது சகாக்களுடன் தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறினார். இத் தொலைத்தொடர்புக் கோபுரம்தான் யாழ். குடாநாட்டிற்கான தொலைபேசி சேவைக்கென உள்ளது. தற்பொழுது வன்னியிலுள்ளவர்கள் தொலைபேசியில் கதைக்கமுடிகிறது. யாழ்ப்பாணத்து மக்கள் எம்மிலிருந்து பின்தங்கியுள்ளனர்.

அடுத்து பிரிகேடியர்கள், கேணல்கள் தரத்திலான அதிகாரிகள் தங்கும் வாடிவீட்டினை பார்க்கச் சென்றோம். ஆடம்பரத்தின் அதியுயர் வசதிகள் அனைத்தும் அங்கே காணப்பட்டது.

[தொடரும்]

இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
செல்வி பிரதிலீபனா விக்னேஸ்வரன், செல்வி அ. லக்சி
பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும்
மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

உங்கள் கைவண்ணம்

காயத்திரி வசந்தகுமாரன்

வயது: 10 (30.04.1990)
இடம்: பிரான்ஸ்
பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், தாய்மண் நிகழ்வுகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
உறுப்பினர் எண்: F113

எனது அம்மா அப்பா 05-10-2000

எனது அம்மா அப்பா இருவரும் தாயகத்தில் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இருவரும் எம்மை அன்புடனும் கருணையுடனும் தாய் மண்ணின் பற்றுடனும் எம்மை வளர்த்து வருகிறார்கள். நாமும் அவர்கள் இருவருடைய ஆசைபோல் தாய்மண்பற்றுடன் தமிழ் கற்று வீட்டில் தமிழ்பேசி ஈழமண் பற்றுடன் வாழ்கின்றோம். அம்மா எமக்கு ஈழத்து நிகழ்வுகள் சைவ விரதம் பெருநாட்கள் பற்றி எம்மோடு பேசுவது அப்பா எமது தேவைக்கும் எமக்கு பணம் சம்பாதிப்பது. அவர்கள் இருவரும் எமது தெய்வங்கள்.

கவிதை முற்றம்

யோ. ரதீனா

வயது: 13 (17.12.1987)
இடம்: சுவிஸ்
பாடசாலை: துர்க்கா தமிழ் வித்தியாலயம்
உறுப்பினர் எண்: S101

பட்டாம் பூச்சி

பட்டுப் போன்ற சட்டை போட்டு
வட்டமிடும் பட்டாம் பூச்சியே
உன் சட்டையெல்லாம் – வட்ட
வட்டப் பொட்டு வைத்ததார்?
வானவில்லின் நிறமனைத்தும் – உன்
உடலில் கொண்டதால்
வண்ணாத்திப் பூச்சி என்று
பெயரும் கொண்டாயோ
மலருக்கு மலர்தாவி நீயும்
மகிழ்ந்து கொள்வதைப் பார்த்து
என் மனமும் ஏங்குதே
பட்டுப்போன்ற உன் உடலை
எனக்குத் தந்தாலே
நானும் பறந்து மலரை முகர்ந்து
மகிந்து கொள்வேனே
தொட்டணைக்க நானும் – உன்
கிட்ட வருகின்றேன்
என்னைக் கண்டு நீயும் ஏனோ
எட்டப் போகின்றாய்
விட்டுவிட மாட்டேன் நானும்
உன்னையே
கெட்டியாக பிடித்திடுவேன் என்றோ
ஒரு நாளே

தகவல் முற்றம்

★ 1902ல் இங்கிலாந்து எழுத்தாளராகிய ரூட்யார்ட் கிப்ளிங் எழுதிய குழந்தைகளுக்கான கதைத் தொகுதியான 'Just So Stories' என்ற கதைத் தொகுதி வெளியானது.

★ 1906ல் Humourous Phases of Funny Faces' என்ற உலகின் முதல் அனிமேசன் காட்டூன் படம் தயாரிக்கப்பட்டது.

★ 1908ல் 'Wind in the Willows' என்ற குழந்தைகளுக்கான புத்தகத்தை எழுதி வெளியிட்டார் கென்னத் கிரகம் பேட்கர் என்பவர். ராட்டி, டோட், மோல் என்ற மூன்று கதாபாத்திரங்கள் அடிக்கும் கூத்துகள் பற்றிய கதை இது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் கவர்ந்தது.

★ 1926ல் குழந்தைகளின் மனம் கவர்ந்த 'வின்னி த பூ' [Winnie the phooh] என்ற ஜாலி கரடியை உருவாக்கினார். ஆங்கில எழுத்தாளர் ஏ.ஏ.மிலன் என்பவர். அந்தக் கரடியை அழகாக வரைந்து கொடுத்தார் E. H. சப்பேர்ட் என்பவர்.

★ 1938இல் இங்கிலாந்தில் 'பிக்சர் போர்ட்' என்ற சித்திரப் பத்திரிகையை ஆரம்பித்தார் எட்வேர்ட் கல்டன் என்பவர்.

★ 1941ல் யானை பறப்பது பற்றிய வால்ட்டிஸ்னியின் நகரும் படமான 'டம்போ' நியூயோர்க்கில் வெளியானது.

கதை முற்றம்

திகில் நிறைந்த கடற் பயணம் 11

றொபின்சன் குருசோ



பாரமான படகை என்னால் ஒரு அடிகூட நகர்த்த முடியவில்லை

எனது தீவின் கரையோரப் பகுதிகளில் உலாவும் போது கண்களில் தென்பட்ட அயல் தீவிற்குச்செல்வதற்கு ஒரு படகு எனக்குக் கிடைத்தால் அங்கிருந்து எனது சொந்த நாடாகிய இங்கிலாந்திற்குச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் சில வேளைகளில் கிடைக்கலாம் என எனக்குத் தோன்றியது. எனவே ஒரு படகை தயாரிக்க ஆரம்பித்தேன். அதற்காகப் பெரிய மரத்தை வெட்டிச் சாய்த்தேன். எனது ஆறுமாத கடின உழைப்பின் பின் அழகிய படகு எனக்குக் கிடைத்தது. சரி படகு கிடைத்துவிட்டது இதை எவ்வாறு கடலுக்குள் கொண்டு செல்வது. எவ்வளவு முட்டாள் நான் கடலுக்கு அண்மையில் உள்ள மரம் ஒன்றை வெட்டி இருந்தால் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? படகைக் கடலில் சேர்ப்பதற்கு நான் பெரிதும் பாடுபட்டேன் தள்ளிப்பார்த்தேன். இழுத்தும் பார்த்தேன். பல வழிகளில் முயன்றும் என்னால் அப்படகை ஒரு அடிகூட நகர்த்த முடியவில்லை. கிட்டத்தட்ட தீவில் எனது வாழ்க்கையின் நான்காவது வருடத்திலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது.

எனது ஆறாவது வருடத்தில் இன்னும் ஒரு படகைச் செய்து முடித்தேன். எனினும் அது முன்னையது போன்று அல்லாமல் சிறிதாகவும் இலகுவில் கடலுக்குள் சேர்க்கக்கூடிய தூரத்திலும் இருந்தது. எனினும் அது மிகவும் சிறியதாக இருந்ததால் அதில் அதிக தூரம் கடலில் பயணம் செய்வது சாத்தியமற்றது என்பதைப் பின்னர் உணர்ந்தேன். எனவே நான் ஏற்கனவே செய்த தவறுகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இன்னும் ஒரு படகைச் செய்யத் திட்டம் தீட்டினேன். அதைத் தீவின் இன்னுமொரு புறத்தில் ஆரம்பித்ததால் அடிக்கடி வீட்டிற்கு வந்து செல்வது எனக்குக் கடினமாக இருந்தது. எனவே படகின் அருகில் எனக்காக இன்னும் ஒருவீட்டை உருவாக்கினேன். ஒரு தடவை நான் ஏன் இவ்வளவு கஸ்ரப்பட்டுத் தப்பிக்க முயற்சிக்க வேண்டும். இது ஒரு சிறைச்சாலை அல்லவே. இது எனது வீடு போன்றது பின்னர் ஏன் நான் இவ்வாறு கஸ்ரப்பட வேண்டும் என்ற உணர்வுகூட ஏற்பட்டது. எனினும் தனிமையின் கொடுமை என்னை வாட்டவே தப்பிக்கும் முயற்சியைத் தீவிரப்படுத்தினேன். ஒவ்வொரு நாளும் காலை முதல் மாலை வரை வேலைகள் நிறைந்த நாட்களாகவே சென்றன. அங்கு காணப்பட்ட காட்டு



காட்டு ஆடுகளில் இருந்து பால் பெற்று தினமும் குடித்தேன்.

ஆடுகளைப் பிடித்துச் சிறிய பண்ணைபோன்று அடைத்து வளர்த்து பாலைப் பெற்றுத் தினமும் அருந்தினேன். இந்த மிருகங்களின் தோலில் இருந்து ஆடைகளையும் எனக்காகத் தைத்து அணிந்தேன்.

பயணம் தொடரும்...

வினா-விடை முற்றம்

கடந்தவார விடை:

1. கல்லை உருக்கக்கூடிய வெப்பமுள்ள பூமியின் உட்பகுதியில் கிடக்கும் கற்களோடு சில நிறப் பொருட்கள் சேருவதால்.
2. சுண்ணாம்பு, இரும்பு, பொஸ்பரசு
3. உயிர்ச்சத்து A, C
4. பங்க்விட்டமின் (Funk Vitamine)
5. ஒருவகை மீன்
6. ¾ பங்கு

வினா-விடை முற்றம்

1. மீன், இறைச்சி உணவுகளில் எத்தனை பங்கு தண்ணீர் உள்ளது?
2. உடம்புக்கு வேண்டிய நீர் எப்படிக் கிடைக்கின்றது?
3. மரத்தில் ஏறும் மீன் உண்டா?
4. தேயிலையிலும், கோப்பியிலுமுள்ள நச்சுப் பொருள் என்ன?
5. மனிதனுடைய உடலில் ஏறக்குறைய எத்தனை தனி எலும்புகள் உண்டு?
6. இரத்தத்தில் உள்ள வெண்குருதித் துணிக்கைகளின் தொழில் என்ன?

அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.

கண்டுபிடியுங்கள்

ABC

படத்திலிருக்கும் எழுத்துக்களை எத்தனை விதமாக மாற்றி எழுதலாம்?

முயன்றுபாருங்கள்! முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

கடந்தவார விடை:

குறுங்கதை

ஒரு மழை நாள்

05

பஸ்ரில் சதுக்கத்தில் நின்று இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள்.

'அப்படி ஏதும் முற்கூட்டியே அறிஞ்சிருந்தால்:...,

நான் அதைத் தவிர்த்திருப்பன்.'

'தவிர்த்திருப்பாய்....?' என முகுந்தன் அழுத்தினான்.

'ஓமடாப்பா! நிச்சயம் தவிர்த்திருப்பன்'

'கஷ்டம் துன்பம் விடாது'

'அது வேற.'

'அது தான் தீர்மானிக்குது.'

'எதை..?'

'அடங்கிப்போறதை!'

'நீ பிழையா விளங்கிற்ற'

'இல்லை..! நான் பொதுவா சரியாத் தான் சொல்றன்.'

'நான் இல்லை என்றன்'

'பாரன்..! இந்தத் தருமனுக்கு வீட்டில் சரியான கஷ்டம். அஞ்சு பொம்பிளைச் சகோதரங்களுக்கு மூத்தவன் அப்படி இருந்தும் அவன் கேட்டதுகளை முன் வைத்து ஒரு சுகயீன லீவை அறிவிச்சிருக்கிறான். ஆனால் அவர்கள் அதை 'ஒரு சொறி லீவு' என்று போட்டார்கள். சொறிய வெளிக்கிட்டுட்டான், என கோபமாக குசினியர் இருந்திருக்கிறான், மிரட்டி பணிய வைக்கிறத வேறை யாரோடையும் வைக்க வேணும் எண்டுறத அவனுக்கு விளங்கப்படுத்த வேணும் என, அவர்கள் பேசிக்கொண்டார்கள். அது தருமனின்ற பிரச்சினை மட்டும் தான் என்பதை அவர்களுக்கு தெளிவாக விளங்கப் படுத்தப்பட்ட முறைகள் விசித்திரமானவை, ராஜ மரியாதையும் அடங்கும். தருமன் தனக்குச் சுகயீனம் என்றே சொல்லியிருக்கிறான். குசினியர் உனக்கு மண்டையில தான் வருத்தம் என்று சொல்லி விட்டு, நிலச்சுரங்க அறைக்குள் பேச அழைத்திருக்கிறான். தருமன் மறுத்திருக்கிறான். சேட்டுக் கொலரில் பிடித்துத் தூக்கிச் சுவரோட இறுகச் சாத்தி உலுப்பி இருக்கிறான் தருமன் திமிறி இருக்கிறான். இடுப்பில் தூக்கிப் பந்தாய் ஆட முனைந்திருக்கிறான். உந்த சேட்டையளை யாரோடையும் விடும் என்றும் சொல்லியிருக்கிறான். இதை அந்தக் குசினியரே தான் எனக்குச் சொன்னான்.

ஒரு பெரிய பறவைக்கூட்டம் விரைந்து கொண்டுபோனது. வானத்தில் வலை வீசுவதுபோலவும் அவை பறப்பதும் வலையை இழுத்து விரித்துச் செல்வது போலவும் போயின. வலையில் சிக்கிய எதையோ மீட்டு கானமிசைச்சு கும்மியடிப்பதைப் பொலவும் இருந்தது.

சகி திமிறிய ஒரு நாளில் அவனை மிரட்டுவதற்காகவே இந்தக் கதையைச் சொன்னான். தனக்குச் சிரமங்களைத் தரக்கூடாது . அது தன்னை ஆத்திரமூட்டி - வன்முறைக்குத் தள்ளும் என்பதால் கவனம் எடுக்க வேண்டும் என்பதற்காகச் சொன்னான். கதைகள் பேச்சுக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும், காரியத்தில் கண் வைத்தபடி நிற்க வேண்டும் என்றும், நேரகாலம் பற்றிய உணர்வு நிலை குறைவாக இருக்க வேண்டும் என்றும், இவையே சிறப்புத் தகுதிகளாகக் கருதப்படுகிறது என்றும் பேச்சில் வைத்தான்.

'எக்கீப் பேப்பரோட (விளையாட்டுக்கள் பற்றிய தகவலைத் தரும் ஒரு நாளிதழ்) பெரிய கடி நாயோட பத்திறோனின் (முதலாளி) மனுசி வந்தாள்' என்றான் சகி.

'இதென்ன அநியாயம்! ஏன்ராப்பா...? கடி நாயோட வருகிறாள் என்று பயமாக் கிடந்தது.'

'நாயோட வந்தவள் 'எக்கீப்' பேப்பரை தட்டிப் பார்த்துக் கொண்டு நின்றாள் விளையாட்டில அவ்வளவு தீவிரப் பற்று அவளுக்கு'

சடுதியாக அவன் முகம் மாறிக்கொண்டது !.

எங்கட 'எக்கீப்' பிரச்சினையோ எண்டு முதல்ல குசினியரும் பயந்து போனான். என்னையும் முறைத்துப் பார்த்தாள். அந்தப் பார்வை சுட்டுத் தள்ளுவதைப் போல இருந்தது. தும்புத்தடியோட நில அழுக்கைப் பெருக்கிக் கொண்டுவந்த மொகமட்டையும் ஒரு பார்வை பார்த்தாள். அவன் சட்டை செய்து கொள்ளவேயில்லை. அவன் அழுக்கை நீக்கிக் கொண்டே போனான்.

இரண்டாவது பெரிய குசினியரைக் கூப்பிட்டாள்.

'உய்...! மடம்...! நான் கேட்கிறேன்...'

'என்ன... பிரெஞ்சு ரீமில ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு கறுவல்கள் விளையாடுகிறாங்கள். அப்படியென்றால் தான் நாங்கள் வெல்லலாம்.'

'நிலமை அப்படியே இருக்கு?'

'அவன் அட்டகாசமாய்ச் சிரித்தான்'

'நாங்கள் பலமாக இருக்கிறம். நாங்கள் நிச்சயம் வெல்லுவம்.'

'அதில்லை நான் கேட்டது, ஏன் பிரஞ்சுக்காரர்கள் இல்லையா என்று தான்?'

'ஏன் அவ்வளவு தூரம் போவான் இஞ்ச பாருங்கோவன்.... எங்கிட 'றெஸ்ரோறன்ற' பெயரில ஒரு ரீம் போட்டா?'

'ஐந்து பேர் வருவார்கள்' என்றாள்

அன்றைய காலை உலகப் பந்தாட்டத்தில் தொடங்கி, பந்தாய் நான் றெஸ்ரோறன்ருக்குள் பம்பரமாய்ச் சுழன்று முடிந்த மாலையோடு வீடு திரும்ப ஆயத்தம் ஆனேன். நான் சரியான கவலையோடு இருந்தேன். அப்போதுதான் சதா வந்து சேர்ந்தான். முகத்தில் அடித்தது மாதிரிப் பேசினான்.

'நீ வந்தாப் பிறகு அவங்கள் எங்களை மதிக்கிறாங்கள் இல்லை.'

'யார்ரா?' என்று கோபமாகக் கேட்டேன்.

'பத்திறோன் தான்!'

'அவன் யாரையோ வெளியேற்ற நினைக்கின்றான். உம்மைப்பார்த்துக் கறுவல்கள் கதைக்கக் கூடாது என்று சொல்ல, நீர் எந்த பதிலும் சொல்லவில்லையாமே. முகத்தில் அடிச்சது மாதிரி ஒரு நாலு கேள்வி கேட்டிருக்கக் கூடாதே'

'கேள்விகள் கேட்கிறதாலை போயிடுமோ?'

'ஏன் போக முடியாது?'.

'அப்படியெல்லாம் கேட்கக் கூடிய ஆட்களா இருந்தால் பிறகு என்னத்திற்கு நாங்கள் எல்லாம் இஞ்ச வந்து நிற்கவேணும்.'

'கறுவல்கள் கதைக்கக் கூடாது என்று சொன்னது சாதாரண பிரச்சனையில்லை.'

'உண்மைதான்! நான் நினைச்சன் நீங்கள் எங்களை சிவலையல் என்று நினைச்சிருக்கிறியள் என்று...'

சதா பலமாய்ச் சிரித்தான். தலையை சிலுப்பினான்.

'இது எங்களுக்குக் கூடாது தெரியுமே?'

'அது எனக்குத் தெரியுது. என்ன செய்ய வேணும்? எப்படி என் எதிர்ப்பைக் காட்ட வேணும்? சொல்லுங்கள்'

'அதெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுறன். நீர் எனக்கு வேற வேலை ஒன்று பார்த்துத் தாரும். நான் போகப் போறன். அதோட ஞாயிற்றுக்கிழமை இரவு நீர் தான் வேலை செய்யவேணும்'

'என்னால் அது முடியாது!'

'என்னாலும் அது முடியாது!'

நானும் அவனுமாகச் சண்டையிட்டுக் கொள்ள என்ன இருக்கிறது. அவர்கள் திட்டமிட்டுக் குழப்ப நிலைமையை எங்களுக்குள் ஏற்படுத்தி இருக்கின்றார்கள் என்பதில் எனக்குச் சந்தேகமே இருக்கவில்லை. நான் அவனைப் பரிதாபமாகப் பார்த்தேன். அவனுக்கு நானே உதவி செய்யவும் நினைத்தேன்.

'சனி இரவு வந்து வேலை செய்து போட்டு, ஞாயிறு காலையிலும். வேலை செய்வது உமக்குக் கஷ்டம். உமது கஷ்ட நிலைமையைக் கருத்தில் கொண்டே இந்த மாற்ற முடிவுக்கு வந்தோம். அதோட நீர் நேற்று வந்தனீர்' என சதா முகத்தைக் கடுமையாக்கினான்.

'நேற்று, இன்று பிரச்சினையில்லை. உரிமை, ஒழுங்கு, நியாயம், நீதி எப்பவும் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும். சரி உங்களுக்கு என்னில், கறுவல்கள் கதைக்கக் கூடாது என்று பத்திறோன் சொன்ன போது எதிர்க்கவில்லை என்பது தானே கோபம். நான் அவன் மீது வழக்குத் தொடர நினைக்கின்றேன். யார் சாட்சிக்கு வருகிறீர்கள்?'

'நாங்கள் ஒருவரும் அப்படி வர முடியாது. அப்பிடியொரு பிரச்சனையும் எங்களுக்கு நடக்கேலை.

உமக்குத்தான் நடந்தது. அதை நாங்கள் நேரிலையும் பாக்கேலை. வழக்கு கிழக்கெண்டு ஏன்தான் வம்பு தும்பில மாட்ட நிற்கிறீர். உம்மை அவனுக்கு பிடிக்கேலை. வந்தீரா, போனீரா எண்டு நிற்காமல் பிரச்சனைகளில மாட்ட நிற்கிறீர். நாங்கள் குடும்பம், பிரச்சினைகளோட உள்ள ஆட்கள். இனி ஊரில் உள்ளவையையும் நாங்க தான் பார்க்கிறம், சும்மா போம். பிடிக்கேல்லையெண்டா விட்டிற்று போறதைவிட்டு ஏன் குமைஞ்சு கொண்டிருக்கிறீர்?'

என அவர்கள் பேசத் தொடங்கினார்கள். நான் அவர்களுக்குத் தொந்தரவு இழைக்காமல் வெளியேறுவதைத் தவிர வேறு வழி எனக்கத் தெரியவில்லை. குசினியர், எனக்கு விசரா? என்று கேட்டான்.

'நீ இல்லாவிட்டால், எங்களுக்கு இன்னொருவன்.'

'அவர்கள் இனி வரமாட்டார்கள்.'

'வேற நாட்டுக்காரர்களில் இன்னும் ஒருவன். லாச்சப்பலுக்குக் கார்கொண்டு போனால் எங்களுக்குப் பிடித்தமானவனைப் பிடித்துக் கொண்டு வருவேன்.' வெளியே போக முற்படுகையில் அருகே ஓடிவந்த குசினியர்,

'ஏய்...! அடுத்த முறையும் நான் 'லுப்பெனுக்கே' வாக்களிப்பேன்' என்றான்.

'அதைச்செய்' என்று விட்டு வந்து விட்டேன்.

அவர்கள் இருவரும் மங்கிய நிழல் ஓவியங்களாய் இருள் நிறைந்த ஓடைகளால் போய்க்கொண்டிருந்தார்கள். அன்பும், பரிவும், ஆதரவும், கொடுத்தலும், வாங்கலும் நிறைந்த உறவின் வேரறுந்த உள்ளக்காயமும் வலியாய் இருந்தது. வேரறுந்த விருட்சமாக விழுந்துகிடக்கும் அவனின் தேடலும் - தாகமும் உடனடியாகத் தீர்ந்து போகக் கூடியவை அல்ல. மின்சார விளக்குகளின் கீழ் அலங்கார பொம்மை மனிதனாக - அவசர இயக்கத்தின் இயந்திர மனிதனாக அவ்னால் நிற்க முடியவில்லை

சுற்றிச் சுழன்று பறக்கும் சிட்டு இயக்கம் என்பது வேறு - இயந்திர இயக்கம் என்பது வேறு. நானும் ஒரு மனிதன். எனக்கும் பாட ஆசை, ஒரு மாலைச் சூரியனோடு தேநீர் பருக ஆசை. இதையெல்லாம் இழந்த வாழ்வை எண்ணிக் கலங்கியபடி அத் தெருவால் நடந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது பஸ்ரில் மெற்றோவின் சிறிய முற்ற அரங்கு அதிர்ந்தது. அற்புதமான இசையால் 'எழும்பு! எழும்பு!' என்கிற நடையின் வாசிப்பை எழுப்பிக் கொண்டிருந்த நாடோடி இளைஞர்களின் நடனம் வேறு நிகழ்ந்தது. பாதி வானமும், பாதி பூமியுமாகிய மனிதனின் நடனம் வானத்தைத் தழுவுகிற வேட்கை மிகு நடன அசைவு, பூமியிலிருந்து புத்தூற்றாய்க் கிளம்புகிற புது நடனஅசைவு. கைகள் சிறகை விரித்து வெளியைக் குடைதலும், அலையாய் எழுந்து வானக் கடலிற் கரைதலும், கண்களை மூடி ஞானத் தவம் புரிதலும், சக்தியின் பரிமாற்றச் சுழல் சக்கரமாய்ச் சுழல்தலும், பிறப்பை வாழ்த்திப் பெருமிதம் கொள்தலும், ஏகாந்த நடனமே, எங்கும் எல்லோர் உளத்திலும் நிகழ அவர்கள் ஆடினார்கள்.'காற்று ஒரு புல்லாங் குழலாய்த் தாழ்ந்த குரலில் ஒலித்தது. மனிதர்கள் இசையால் ஈர்க்கப் படுகிறார்கள். நடனம் நிகழ்கிறது. செருப்பு வீசப்படுகிறது. நாற்காலிகள் வருகின்றன. சாட்டைகள் எறியப் படுகின்றன. விலங்குகள் வீசப்படுகின்றன.

களைத்து, விழுந்து, சோர்ந்து வேகமாக ஒருவன் ஓடி வருகிறான். குத்துக் கரணம் அடிக்கிறான். தலையால் நடக்கிறான். முதுகில் சுமக்கிறான். மாடு போல் இழுக்கிறான். துடைக்கிறான். வேகமாகக் கழுவுகிறான். இயந்திரங்களே தோற்கும் இயந்திரக் கதி. பார்வையாளர்கள் ஒரு விறைத்த பார்வையுடன் அவர்களின் விதியை வாசித்தார்கள். காற்று பலத்த சத்தத்தோடு ஊ...! என ஓலமிட்டபடி உள் நுழைந்தது. நாடோடி மனிதனின் நடனம் அற்புதக்களை கட்டுகிறது. இழந்த வாழ்வின் பாடலின் வலியைக் கிளர்த்துகிற பறை - ரயில் நிலையைச் சுவர்களுள் மோதுகிறது. இதயச் சுவர்களில் குத்துகிறது. விலங்குகளை அறுக்கிற விந்தை அதற்குள் இருக்கிறது.

அந்தப் பாடலின், அந்த நடனத்தின் பின்னால் எல்லோரும் ஒரு கணம் மெய் மறந்து நின்றார்கள்.

நாடோடிச் சிறுவன் ஒருவன், அச் சனக் கூட்டத்துள் சிறிய ஒரு எலியைப்போல, ஒரு சிறிய தட்டோடு சுழன்று வந்தான். தட்டில் சில்லறைகள் சேர்ந்தன. கலைந்திருந்த தலைமுடிகளில் கவலை தொற்றி இருந்தது.

நீங்கவே முடியாத சோகத்தின் மீட்டல் கண்களில் படர்ந்தது.

திசையற்ற பயணியான சகி தெருவால் இருளில் கரைந்தபடி போய்க் கொண்டிருந்தான்...

ப்ஸ்ரில் சதுக்கத்தின் வான வெளியில் தங்க ஜொலிப்போடு 'பறந்து கொண்டிருக்கிற சுதந்திர சிலை'யின் பறப்பின் நாதம், மழையாய் பொழிந்து கொண்டிருந்தது. தடைகள் தகர்த்த, தளைகள் அறுத்த, சுதந்திரமான பறப்பையே இந்த உலகம் வாழ்த்திப் போற்றுகிறது. அடிமை வாழ்வை யாரும் போற்றிப் பாடுவதேயில்லை.

(மழை ஓய்ந்தது)

தா. பாலகணேசன்

தீபத்தில் தீபாவளி

தீபம்
www.deepamtv.com

ஐரோப்பிய
நாடுகளிலிருந்தும்
நேயர்கள் பங்குகொண்ட
விஷேட நிகழ்ச்சிகள்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
ஒகஸ்ட் 23ம் திகதி முதல் 29ம் திகதி வரை
சிறப்பு நிகழ்ச்சிகள் தீபம் தொலைக்காட்சியில்

- ★ நேரடித் தொலைபேசி நிகழ்ச்சிகள்
- ★ கவிதை நிகழ்வுகள்
- ★ சிறுவர் நிகழ்ச்சிகள்
- ★ இசைப் பாடல் நிகழ்ச்சிகள்
- ★ நடன நிகழ்ச்சிகள்
- ★ நாடகங்கள்

தீபாவளி சிறப்பு நிகழ்ச்சியில்
கலந்துகொள்ள சிறப்புத்
தொலைபேசி இலக்கம்
0208 8146555
தொலைநகல் 0208 8146575



வெகுவிரைவில்

ஐரோப்பிய மேடைகளில்

சிம்மக்குரலோன்
B.H. அப்துல் ஹமீத்தின்

பாட்டுக்குப் பாட்டு

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், பிரித்தானியா
ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள
'பாட்டுக்குப் பாட்டு' போட்டிகளில்
கலந்துகொள்ள எமது முகவர்களை நாடுங்கள்

உங்கள் தொடர்புகளுக்கு
தலைமைப் பணியகம்

பிரித்தானியா: **Tele Europe Ltd.**
1,Martindale Road. Hounslow West,
TW4 7EW, London, U.K.
Tél: 0044-2088146565
Fax: 0044-2088141144
E-mail: info@deepamtv.com

தீபம் ஒளிபரப்பாகும் செய்மதி:
Eutelsat Hot Bird 4, at 13 ° East
Down link Frequency: 10722 MHZ
Symbol: 29900

சந்தா விபரங்களுக்கும்
இணைப்பிற்கும் உங்கள் நாட்டு
முகவர்களுடன்
தொடர்புகொள்ளுங்கள்.

பிரான்ஸ்:	MR. SAKTHI	Tél: 01 42 09 03 04 Fax: 01 42 09 78 24
ஜேர்மனி:	MR.BALA	Tél: 0049- 421429389 H.P: 0172 87 60 038
சுவிஸ்:	MR.S.K. NATHAN	Tél: 0041-2724336 Fax: 0041-2732377

Pub.Fr

ஸ்ரீ ராம ஜெயம்

அருள்மிகு ஸ்ரீ ஜெய வீர ஆஞ்சநேயப் பெருமானுக்கு

மஹா கும்பாபிஷேகம்

23.10.2000

DENNISH JACKSON CENTRE
LONDON ROAD OFF
WEMBLEY HIGH ROAD WEMBLEY
(NEXT TO WOOLWORTH)

இலங்கையில் முதன்முதலில் ஓர் ஆஞ்சநேயர் ஆலயம் உருவாக்கி அதன் அருளால் இங்கிலாந்து நாட்டில் முதன் முதல் ஓர் ஆஞ்சநேயர் ஆலயம் அமைக்க திருவருள் கூடியிருக்கும், ஆஞ்சநேயர் சுவாமிகளால், கண்ணுக்குப் புலப்படாததும், மனம், வாக்குக்கு எட்டாததும், உள்ளத்துள் உறைவதுமாய் ஒலி, ஒளியாய் எங்கும் நிறைந்த பொருளால் தோற்றம், வளர்ச்சி, ஒழுக்கங்களுக்கு மூல காரணமாய் விளங்கும் கலியுகத் தெய்வமாகிய ஸ்ரீ ஜெய வீர ஆஞ்சநேயப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளது.

விக்ரம வருடம் தட்சணாயனம், ஐப்பசி மாதம் 7ம் நாள் திங்கட்கிழமை (23.10.00) ஏகாதசி திதி, பூரம் நட்சத்திரம் சித்தயோகம் சேர்ந்த நன்நாளில் காலை 9.30 மணி தொடக்கம் 11.15 மணி வரையுள்ள தனு லக்கின சுப முகூர்த்தத்தில் ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்திக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

கிரியா கால விபரம்

ஐப்பசி 5ம் நாள் 21-10-00 சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு கிரியாரம்பம் விநாயகர் வழிபாடு, பிரதிஷ்டா சங்கல்பம்; அனுஞ்ஞை, குரு அனுஞ்ஞை, திரவிய பிரதிஷ்டை, முகூர்த்த படனம், கணபதிஹோம மாலை 7 மணிக்கு பஞ்ச சாந்தி ஹோமங்கள். ஐப்பசி 6ம் நாள் காலை 8 மணிக்கு 22-10-00 ஞாயிற்றுக்கிழமை பூர்வாங்க கிரியை நடைபெற்று, வாஸ்து சாந்தி, மாலை 7 மணிக்கு தீபஸ்தாபனம், கடஸ்தாபனம், யாக பூஜை, விசேட திரவிய ஹோமம், ஆஞ்சநேயர் காயத்ரி ஹோமம், தீபாராதனை, சர்வோ உபசாரா சமர்ப்பணம். ஐப்பசி 7ம் நாள் 23.10.00 திங்கட்கிழமை காலை யாகபூஜை, ஹோமம், பிம்பசுத்தி, ஸ்பர்சாகுதி, மகாபூர்ணகுதி, பலிதானம், விசேட சோடச உபசாரம், யாத்ராதானம், மகா கும்பாபிஷேகம், தசமங்கள தரிசனம், மஹாபிஷேகம், விசேட தீபாராதனை, பூஜை, வேதம், ஸ்தோத்திரம், ஆசீர்வாதம், அகண்ட நாம பஜனை வழிபாடு, பிரார்த்தனை.

(தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்)

அன்று காலை கும்பாபிஷேகம் இனிது நிறைவுபெற்றதும், ஆஞ்சநேயர் சுவாமிகளின் ஆசீர்வாதம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்

ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்,
3/11 ஸ்ரீ போதிருக்காராம வீதி,
தெஹிவல,
இலங்கை.
941 726444

ஆஞ்சநேயர் சுவாமி
ஸ்ரீ ஜெய வீர ஆஞ்சநேயர் ஆலயம்,
94, MERLIN CRESCENT
EDGWARE - HA8,6JD
0208 9511 811, 07932600689

Pub Lon

கலைந்த சொற்கள் எண்: 64

கீழ் உள்ளவற்றில் 168 சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் என இருக்கும். இச்சொற்களை கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாகவும், சில சொற்கள் இரு முறையும் இருக்கின்றன.

ம்	கா	ப	ரு	த்	தி	ம்	ம்	டு	க	ரை	லி	ல்	ப	ம்	ஆ
க	த	ம்	ப	ம்	த	ம	க	ட	ள	ல்	தி	த்	ட	இ	ப
ம்	ல்	இ	ல்	சா	ர்	த	ல்	ர்	ம்	ப	ம்	கு	ல	ம்	ப
ர	ம	ம	ம்	த	னி	பு	க	ன	ள்	ன	ம்	க்	ம்	ண	ரு
ய	ம்	மை	னி	த	த்	ம்	ரு	ன்	ரு	அ	த	ட	னி	ம	ப்
து	க	ம	மு	த	லை	ழு	க	ம	பொ	ன்	ட்	வ	கு	ப்	பு
ற	மா	றி	க	பு	ன்	த	கொ	க்	ம்	கா	த	கு	ங்	ளி	ப
ப்	ப்	ம்	ப்	ம்	பா	ம்	பு	ம்	ர	வ	பு	னி	ப	த	ட
பு	வே	வ	பு	ழ	ளை	வே	ல்	க	ப	இ	அ	ம்	ம	ணி	ர்
ரை	சி	ர	ங்	கு	ட	ல	ள	க்	ம்	னு	க	ல	ளி	சா	த
தி	தி	தி	றை	ர்	ல்	ம்	ள்	ள	ப	ர	ம்	கு	க்	க	ல்
த்	து	த்	ப	சொ	ந	த	வ	வி	ந	ம	க	ம	றை	த	ல்
நி	த	அ	மா	க	டு	ப்	த்	தி	ர	ம்	த்	ம	த்	த	ல
ல்	ரு	வ	று	மை	த	த	த	சி	ம்	து	து	தி	த்	த	ல்
வி	ய	ப்	பு	கொ	ல்	ல	ல்	க்	பு	தை	ந்	நி	யா	க	ம்
அ	பு	ம்	ல	சி	வை	சு	ச்	க	அ	நி	ரு	ப	ம்	ன	இ
ம்	ரு	ள	வ	கா	த்	த	ழ்	ல்	க்	ம்	ம	ப	ச	ம்	ம்
க	கொ	ம்	ர்	வை	த	த	ப	லூ	ச	வி	ன்	ஆ	ரி	ப	உ
து	டு	ப்	பு	அ	ல்	ல	ல்	ரி	டி	ரு	ள	ம்	ப	ண்	றை
க	ச	ப்	பு	த	ன்	வே	ப	த	த	ப்	ல	க்	க	ட	ப்
வி	டு	ப்	பு	பு	ல்	க	ல்	ந	பு	ப	க	ல	க	ம்	பு
உ	டு	வ	தி	ப்	ம்	க	க்	ழு	ஒ	ம்	ம்	ல	ப	ம்	அ
அ	ப்	ப	ன்	பை	ல	ரு	தி	ர	ப	ரு	ப்	பு	ரு	ஆ	வ
வை	ம்	க	ப	ப்	கா	க	க	ம்	அ	ம்	சி	வ	ப்	ணி	க
த	க	ப	பை	ன	வ	ல்	து	க	ம	ச்	பூ	ல	க	ரு	சு
க	ண்	ப	ப்	சி	ரு	ன்	ல	ரு	ழ்	இ	ட	ம்	ம்	ந்	நெ
ன	ண	ம்	வ	ரு	ப	ம்	த	க	வ	ள	ப்	பு	த	பு	ண்
ம்	ன்	ம்	ப	ம்	வி	ம்	இ	ல்	ல	ம்	க	ரி	த்	த	ல்

கதம்பம்	இடத்தில்	ஆம்பல்	படலம்	பருத்தி	தர்மம்	இதம்	விளக்கம்	வத்தல்	சிரமம்	பம்பரம்
பகல்வேளை	பரம்பொருள்	மத்தியானம்	நிருபம்	கரகாட்டம்	துதித்தல்	மகரம்	குறைதல்	சிக்கல்	பங்குனி	வகுப்பு
குக்கல்	மறைதல்	படர்தல்	மனிதன்	வதனம்	கும்பம்	பரிசம்	விருப்பம்	விடிதல்	பாதகன்	தழும்பு
புத்தகம்	மன்னர்	கருகல்	மாமனிதர்	புசித்தல்	பவளம்	பத்திரம்	நரம்பு	புகழ்தல்	மருந்து	வள்ளல்
ஆசனம்	தகனம்	நரகம்	கம்பளி	பளிங்கு	வடக்கு	பருப்பு	அம்மணி	களிம்பு	இரக்கம்	வரம்பு
விக்கல்	விளக்கம்	பக்கம்	பூவரும்பு	கல்லூரி	கொழுத்தல்	புனிதம்	சார்தல்	மனிதன்	முகப்பு	தும்மல்
துயரம்	கம்மல்	முறிப்பு	சிவப்பு	அம்பலம்	குழம்பு	சிரங்கு	குறைத்தல்	மாத்திரை	கலகம்	கம்பன்
கொல்லல்	உறைப்பு	புசித்தல்	கரும்பு	புலவர்	கறுப்பு	அல்லல்	அரும்புதல்	கடுப்பு	துடுப்பு	நடுதல்
கசப்பு	பரிசம்	விடுப்பு	கலப்பை	காப்பகம்	சினப்பை	அகலம்	கருகல்	மருதம்	துறப்பு	திரவம்
நித்திரை	பண்டம்	சிலம்பு	வியப்பு	அகச்சுவை	உடுப்பு	கலப்பு	ஒழுக்கம்	அரக்கன்	நல்கல்	கடுவன்
கம்பம்	பருவகாலம்	தம்பதி	அப்பன்	கருகல்	அடுப்பு	தகனம்	பருவம்	விருப்பம்	துன்பம்	கண்ணன்
விம்பம்	துருவம்	கரும்பு	இல்லம்	சிலம்பு	இகழ்ச்சி	வலம்புரி	கரும்பு	நெருப்பு	கரித்தல்	வளப்பு
சுந்தரி	வணிகம்	தருமம்	பருப்பு	இனம்	யாகம்	நிந்தை	பந்து	குலம்	மணம்	முதலை
தனிமை	பாம்பு	பத்து	வேடர்	வறுமை	அருவி	வைகாசி	வளரும்	பலன்	பலம்	புழுதி
குடம்	பணம்	இடம்	பதம்	காதல்	சாதம்	பாதகன்	கடல்	தகடு	களம்	பதில்
குதிரை	அனுபவித்தல்		நிந்தித்தல்	உண்கலம்						

பெயர்:...

முகவரி:...

....

பிறந்த நாள்:.. சந்தாதாரராயின் சந்தா எண்:.............................

கலைந்த சொற்கள் எண்–63 விடைகள்



ஈழமுரசின் சென்ற எண் கலைந்தசொற்கள் பகுதிக்கு 250 இற்கும் மேற்பட்ட வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர்களின் விபரங்கள் வருமாறு.

1) செல்வன் செந்தூரன் தெய்வேந்திரம்
Tooting,
London S17 9JL.

2) யோகா சிறீதரன்
D-59071 Hamm,
Germany.

3) சுஜீவன் சௌந்தரராஜா
2504 Biel,
Swiss.

4) நமசிவாயம் கெங்கநாதன்
Tiuruniemi-55330,
Finland.

5) திருமதி ஸ்ரெலா தயாளன்
1785 LR. Denhelder,
Holland.

இவர்களுக்கு *Lune International* நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

கலைந்த சொற்கள் எண்-64 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்- 65ம், 26 ஒக்டோபர் - 01 நவம்பர் 2000 ஈழமுரசில் வெளிவரும்.

தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா

கலைந்த சொற்கள் எண்-64 இற்கான விடைகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: **27.10.2000**
(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

கலைந்த சொற்கள்
Eelamurasu
22, Rue Perdonnet,
75010 Paris, France.

பலதும் பத்தும்

இந்த நூற்றாண்டின் இறுதியான சர்வதேச வாகனக் கண்காட்சி பாரிசில் இடம்பெற்று முடிவடைந்துள்ளது. உலகின் அநேகமான வாகன உற்பத்தி நிறுவனங்கள் தங்களது தயாரிப்புக்களைப் பார்வைக்கு வைத்திருந்தன. அடுத்த நூற்றாண்டுக்கான பல புதிய வடிவங்கள் இங்கு அரங்கேறின அவற்றுள் சிலவைற்றை இங்கு காணலாம்.



'HYUNDAI NEOS' ஆசியாவின் மிகப்பெரும் வாகனத் தயாரிப்பு நிறுவனமான HYUNDAI அடுத்த நூற்றாண்டுக்காய் வடிவமைத்துள்ளது தான் இது.

'CITROEN OSMOSE' பிரான்சின் CITROEN வாகனத் தயாரிப்பு நிறுவனம் வடிவமைத்துள்ள இந்த வாகனம் அதி நவீன தொழில் நுட்பங்களைக் கொண்டது. பயணிகள் கொடுக்கும் கட்டளைகளை ஏற்றுச் சென்றடைய வேண்டிய இடத்துக்குக் கொண்டுசெல்லும் தொடர்பு வசதிகளைக்கொண்ட கருவிகள் இதில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

'SEAT SALSA' 'SEAT' நிறுவனம் ஸ்பெயினைச் சேர்ந்தபோதிலும் ஜேர்மனியின் Volicswasan நிறுவனம் அதனைப் பல வருடங்களுக்கு முன் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இந்தப் புதிய வடிவமைப்பு அடுத்த நூற்றாண்டின் முதல் காலாண்டில் பாவனைக்குவருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்சின் மத்ரா **(MATRA)** வின் இளைஞர்களுக்கான புதிய தயாரிப்பின் மாதிரித்தோற்றம் இந்த வாகனத்தினை 16வயது இளைஞர்களும் செலுத்தலாமாம். அரசின் அனுமதியின் பின் அடுத்த வருட இறுதியில் சந்தைக்கு வரவிருக்கும் இது மிக மலிவானதாயும் இருக்குமெனத் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர்.

உலகின் மிகச்சிறிய வாகனம் எனக் கருதப்படும் **SMART** இரண்டு புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. BMW நிறுவனத்தின் கிளை நிறுவனமான இது தனது புதிய வடிவங்களை அதன் பாணியிலேயே அமைத்துமுள்ளது.

'அழகிய லைலா' ஓர் ஆணின் இதயத்தை உலுக்குகின்ற பெண்ணின் அழகை வெளிப்படுத்தியது. 'என்னைத் தாலாட்ட வருவாளோ' இதயத்தையே தொட்டிலாக ஆடவிட்டுவிட்ட காதலியின் தாய்மை

அழகிய லைலா... பாடல் பழநிபாரதியை அடையாளப்படுத்தியது. 'என்னைத் தாலாட்ட வருவாளோ...' பாடல் பழனிபாரதி என்ற கவிஞனை அடையாளப்படுத்தியது. 'உள்ளத்தை அள்ளித்தா'வில் இருந்து இன்று 'தெனாலி' வரைக்கும் பாடல்களை எழுதி தமிழ் மக்கள் மத்தியில் அறிமுகமான கவிஞர் பழநிபாரதி 'ஆறாம் திணை'யுடன் பகிர்ந்துகொண்ட அனுபவங்களில் இருந்து ஈழமுரசு வாசகர்களுக்காக சில...

★ ***உங்களுக்குள் இருந்த கவிதை எங்கே, எப்போது ஆரம்பித்ததென்று சொல்லமுடியுமா ?***

என்னோட தந்தை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் மாணவர். தமிழ் மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். ஆகவே, அதற்கான விதை எனக்குள்ளும் இருந்தது. தமிழும், கவிதையும் சிறு வயதிலிருந்து எனக்கு சினேகமாயின. எனது பதின்மூன்று, பதினான்கு வயதில் கவிதை எனக்குள் முளைவிடத் தொடங்கியது. எனது முதல் கவிதை குற்றாலத்தைப் பற்றியது. இன்னும் நான் பார்க்காத குற்றாலத்தில் அப்போதே குளித்துவிட்டது எனது கவிதை.

★ ***நவீன கவிதைகளை வாசிப்பதுண்டா ? அதைப் பற்றி உங்கள் கருத்து ?***

இயற்கை, காதல், தாய்மொழி என்று அடுத்தடுத்து ஒரே மாதிரியாகத் தொடர்ந்த மரபின் வழியிலிருந்து கிளை பிரிந்ததுதான் புதுக்கவிதை. அதிலிருந்து பிரிந்த பிறிதொரு கிளைதான் நவீனக் கவிதை. எனது ஒவ்வொரு பாடலும், கவிதையும் எனக்கானவைதான். வாழ்க்கையின் பன்முகங்களைத் தரிசிக்க கேள்விக்குள்ளாக்கப்படும் தனி மனித இருப்பை நிதானித்து யோசிக்கக் கிடைத்த நுட்பமான கவிவடிவம் நவீன கவிதை.

★ ***திரை இசைப் பாடல்களில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன், வைரமுத்து அளவுக்கு அவர்களுக்குப் பின்னால் வந்த கவிஞர்கள் சாதித்திருக்கிறார்களா ?***

வைரமுத்து திரைத்துறைக்கு வந்து இருபதாண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இப்போதுதான் அவர் சாதனைகளோடு கைகுலுக்கிக்கொண்டிருக்கிறார். அதற்குப் பின்னால் வந்திருக்கும் பாடலாசிரியர்களுக்கு வாய்ப்புக்கொடுத்து எழுதவிடுங்கள். நிச்சயமாக அவர்களும் சாதனை புரிவார்கள். அதற்குப் பிறகு உங்கள் கேள்விகளை எழுப்புங்கள்.

★ ***பட்டுக்கோட்டை, கண்ணதாசன் காலங்களில் திரை இசைப்பாடல்கள் தத்து வார்த்த, வாழ்க்கைப் பாடல்களால் சினிமாவை செழுமைப்படுத்தின ? இன்றைய காலகட்டத்தில் அது சாத்தியமில்லாமல் போனதற்கு என்ன காரணம் ?***

பட்டுக்கோட்டை, கண்ணதாசன் காலங்களில் சினிமாவிலிருந்த சூழ்நிலை இன்றைக்கில்லை. இன்றைய அவசர உலகத்தில் எல்லாமும் மாறிக் கொண்டிருக்கின்றன. இல்லையென்றால், மாற்றியமைக்கப்படுகின்றன. திரைத்துறை அதற்கு விதிவிலக்கல்ல. இன்றைய தலைமுறைக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றமாதிரி இசையும், ரசனையும் மாறிவிட்டன. அதற்கேற்றாற் போல் திரையிசைப் பாடல்களையும் அமைக்கவேண்டிய சூழ்நிலை உண்டாகிவிட்டது. இவையெல்லாம் சேர்ந்து பட்டுக்கோட்டை, கண்ணதாசன் போன்று எழுத நினைப்பவர்களின் கைகளையும் கட்டிப்போட்டுவிட்டன.

★ ***நீங்கள் கவிதைகளில் காட்டும் பொறுப்புணர்வைத் திரையிசைப் பாடல்களில் வெளிப்படுத்துவதில்லையே ஏன் ?***

முதலிலிருந்து முற்றுப்புள்ளி வரைக்கும் கவிதை எனது ஆளுமைக்கு உட்பட்டிருக்கின்றது. ஆகவே கவிதை எனது கவிஞன் என்ற பொறுப்பைப் பறைசாற்றுகின்றது. திரையிசைப் பாடலுக்கு இன்றைய காலகட்டத்தில் நான் ஒரு தாதி மட்டுமே. இயக்குநரின்

> ஒரு குழந்தையின் சிரிப்பு, கோடை கால மழை, மனதை வருடும் காற்று, இப்படி ஒவ்வொரு விசயமும் எனக்கான கவிதைதான். எனக்கானதாக இருக்கும்போதுதான் கவிதையோ, பாடலோ வெளிப்படும்.

உள்ளடக்கம் இசையமைப்பாளரின் இசைக் கட்டுகளுக்குக் கட்டுப்பட்டு எனது கற்பனையில் பாடலாகின்றது. பல நேரங்களில் கவிஞன் தனது பொறுப்புகளிலிருந்து விலகி நின்று வேடிக்கை பார்ப்பது தவிர்க்க முடியாததாகி வருகின்றது.

★ ***இந்தப் பாட்டுத்துறை உங்களுக்கு எல்லா விதத்திலும் திருப்தியைத் தருகின்றதா ?***

எல்லா விதத்திலும் என்று சொல்லமுடியாது. பாட்டுத்துறை என்னை எல்லோருக்கும் தெரிய வைத்திருக்கின்றது. பொருளாதாரத் தேவையை ஓரளவு நிறைவு செய்திருக்கின்றது. சிந்திப்பதையே வாழ்க்கையாக மாற்றியிருக்கின்றது. மூன்றாவது காரணத்தினால் பாடல் மீதான திருப்தி எனக்குப் பல மடங்காக உயர்கின்றது.

★ ***தற்போதைய திரைப்படங்களில் இசை ஆதிக்கம் அதிகமாகிவிட்டதே அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன ?***

இன்று இசை ஆதிக்கம் செலுத்துகின்ற காலம் என்பதை இயல்பாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். சரி, தவறு என்பதைத் தாண்டி வார்த்தைகளைக் காட்டிலும் ஓசைக்கு முக்கியத்துவம் தருகின்ற ஒரு தலைமுறை அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இசை, தமிழ் இரண்டும் கணவனும் மனைவியுமாய் இல்லறம் நடத்தும்போதுதான் அழகான பாடல் பிறக்கும். இன்றைக்கு அப்படிப்பட்ட குழந்தைகளும் பிறந்து கொண்டுதான் இருக்கின்றன. அதையும் கொஞ்சம் கவனியுங்கள்.

★ ***இது நமக்கான பாடல், நமக்கான கவிதை என்று எவற்றை நினைக்கிறீர்கள் ?***

எனக்கான பாடல், கவிதை என்பதைச் சின்னச் சின்ன விசயங்களில்கூட பார்க்கிறேன். ஒரு குழந்தையின் சிரிப்பு, கோடை கால மழை, மனதை வருடும் காற்று, இப்படி ஒவ்வொரு விசயமும் எனக்கான கவிதைதான். எனக்கானதாக இருக்கும்போதுதான் கவிதையோ, பாடலோ வெளிப்படும்.

★ ***இலக்கிய ஆர்வமும், இலக்கிய வாசிப்பும் உள்ள நீங்கள் அவற்றை உங்கள் திரைப்படப் பாடல்களில் எவ்விதம் வெளிப்படுத்துகிறீர்கள் ?***

சரியான சூழ்நிலையும், எனது கற்பனைக்கு முழு அங்கீகாரமும் கிடைக்கின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் எழுதப்படுகின்ற எனது பாடல்களில் அதை நீங்கள் கவனிக்க முடியும்.

★ ***'அழகிய லைலா' பாடலின் வெற்றியையும், 'தாலாட்ட வருவாளோ ?' பாடலின் வெற்றியையும் எப்படி பார்க்கிறீர்கள் ?***

வெற்றி என்று பார்த்தால் எல்லாம் ஒன்றுதான் 'அழகிய லைலா' ஓர் ஆணின் இதயத்தை உலுக்குகின்ற பெண்ணின் அழகை வெளிப்படுத்தியது. 'என்னைத் தாலாட்ட வருவாளோ' இதயத்தையே தொட்டிலாக ஆடவிட்டுவிட்ட காதலியின் தாய்மை.

மலிவு விற்பனை

Hi FOODS R.N.K. Products

RNK
மாக்கற்றிங்

Staffacherstrasse.141, 8004 Zürich.

ஸ்தாபனத்தில் மீன், மரக்கறி, மளிகைப் பொருட்கள் அனைத்தும்
மறு அறிவித்தல் வரை மலிவு விலைகளில் கிடைக்கும்

சில உதாரணங்கள்

சம்பா அரிசி
5Kg ~~12.00~~ 10.00

கடலைப் பருப்பு
2Kg ~~4.80~~ 4.10

கொண்டல் கடலை
2Kg ~~5.20~~ 4.20

உழுத்தம் பருப்பு
2Kg ~~5.90~~ 5.30

கீரைவகை
~~10.00~~
6.00

புழுங்கல் அரிசி
5Kg ~~11.80~~ 9.00

மைசூர் பருப்பு
2Kg ~~5.50~~ 4.60

இலங்கை மரக்கறி
~~6.50~~ 5.50

இந்திய மரக்கறி
~~5.50~~ 3.80

சூரிச் மாநகரில் Stauffacherstrasse. 141 ல் அனைத்து வசதிகளுடனும் ஓர் ஸ்தாபனம்
RNK மாக்கற்றிங்

இதுவரை காலமும் உங்களுக்கு இருந்த சிரமங்களைக் கருத்தில் கொண்டு சகல பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட ஒரே ஸ்தாபனம்
RNK மாக்கற்றிங்

மலிவான விலையில் தரமான இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடலுணவு வகைகள், ஈழத்தவர் சுவையறிந்து அதற்கேற்ப எமது தரமான தயாரிப்பு முறையிலான அரிசிமா, மிளகாய்த்தூள் போன்ற அத்தியாவதியப் பொருட்களும், விஷேட வைபவங்களுக்கான அன்பளிப்புப் பொருட்களும், மிகவும் மலிவான விலையில் உடன் ஆட்டு இறைச்சி, தரமான ஐரோப்பிய மளிகைப் பொருட்கள், பழவகைகள், மற்றும் இதர பொருட்கள், மலிவான விலையில் தொலைபேசி அட்டைகள், மொத்தமாகவும் சில்லறையாகவும், மதுபான – சிகரட் வகைகள், தமிழ் வாரசஞ்சிகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:
RNK மாக்கற்றிங்

குறிப்பு: உங்கள் அவசர தேவைகளுக்கான சகல பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

எந்நாளிலும் எந்நேரத்திலும்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே! அனைவரையும் வருக! வருக! என அழைக்கின்றோம்.

எமது ஸ்தாபனத்திற்கு விஜயம்செய்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு: 01-240 16 86 / 078 666 52 77

RNK மாக்கற்றிங் திறந்திருக்கும் நேரங்கள்: திங்கள்–வெள்ளி காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை
சனி காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை

Pub Sw.

இத்தாலியில் மாவீரர் நினைவு உதைபந்தாட்டப் போட்டி 2000

கடந்த 20.08.00 திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு 2000 ஆண்டுக்கான மாவீரர் நினைவு உதைப்பந்தாட்டப் போட்டி தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது. தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலியப் பணியகப் பிரதி



நிதி ஏற்றிவைத்தார். அத்துடன் இத்தாலிய தேசியக்கொடியும், தொடர்ந்து போட்டியில் பங்குகொள்ளும் கழகங்களின் கொடிகளும் ஏற்றி வைக்கப்பட்டது. கொடியேற்றலையடுத்து, தமிழீழ விடுதலையை வாழ்வின் இலட்சியமாகக்கொண்டு அதற்காக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும், அவர்களுடன் இணைந்து நின்று போராட்ட வாழ்வில் உயிர்நீத்த எம் தேச உறவுகளுக்காகவும் அக வணக்கம் செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பணியகப் பிரதிநிதி அவர்களின் சிறப்புரை நிகழ்ந்தது. 'தாயக விடுதலைக்கான போரின் பரிமாணம் அதிகரித்துள்ள வேளையில், எதிரியின் தாக்குதல்களால் மக்கள் கொடும் துன்பம் அனுபவித்து வரும் இந்நேரத்தில் தாயகம் விடுத்துள்ள நிதித் தேவையின் அவசியத்தையும், அதில் கூடுதலான கவனம் செலுத்தி நிறைவேற்றுவதற்காக எத்தகைய கஸ்ரங்களையும் எதிர்கொண்டு இந் நிதித் திட்டத்திற்கு அனைவரும் உதவவேண்டும் என்றும், தேசத்திற்கும், மாவீரர்களுக்கும் கழங்கம் ஏற்படுத்தாவண்ணம் அந்த வீரர்களை மனதில் நிறுத்திச் சிறந்த விளையாட்டு வீரனுக்குரிய உளப்பாங்குடன் போட்டியில் அனைத்து வீரர்களும் பங்குபற்ற வேண்டும்' என்றும் வலியுறுத்தினார்.

உதைபந்தாட்ட நிகழ்வில் பலெர்மோ மாநகர தமிழ் விளையாட்டுக் கழகங்களான வீனஸ் விளையாட்டுக் கழகம், அன்புப் பறவைகள் விளையாட்டுக்கழக A, B அணிகள், பாடும்மீன் விளையாட்டுக் கழகம், காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழக A, B அணிகள், புளூடைமன் விளையாட்டுக் கழகம், நண்பர்கள் விளையாட்டுக் கழக A, B அணிகள் என்பவற்றுடன் இந்த ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட 'லெப். கேணல் பொன்னம்மான் தற்காப்புக் கலைக் கல்லூரி' மாணவர்களின் கழகமான இளம் சுடர்கள் விளையாட்டுக் கழகத்துடன், இறுதிப் போட்டி நிகழ்வன்று பலெர்மோ தமிழ்ச் சிறார்களின் விளையாட்டுக் கழகங்களான பண்டாரவன்னியன், சங்கிலியன் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிச் சிறப்பித்தன.

A, B பிரிவுளாக வகுக்கப்பட்டு விளையாட்டுக் கழகங்கள் தெரிவுப் போட்டியில் பங்குபற்றின.

20.08.00, 27.08.00, 03.09.000 ஆகிய நாட்களில் தெரிவுப் போட்டிகள் நடைபெற்று A பிரிவில் காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழக A அணியும், நண்பர்கள் விளையர்ட்டுக் கழக A அணியும், B பிரிவில் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும், அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழக A அணியும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. 10.09.00 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அரையிறுதிப் போட்டிகள் ஆரம்பமாயின. முதலில் காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழக A அணியினர் மோத, பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தினருடன் நண்பர்கள் விளையாட்டுக்கழக A அணியினர் மோதினர். இவ்விருபோட்டிகளில் இருந்தும் இறுதிப் போட்டிக்கு பாடும்மீன் விளையாட்டுக் கழகமும், அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழக A அணியும் தெரிவாகின.

இப்போட்டிகளைத் தொடர்ந்து சிறார்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் சங்கிலியன், பண்டாரவன்னியன் விளையாட்டுக் கழகங்களின்

போட்டி இடம்பெற்றது. இதில் பண்டாரவன்னியன் விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல் அடிப்படையில் வென்றது.

தொடர்ந்து 3ம் இடத்திற்கான போட்டி ஆரம்பமானது. இப்போட்டியில் நண்பர்கள் விளையாட்டுக் கழக A அணியை எதிர்த்துக் காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழக A அணி மோதியது. போட்டியில். இரு கழகங்களும் ஒவ்வொரு கோல்களைப்போட்டு சம நிலையில் நின்றபடி, அடுத்த ஒரு கோலைப் போட முயற்சி செய்தும் இரு கழகங்களாலும் கோல்போட முடியாத நிலையில் போட்டிக்கான நேரம் முடிந்ததும் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அதிலும், இரு கழகங்களும் கோல் போடாத காரணத்தால் தண்டனை உதை முறை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 5:4 என்ற கோல்கள் அடிப்படையில் காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழகம் 2000 ஆண்டுக்கான மாவீரர் நினைவு உதைப்பந்தாட்டப் போட்டியில் 3ம் இடத்தை வென்றது.

பி.ப. 5.55 மணிக்கு அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த 2000ம் ஆண்டுக்கான மாவீரர் நினைவு உதைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியும், மாவீரர் நினைவு சுற்றுக்கிண்ணத்திற்கான போட்டியும் ஆரம்பமானது. இப்போட்டியில் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழக A அணி மோதியது. போட்டி ஆரம்பித்த 12 நிமிடத்தில் அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப்போட்டு போட்டியை விறுவிறுப்பாக்கினார்கள். இடைவேளையின் பின்னர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தினர் 1 கோலைப்போட்டு வெற்றிநிலையை சமனாக்கினார்

கள். அதன்பிறகு போட்டிமேலும் விறுவிறுப்பாகியது. போட்டிக்கான நேரம் நிறைவடைந்தும் சமநிலையான பெறுபேற்றால் மேலதிக நேரம் வழங்கப்பட்டும் கோல் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. எனவே இப்போட்டியிலும் தண்டனை உதை முறையைப் பயன்படுத்தியே வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. 4:2 என்ற கோல் அடிப்படையில் அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழக A அணியினர் 1ம் இடத்தைப் பெற்று சுற்றுக்கிண்ணத்தை இம்முறையும் தமதாக்கிக்கொண்டனர்.

அடுத்து பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கழக சார்பாக பங்குபற்றிய அனைத்து விளையாட்டு வீரர்களுக்கான கௌரவ சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இச் சான்றிதழ்களை நடுவராக

புகலிட நிகழ்வுகள்

வும், துணை நடுவராகவும் கடமையாற்றிய, மாவீரர் கரும்புலி கப்டன் மணியரசனின் சகோதரர் திரு.எட்வேட் அவர்கள் வழங்கினார். அடுத்து சுவிற்சர்லாந்து நாட்டில் நடைபெற்ற தமிழீழக்

கிண்ணத்திற்கான சிறார்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இத்தாலி சார்பாகப் பங்குபற்றிய பண்டாரவன்னியன் விளையாட்டுக்கழக வீரர்கள், கழகக்காப்பாளர், கழகப்பொறுப்பாளர் ஆகியோருக்கு இத்தாலி வாழ் தமிழீழ மக்கள் சார்பாகவும், பணியகம் சார்பாகவும் கௌரவ, சிறப்புப்பரிசுகள் வழங்கப்பட்டன. இவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி வழங்கினார். தொடர்ந்து 2000 ஆண்டுக்கான மாவீரர் நினைவு உதைபந்தாட்டப் போட்டியில் சிறந்த விளையாட்டு வீரனுக்கான கிண்ணத்தை பாடும்மீன் விளையாட்டுக்கழக 10ம் இலக்க வீரன் செல்வன். ஜங்கார்லோ பெற்றுக் கொண்டார்.. இதனை இத்தாலிப் பணியக நிதிப் பிரிவைச் சேர்ந்த திரு.அன்ரிபுறோ அவர்கள் வழங்கினார். அடுத்து சிறந்த பந்துக் காப்பாளருக்கான கிண்ணத்தை நண்பர்கள் விளையாட்டுக் கழகப் பந்துக்காப்பாளர் திரு. அமலன் பெற்றுக்கொண்டார். இதனைத் துணைநடுவராகக் கடமையாற்றிய செல்வன். நந்தகுமார் வழங்கினார். 2000 ஆண்டு மாவீரர் நினைவு உதைபந்தாட்ட சிறார்களுக்கான சிறப்பு உதைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற பண்டாரவன்னியன் விளையாட்டுக் கழகத்திற்கான கிண்ணத்தை துணை நடுவராகக் கடமையாற்றிய திரு. அன்ரன் எல்மோ அவர்கள் வழங்கினார். அடுத்து மாவீரார் நினைவு உதைபந்தாட்டப் போட்டியில் 3ம் இடத்தைப் பெற்றுக்கொண்ட காவலூர் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கான கிண்ணத்தை உதைபந்தாட்ட நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த திரு. பொனிப்பாஸ் அவர்கள் வழங்கினார். 2ம் இடத்தைப்பெற்ற பாடும்மீன் விளையாட்டுக் கழகத்திற்கான கிண்ணத்தை உதைப்பந்தாட்ட நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த திரு. ஜெயரட்ணம் ஆசிரியர் வழங்கினார்.. அடுத்து மாவீரர் உதைப்பந்தாட்டப் போட்டியின் 1ம் இடத்தை வென்ற அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகத்திற்கான கிண்ணத்தையும், 2000ம் ஆண்டு மாவீரர் நினைவு சுற்றுக்கிண்ணத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பிரதிநிதி வழங்கினார். சென்ற ஆண்டும் மாவீரர் நினைவு சுற்றுக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டவர்கள் அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகம் என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு சிறப்புரையாற்றிய திரு. மேதா அவர்கள் இவ்வுதைபந்தாட்டப் போட்டியில் எவ்வாறு மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபற்றிச் சிறப்பித்திருந்தீர்களோ அவ்வாறு தாயக நிதிப்பங்களிப்பையும் செய்யும்படியும், விரைவில் எமது தேசம் விடுவிக்கப்பட வேண்டின் நிதி மிகமிக அத்தியாவசியமானதெனக் குறிப்பிட்டதுடன், ஒவ்வொரு கழக வீரர்களும் இதற்கு முன்வந்து செயலாற்ற, பங்களிப்புச் செய்ய முன்வர வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

இறுதியாக கழகக் கொடிகள் இறக்கப்பட்டதும் தமிழீழத் தேசியக்கொடி இறக்கலுடன் 2000ம் ஆண்டு மாவீரர் நினைவு உதைபந்தாட்டப் போட்டி நிகழ்வு நிறைவுகண்டது.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 - 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris _ Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

வாரம் ஒரு விடயம்

பாலஸ்தீனமும் அதன் விடுதலை இயக்கங்களும்

இஸ்ரேலியர்கள் பன்னிரண்டு சுதந்திர பிரிவுகளாக பிரிவடைந்து சவுல், தாவீது சலமொன் ஆகியோரது ஆட்சிப் பிரிவுகளுக்குள் உட்பட்டனர். இதன் பின்னர் ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட யூதா, சமாரியாவைத் தலைநகராகக் கொண்ட இஸ்ரேல் என்னும் இருநாடுகளாகப் பிரிவடைந்ததாக குறிப்புக்கள் கூறுகின்றன. எது எவ்வாறயினும் இந்த மண் பிலிஸ்தீனியர்களுக்கும், கானானியர்களுக்குமே உரிய சொந்த மண். இஸ்ரேலியர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டுவந்தே இப் பகுதிகளை கைப்பற்றிக் கொண்டது உண்மையான விடயம். இதன்பின்னர் பேரரசர் அலெக்ஸ்சாண்டர் கி.பி. 4ம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தைக் கைப்பற்றினார். இதன்விளைவாக இப்பகுதியில் கெல்னிக் நாகரிகம் பரவத்தொடங்கியது. இதனையடுத்து யூதர்கள் அலெக்ஸாண்டருக்கு எதிராக கிளர்ச்சி செய்து அவரது ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று 70 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். எனினும், இந்தச் சுதந்திரமும் அவர்களுக்கு நிலைக்கவில்லை. பின்னர் இப்பகுதி ரோமானியர்கள்ால் கைப்பற்றப்பட்டது. யேசுக்கிறீஸ்துவின் காலத்தில் ரோமானியர்களின் ஆட்சியிருந்ததை விவிலிய நூலும் சான்று பகர்கின்றது. இதன்பின்னர் கி.பி. 66ம் ஆண்டு இங்கு பெரும் கலகமொன்று ஏற்பட்டதால் றோமானியர்கள் யூதர்களின் கோவில்களை இடித்து யூதாவிலிருந்து அவர்களை வெளியேற்றினர்.



காலச்சக்கரம் சுழன்றது. பேரரசர் 1ம் கொன்ஸ்ரன்ரைன் இப் பகுதியில் ஆட்சி செலுத்திய போது பாலஸ்தீனம் கிறீஸ்தவர்களின் புனித இடமாக மாறியது. ஆனால் இந்த நிலைமையும் நீடிக்கவில்லை. அரேபியர்கள் கி.பி. 640ம் ஆண்டு இப் பகுதியைக் கைப்பற்றினர். இதன் பின்னர் கி.பி. 9ம் நூற்றாண்டில் இப் பகுதி எகிப்தின் ஆட்சிக்குட்பட்டது. எனவே, அராபியர்களின் கைகளிலிருந்து இப்புனித இடங்களை மீட்பதற்காக கிறீஸ்தவர்கள் இரு நூற்றாண்டுகளாக சிறிது சிறிதான கால இடைவெளிகளுக்கிடையே சிலுவைப்போரை நடாத்தினர். அப்போது கி.பி. 1099ம் ஆண்டு ஜெருசலேமில் இலத்தீன் அரசு ஏற்படுத்தப்பட்டது. (The latin Kingdom of Jerusalam) இந்த அரசு சுமார் நூறு ஆண்டுகளுக்கு நீடித்தது. இதன் பின்னர் மாம்லுக்குகளின் (Manlukes) ஆட்சி இப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டது. இக் காலகட்டத்தில்தான் முகமதிய நினைவுச் சின்னங்கள் இப்பகுதியில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. மீண்டும் காலச்சக்கரம் சுழன்றது.

ஒட்டோமான் துருக்கியர்கள் கி.பி. 1516ம் ஆண்டு இப்பிரதேசத்தைக் கைப்பற்றினர். கைப்பற்றிய அவர்கள் இங்கு தங்கள் ஆட்சியை அமைத்தனர். இதன்பின்னர் இப்பிரதேசத்தில் முதலாம் உலகம் போர் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியது. 1920ம் ஆண்டு இப்பகுதியை இங்கிலாந்து வென்றதால், ஜோர்தான் உட்பட இப்பிரதேசம் அதன் நிர்வாகத்தின்கீழ் வந்தது. அவ்வேளைதான் யூதர்களுக்கும், அராபியர்களுக்குமிடையே யூதர்கள் குடியேறுவது இடங்களை வாங்குவது குறித்த பூசல்கள் எழுந்தன. இப்பூசல்களின் விளைவாக இங்கிலாந்து அரசு 1936ம் ஆண்டு பாலஸ்தீனத்தை அவர்களிடையே பிரித்துக்கொடுத்து விடுவதென முடிவுசெய்து, ஒரு வெள்ளை அறிக்கையை தயார் செய்தது. இந்தவேளைதான் வெளிநாடுகளிலிருந்து யூதர்கள் இப் பகுதியை நோக்கி குடியேறினர். இந் நிலையில் 2ம் உலகப்போர் ஏற்பட்டது. 2ம் உலகப்போர் காலத்தின்போது யூதர்களும் அராபியர்களும் இங்கிலாந்து அரசிற்கு ஒத்துழைப்புக் கொடுத்தனர். 2ம் உலகப் போரின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபை 1947ல் பாலஸ்தீனப் பகுதியை இவர்களிடையே பிரித்துக்கொடுப்பதெனவும், ஜெருசலேம் பகுதியைமட்டும் தனது கட்டுப்பாட்டில் பன்னாட்டுப் பகுதியாக வைத்திருப்பதெனவும் முடிவு செய்தது. இதன் பின்னர் இங்கிலாந்து அரசு 1948ம் ஆண்டு ஒரு முடிவினையெடுத்தது.அம்முடிவு இஸ்ரேலியர்களுக்கு ஒரு முக்கியமான முடிவாகவிருந்தது. அது...

– வேம்பு

(தொடரும்)

உலகம் சந்தித்த போர்கள்

சிலுவைப் போர்கள்

உலகின் எந்தவொரு மதமார்க்கமும் மக்களை அழிவுப்பாதையில் இட்டுச்செல்வதில்லை. அந்தந்த மார்க்கத்தை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்திய புனிதர்கள் மனித குலத்திற்கிடையே சகோதரத்துவத்தையும், சமாதானத்தையுமே காட்டிக்கொடுத்தார்கள். ஆனால், அந்த மதமார்க்கத்தைப் பின்னர் கையிலெடுத்தவர்கள்தான் மதங்களுக்கிடையேயான பிளவுகளுக்கு வித்திட்டார்கள். இந்தவகையில்தான், சிலுவைப்போர்களும் வெடித்தன. குறிப்பிட்ட புனித பிரதேசங்கள் தமக்கேயுரியன என கிறீஸ்தவர்களும், முஸ்லீம்களும் போட்டிபோட்டதால்தான் இந்தச் சிலுவைப்போர்கள் ஆண்டாண்டுகாலமாக நடைபெற்றன.

கடந்த வாரங்களில் மூன்று சிலுவைப் போர்கள் பற்றி இப்பத்தியில் பார்த்தோம். இம்முறை 4ம் சிலுவைப் போர் பற்றி பார்க்கலாம்.

1202ம் ஆண்டில் இப் போர் மூண்டது. இப்போரின் சூத்திரதாரியான பாப்பரசர் 3ம் இன்னோசென்ற்ரே இருந்ததாகக் கூறப்படுகின்றது. புனித இடங்களை மீட்கும் நோக்கம் சிலுவைப்போரில் ஈடுபட்ட தரப்பினருக்குச் சாத்தியப்படாததால் அதற்கு மாறாக ஏற்கனவே கிறீஸ்தவ ஆட்சி நடைபெற்றுவந்த கொன்ஸ்தாந்திநோபில் நகரைத் தாக்கி அந்நகரை சிலுவைப்போரில் ஈடுபட்ட கிறீஸ்தவ தரப்பினர் சூறையாடினர். கிறீஸ்தவ ஆட்சி நடைபெற்ற ஒரு நகரையே இவர்கள் ஏன் தாக்கவேண்டுமென்ற ஒரு கேள்வி இப்போது எழுகின்றதல்லவா? அதற்கும் காரணமில்லாமலில்லை. கொன்ஸ்தாந்திநோபில் நகரிலிருந்த ஆட்சி அப்போதைய இலத்தீன் அரசிற்கு சாதகமாக இல்லாததால் அங்கு இலத்தீன் அரசொன்றினை நிறுவும் நோக்குடன் பாப்பரசர் 3ம் இன்னோசென்ற் இந்த தாக்குதலை மேற்கொள்ள அதிகாரமளித்தார். கொன்ஸ்தாந்திநோபில் மீது தாக்குதல் நடாத்தப்பட்டு இருந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டு புதிய இலத்தீன் அரசொன்று அங்கு நிறுவப்பட்டது. அப்போதைய கிரேக்கத்தின் திருச்சபையும் இதன்மூலமாகப் பாப்பரசரின் அதிகாரத்திற்குட்படுத்தப்பட்டது. இதுதான் 4ம் சிலுவைப் போர் நடைபெற்றதற்கான சுருக்கமான காரணங்கள்.

அடுத்து, 5ம் சிலுவைப்போரைப் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

இந்தப்போர் கி.பி. 1218ம் ஆண்டுதொடக்கம் 1221ம் ஆண்டுவரையும் நடைபெற்றது இதனை குழந்தைகளின் சிலுவைப்போரெனவும் வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஜேர்மனியைச் சேர்ந்த சிறுவன் நிக்லோசும், பிரஞ்சுச் சிறுவன் இஸ்ரீபனும் கிறீஸ்தவப் படைகளுக்கு தலைமை தாங்கினர். 45,000 சிறார்கள் இந்தப் படையில் அங்கம் வகித்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. அல்ப்ஸ் மலையைக் கடந்து இத்தாலிக்குச் சென்ற இந்த சிறுவர் படையில் பலர் வழியிலேயே மாண்டுபோயினர். இன்னும் கொஞ்சப்பேர் மத்தியதரைக் கடலைக் கடக்கும்போது உயிரிழந்தனர். இன்னொரு பகுதியினரோ பட்டினியால் மடிந்தனர். இவ்வாறாக இந்தச் சிறுவர் படை சின்னாபின்னப்பட்டு தமது இலக்கை நோக்கி நகரும்போது முஸ்லீம் படையினரால் கைப்பற்றப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டனர். புனிதப் பிரதேசங்களை மீட்கப் போருக்குச் சென்ற இச் சிறுவர்கள் இறுதியில் அடிமைகளாக விலைபோனமை சிலுவைப் போர் வரலாற்றிலொரு குறிப்பிடத்தக்க விடயம். எனினும் இந்தச் சிலுவைப் போர் ஓய்ந்த பாட்டைக் காணமுடியவில்லை. ஒன்றன்பின்னொன்றாக 8 சிலுவைப் போர்வரை நடைபெற்றுள்ளன. இப்போர்கள் எடுக்கப்பட்ட காலமோ மிக நீண்டவை.

5ம் சிலுவைப்போர் முடிவடைந்து பத்துவருடங்களின் பின்னர் 6ம் சிலுவைப்போர் ஆரம்பமானது. இப்போர் ஜேர்மனியப் பேரரசர் 2ம் பிறடிக்கின் தலைமையில் நடாத்தப்பட்டது. ஏற்கனவே இப்பேரரசர் தனது தலைமையில் புனிதப் பிரதேசங்களை மீட்க படை நடாத்தப்போவதாக பலமுறை கூறியிருந்தும், கூறியபடி அதைச் செய்யவில்லை. இதனால் பாப்பரசருக்கு இம்மன்னன் மீது கடுமையான கோபமெழுந்தது. புனித இடங்களை மீட்பதற்கு பிறடிக் உதவிசெய்யாதபடியினால் அவரைக் கத்தோலிக்க மதத்திலிருந்து மதவிலக்குச் செய்வதாக பாப்பரசர் அறிவித்துவிட்டார். அப்போதைய காலகட்டத்தில் ஒருவர் மதவிலக்கம் பெறுவாரேயானால் அது அவருக்கு அளிக்கப்பட்ட பெரும் தண்டனையாகவே கருதப்படும். பாப்பரசர் இவ்வாறு அறிவித்ததும் பிறடிக் அத்தண்டனையிலிருந்து எவ்வாறு தப்பலாமென யோசனைசெய்தார். அவருக்கிருந்த ஒரேவழி சிலுவைப்போரொன்றை நடாத்துவதாகவே இருந்தது. இதனால் சிலுவைப்போரொன்றை நடாத்துவதென பிறடிக் முடிவுசெய்தார். அப்போது போர் தொடங்குவது பிறடிக்கிற்கு ஒரு சாதகமான நிலைமையாகவே இருந்தது. ஏனெனில் ஜெருசலேமில் நிலைகொண்டிருந்த முஸ்லீம்களுக்கிடையே அவ்வேளை சச்சரவுகளும், முரண்பாடுகளும் நடந்துகொண்டிருந்தன. எனவே அந்தக் காலகட்டத்தையே பிறடிக் தனக்குச் சாதகமாக்க முடிவுசெய்தார். அவரின் அவ் முயற்சி வீண்போகவில்லை. முஸ்லீம்கள் அவருக்குப் பணிந்துகொள்ளவேண்டியதாயிற்று. புதிய உடன்படிக்கையொன்றிமூலம் முஸ்லீம்கள் பிறடிக்கை ஜெருசலேமிற்கு மன்னராகவும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இந்த நிலைமை நீடிக்கவில்லை. ஜெருசலேம் மீண்டும் சொற்ப காலத்தில் முஸ்லீம்களின் கைகளுக்கு மாறியது. இதனையடுத்து 7ம் சிலுவைப்போருக்கான நிர்ப்பந்தமும் எழுந்தது. இப்போது பிரெஞ்சு மன்னர் 9ம் லூயி ஜெருசலேமை மீட்க போரை நடாத்தினார். அவரது படையெடுப்பில் டைமெற்றாத் துறைமுகம் வீழ்ந்தது. ஆனாலும் எகிப்திய நகரான கைரோ நோக்கி இவரது படையெடுப்பு நிகழும்வேளை மஞ்சூரா எனும் இடத்தில் இருதரப்பினருக்குமிடையே கடுமையான சமரெழுந்தது. அந்தச் சமரில் இவர் தோல்வியடையவேண்டி நேரிட்டது. தோல்வியடைந்த 9ம் லூயி முஸ்லீம்களால் சிறைபிடிக்கப்பட்டார். பின்னர் பெரும்தொகையான பணத்தினை திறையாகக் கொடுத்து இவரை மீட்டுக்கொண்டனர். எனினும் மீண்டும் 8ம் சிலுவைப்போரை இவரே நடாத்தவேண்டி நேரிட்டது. இம்முறை துனிசியா நாட்டில் லூயியும் அவரது படையினரும் பாசறையமைத்து தங்கியவேளை முஸ்லீம்படையினரல்லாத வேறொரு வடிவத்தில் அவர்களுக்கு எதிர்ப்பெழுந்தது. பாசறை துருப்புக்களுக்கிடையே இனம்தெரியாத தொற்றுநோயொன்று மிக வேகமாகப் பரவியது. ஆயிரக் கணக்கான துருப்புக்கள் இத்தொற்றுநோய்க்குப் பலியானார்கள். நோய்த்தாக்கத்திலிருந்து 9ம் லூயியும் தப்பிக்கொள்ள முடியவில்லை. லூயியும் மரணமடைந்தார். இந்தவேளை, இங்கிலாந்து இளவரசர் எட்வேட் ஒரு காரியம் செய்தார்.

[தொடரும்]

- சி.பி.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்
யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Bornheimer Str-31, 53111 Bonn.
உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.
தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652895
GE-Pub.

வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – [டிகோல் தொடர் - 17]

மார்ச் 1939 இல், 6மாத இடைவெளிக்குப் பிறகு, இட்லர் பழைய பாணியிலேயே, புதிய கோரிக்கை ஒன்றை முன்வைத்தான். போலந்து நாட்டில், ஜெர்மனிக்குச் சொந்தமான ஒரு பகுதி இருந்தது. அப்பகுதியுடன் ஜெர்மனி கடல் மூலம் தொடர்பு வைத்திருந்தது. இப்போது தரை வழிப்பாதை [Dantzig பாதை] வேண்டும் என்று அடம் பிடித்தான். வழக்கம்போல, சாகசப் பேச்சும், கடுமையான மிரட்டலும் மாறி மாறி வந்தன. இதற்கிடையே, 39 இல், உள்நாட்டுப் போருக்குப் பின், ஸ்பெயின் நாட்டில், இட்லர் முசோலினி உதவியுடன் சர்வாதிகாரி Franco ஆட்சியைக் கைப்பற்றினான். இந்தப் போரில், பிரஞ்சு இடது சாரிகள் Francoவின் எதிரிகளுடன் போரிட்டுத் தோற்றனர். ஆனால், பிரான்சின் இடது சாரி அரசு போரில் பங்கேற்கவில்லை. ஸ்பெயின் நாட்டுப் போர் முடிவில், பிரஞ்சு அரசு, மார்ஷல் பெட்டெய்னை, ஸ்பெயினுக்கு, பிரஞ்சுத் தூதராக அனுப்பி வைத்தது. ஏறத்தாழ 83 வயதிலும் அவர் அப் பதவியை ஏற்றுக்கொண்டார். டிகோல் மார்ஷலைப் பார்த்து பரிதாபப்பட்டார். பதவிகளுக்காக ஓடுகிறார். அவருக்கோ முடியாத வயது. அவர் வேலையை வேறு சிலர் செய்வர், இவருக்குப் பெயர் கிடைக்கும், ஏன் ஓய்வெடுத்துக் கொள்ளக்கூடாது?

23-08-39 இல் ஒரு மோசமான செய்தி டிகோலுக்குக் கிடைத்தது. அன்று, இட்லரின் ஜெர்மனியும், ஸ்டாலினின் சோவியத் யூனியனும் ஒரு நாட்டை மற்ற நாடு தாக்காது என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. பிரான்சுதான் இப்படி சோவியத் யூனியனுடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்க வேண்டும் என்று கருதினார் சார்ல்ஸ். செக்கோஸ்லோவேக்கியா நாட்டைக் கைவிட்ட பிரான்சை இனி எந்த நாடு நம்பும்?

01-09-39 இல் ஜெர்மனி Dantzig க்கைக் காரணங் காட்டி, போலந்து நாட்டை ஆக்கிரமித்தது. வேறு வழியின்றி, பிரான்சும், இங்கிலாந்தும் ஜெர்மனி மீது போர் தொடுத்தன. இந்த இரு நேச நாடுகளும், தங்களது படைகளுடன் ஜெர்மனியைத் தாக்கவில்லை. டிகோல் கருதியபடியே, இட்லர் போலந்தைக் கடித்துக் குதறினான். அவனது டாங்கிகள் அசுர வேகத்தில் முன்னேறின. வானத்தில் இருந்து, அவனது விமானங்கள் போலந்துக்காரனை நிலை குலையச் செய்தன. இரண்டே வாரத்தில் போலந்து ஒழிந்தது. அதனது 10 இலட்சம் பேர் கொண்ட இராணுவம் அழிந்தது. இட்லரும், ஸ்டாலினும், போலந்தைப் பங்கு போட்டுக் கொண்டனர்.

டிகோல் பொறுமினார். போலந்து நாட்டை, எதைக் கொண்டு இவ்வளவு விரைவில் இட்லர் நசுக்கினான் என்பதை இனியாவது பிரஞ்சு நாட்டின் மிகப் பெரிய தளபதிகளும், அரசியல்வாதிகளும், செய்தியாளரும் உணருவார்களா? சில அவசிய அவசரமான முடிவுகளை எடுப்பார்களா? இல்லை, அவர்கள் தங்கள் போக்கில் இருந்து மாறவே மாட்டார்கள் என்ற முடிவுக்குத் தான் அவர் வந்தார். பிரான்சு நாட்டைப் பற்றியும், பிரஞ்சு மக்களைப் பற்றியும் தான் அவர் கவலைப்பட்டார்.

அவரது கருத்தில், இட்லர் பிரான்சைத் தாக்கும் போது, பிரஞ்சுப் படைகள் பின்வாங்கப் போகின்றன. போர் ஏழத்தாழ 5 ஆண்டுகள் நீடிக்கும். மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவிக்கப் போகின்றனர். ஆனால், இறுதியில், பிரான்சு தான் வெற்றி பெறும். அவரது நண்பர்கள் ''இதெல்லாம் எப்படி நடக்கும்? என்று கேட்டனர்.

முடியும். ஏனெனில், இட்லரின் படைகள் இங்கிலாந்தை ஆக்கிரமிக்க முடியாது. சில ஆண்டுகளுக்குப்பிறகு, சோவியத் ஒன்றியமும், அமெரிக்காவும் போரில் குதிக்கும்.

- இட்லருக்கும், ஸ்டாலினுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் உள்ளதே.

- அது தற்காலிகமானது, இட்லர் நிச்சயம் சோவியத் நாட்டை ஆக்கிரமிப்பான்.

அதனை, 'எனது போராட்டம்' என்ற நூலில் எழுதி இருக்கிறான். பிரஞ்சு அரசியல்வாதிகள் நாட்டை நடத்திச் செல்லவில்லை. நாடு எப்படியோ போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்தார் நமது கர்னல்.

கடைசி, கடைசி முறையாக, சில பக்கங்களில் ஒரு மடலை எழுதினார். அதில் 'பிரான்சின் பாதுகாப்பு சரிவர அமையவில்லை. உடனே, புதிய புதிய டாங்கிகளையும், விமானங்களையும், நவீன தொடர்புச் சாதனங்களையும் தயாரிக்க வேண்டும்' என்று எழுதினார். இந்த மடலை, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், நிதி அமைச்சர் பால்ரேனோ [அவருக்கு மிகவும் நெருக்கமானவர்] மிகப் பெரிய இராணுவத் தளபதிகளுக்கும், சில அரசியல் வாதிகளுக்கும், பத்திரிகையாளருக்கும் [மொத்தம் 90 பேர்] அனுப்பிவைத்தார். இந்தக் கடைசி முயற்சியும் யார் கண்ணையும் திறக்கவில்லை. நாட்டின் பாதுகாப்புக்கு அத்தியாவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

1940 குளிர்காலம் முடிந்தது. வசந்த காலம் ஆரம்பித்தது. இட்லர், மேற்குப் பகுதி தாக்குதலுக்குத் தயாராகிறான் என்ற செய்திகள் கிடைத்தன. இந்தச் சமயத்தில் தான் ஒரு நல்ல செய்தி டிகோலுக்குக் கிடைத்தது. அவரது நம்பிக்கைக்குரிய பால்ரேனோ பிரதமராக 21-03-1940 இல் நியமிக்கப்பட்ட செய்தி தான் அது.

கூடவே, கெட்ட செய்திகளும் வந்து சேர்ந்தன. புதிய பிரதமரும் அரசியல் வாதிதானே! அவரது அமைச்சரவைக்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற வேண்டுமே, ஆகவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பிடித்தவர்களை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். பாதுகாப்புத் துறை அமைச்சர் யார்? முன்னாள் பிரதமர் தலாதியெ. வேறு சில உருப்படாத அமைச்சர்கள். டிகோல் மீண்டும் ஒருமுறை வேதனைப்பட்டார். இந்தப் பாதுகாப்பு அமைச்சர், முடிவு எடுக்கத் தெரியாதவர், எதனை மாற்றப் போகிறார்? பால் ரேனோ இவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறார்? புதிய பிரதமரிடமே, டிகோல் இக்கேள்விகளைக்கேட்டார்.

எனக்கு வேறு வழியில்லை என்றார் பிரதமர். புதிய அமைச்சரவையில், துணைப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்கும்படி அவரிடம் பிரதமர் கோரினார்.

- யோசிக்கிறேன் என்று பதில் அளித்தார் கர்னல், தலாதியெ தலைமையில் என்ன செய்வது? ரேனோவின் அமைச்சரவை, பாராளுமன்றத்தில் ஒரே ஒரு வாக்குப் பெரும்பான்மையுடன் தப்பிப் பிழைத்தது. டிகோல், கர்னலாக இருந்தும், 4வது டாங்கிகள் படைப்பிரிவின் தலைமைப் பதவி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொதுவாக, இந்தப் பதவியை ஒரு ஜெனரலிடம் தான் ஒப்படைப்பது வழக்கம்.

[தொடரும்]

கவிக்களம்

தமிழீழம் – எங்கள்
தாய்நாடு – அந்தத்
தனிநாடு – எங்கள்
தாய்வீடு

என்ன இல்லை – எங்கள்
தாய் நாட்டில்
நாமேன் அலைவான் – இங்கு
வெளிநாட்டில்

கடல் வளமும் அங்கு உண்டல்லோ?
பனை வளமும் அங்கு உண்டல்லோ?
நில வளமும் அங்கு உண்டல்லோ?
நீர் வளமும் அங்கு உண்டல்லோ?

எங்கள் அம்மாக்களேன் அழவேண்டும்
நாளும் கண்ணீரையேன் விடவேண்டும்

எம் தேசம் இன்றே எழவேண்டும் – அது
எல்லாமும் நாளை பெறவேண்டும்.

எம் தேசமெழும் துணிவோடு – அது
நாளை மலரும் தன்னிறைவோடு'

- மீசாலையூர் சுதந்திரன்

★ ★

அன்னம்மாக்கா

போறாளே அன்னம்மாக்கா
பிறந்து வளர்ந்த
மண்ணைவிட்டு
பிணம் தின்னிக் கூட்டம்
வரும் செய்தி கேட்டு....
கையில் கிடைத்த பொருளை தூக்கி
இயற்கை வளம் நிறைந்த
வன்னியை நோக்கி

போறாளே அன்னம்மாக்கா
நேற்றைய செய்தி நெஞ்சில் கனக்க
பள்ளி மாணவன் பயங்கர வாதியாம்
சுட்டுக்கொன்ற பின்
கயவர் சொன்ன பொய்யிது
ஈழத் தமிழரை வாட்டி வதைக்கிற
கொடிய படைகளின்
கண்ணில் படாமல்
கவலை சுமந்து
வன்னியை நோக்கி

போறாளே அன்னம்மாக்கா
வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி
சேர்த்த சொத்து எல்லாம் விட்டு
வரம்புச் சண்டை வாய்க்கால்ச் சண்டை
வேலிச் சண்டை பனங்காய்ச் சண்டை
எல்லாம் மறந்து ஏக்கம் நிறைந்து
உயிரைக் காக்க உழைப்புத் தேடி
ஒட்டிய வயிறும் கட்டிய சேலையும்
வாழ வைக்கும் வன்னியை நோக்கி

- வெற்றிவேலழகன்

ரதி ஜுவலர்ஸ்

28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL

'எப்பொழுதுமே மலிவு விலை'

Tel: 0181-9033063-Fax: 0181-9039711

OPEN: 7 Days a Week

Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Pub

கிரிகோரி பிங்கஸ்

உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்திபெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசை முறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப்பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.

கிரிகோரி பிங்கஸ், நியூ ஜெர்சி மாநிலத்தில் ஊட்பைன் என்னும் ஊரில் 1903ம் ஆண்டில் பிறந்தார். இவருடைய பெற்றோர் ரஷிய யூதர்கள், கார்னல் பல்கலைக் கழகத்தில் 1924ம் ஆண்டில் இவர் பட்டம் பெற்றார். ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் 1927ம் ஆண்டில், டாக்டர் பட்டம் பெற்றார். அதன்பின் ஹார்வர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள் உட்பட பல நிறுவனங்களில் ஆராய்ச்சிகள் செய்தார். பல ஆண்டுகள் கிளார்க் பல்கலைக் கழத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். 1944ம் ஆண்டில் ஒர்சஸ்டர் பரிசோதனை உயிரியல் நிறுவனத்தை நிறுவுவதற்கு உதவி புரிந்தார். அதன் ஆய்வுக் கூடங்களின் இயக்குநராகவும் நெடுங் காலம், பணியாற்றினார். அவர் 250 அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். 'கருவளத்தை வெற்றி கொள்ளுதல்' (CONQUEST OF FERTILITY) என்ற நூலையும் எழுதினார். இது 1965ம் ஆண்டில் வெளிவந்தது.

வாய்வழி உட்கொள்ளும் கருத்தடை மாத்திரைகளைக் கண்டுபிடிப்பதில் தலையாய பங்குகொண்ட அமெரிக்க உயிரியலறிஞர் கிரிகோரி பிங்கஸ் (Gregory Pincus) ஆவார். இவர் இதற்காகப் பெரும் புகழ்பெறவில்லையெனினும், உலகப் புகழ் பெற்றுள்ள எத்தனையோ பேரை விட உள்ளபடிக்கு உலகின் மீது மிகப் பெருமளவுக்குச் செல்வாக்குப் பெற்றுள்ளார் எனக் கூறலாம்.

இவர் கண்டுபிடித்த மாத்திரை இரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. மக்கள் தொகைப் பெருக்க அபாயம் மேன்மேலும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இன்றைய உலகில், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தும் சாதனம் என்ற முறையில் இந்த மாத்திரையின் முக்கியத்துவம் மிகப்பெரிது. பாலுறவு முறைகளை மாற்றுவதில் இந்த மாத்திரை கொண்ட செயல் விளைவு அத்துணை நேரடியானதன்றெனினும், சரிநிகராகப் புரட்சிகரமானது எனலாம். கடந்த 15 ஆண்டுகளில், அமெரிக்காவில் பாலுணர்வு மனப்போக்குகளில் ஒரு புரட்சியே ஏற்பட்டிருக்கின்றது என்பதைப் பெரும்பாலானோர் ஒப்புக்கொள்கின்றனர். அந்தப் புரட்சிக்கு வேறு பல அரசியல், பொருளாதார, சமூகக் காரணங்களும் உண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால், மிகப்பெரிய தனிக் காரணம் கருத்தடை மாத்திரை கண்டுபிடிப்புத் தான் என்பதை மறுப்பதற்கில்லை.

இதற்கு முன்பே பாதுகாப்பானதும், நம்பகமானதுமான கருத்தடை முறைகள் அறியப்பட்டிருந்தன என்பதால், முதலாவது கருத்தடை மாத்திரையாகிய 'ஈனோவிட்' (Enovid) கண்டுபிடிக்கப்பட்டது. உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்தது அன்று எனச் சிலர் வாதிடுவர். இவ்வாறு வாதிடுகிறவர்கள், நுட்ப முறையில் பயனுறுதியுள்ளதாக இருக்கும் கருத்தடை முறைக்கும், மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்தடை முறைக்குமிடையிலான வேறுபாட்டை மறந்துவிடுகிறார்கள். இந்த மாத்திரை கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னர் பெரும்பாலான 'வல்லுநர்கள்' பரிந்துரை செய்த கருத்தடைச் சாதனம் 'சவ்வுத்திரை' (Diaphragm) ஆகும். கருத்தடை மாத்திரை முதலில் சோதனை செய்து பார்க்கப்பட்டபோது, நூற்றுக் கணக்கான பெண்கள், ஏற்கெனவே பரிசோதித்துப் பார்க்கப்பட்ட பாதுகாப்பான சவ்வுத் திரையைப் பயன்படுத்துவதைவிட, பரிசோதிக்கப்படாத மற்றும் அபாயகரமான இந்த மாத்திரையைப் பரிசோதித்துப் பார்க்க முன்வந்தனர்.

'ஈனோவிட்' மாத்திரையைப் பயன்படுத்துவதால் சிலசமயம் உடல் நலத்திற்குக்கேடு ஏற்படுகின்றது என்பதாலும் இதற்குப் பதிலாக விரைவிலேயே வேறொரு புதிய, பாதுகாப்பான மருந்து அல்லது சாதனம் கண்டுபிடிக்கப் படலாம் என்பதாலும், இந்த மாத்திரை கண்டுபிடித்ததை ஒரு பெரிய வெற்றியாகக் கருத முடியாது என்றும் ஒரு சாரார் கூறக்கூடும். ஆனால், இந்த மாத்திரை ஏற்கெனவே பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இது பொதுவாக மனநிறைவளிப்பதாகவும் இருக்கிறது. எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படும் கருத்தடைமுறை, இதைவிடச் சற்றே தான் மேம்பட்டதாக இருக்கமுடியும். ஆகவே, 1950-களில் 'ஈனோவிட்' மாத்திரையைக் கண்டு பிடித்தது, கருத்தடை முறைகளில் ஒரு முக்கியமான திருப்புமுனை என்பதை வரலாறு மெய்ப்பிக்கும், மெய்ப்பிக்கவேண்டும்.

> **இவர் கண்டுபிடித்த மாத்திரை இரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. மக்கள் தொகைப் பெருக்க அபாயம் மேன்மேலும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இன்றைய உலகில், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் சாதனம் என்ற முறையில் இந்த மாத்திரையின் முக்கியத்துவம் மிகப்பெரிது.**

வாய்வழி உட்கொள்ளும் கருத்தடை மாத்திரையைக் கண்டுபிடிப்பதற்குப் பலர் துணை செய்திருக்கிறார்கள். நெடுங்காலமாகவே இதுகுறித்து விவாதிக்கப்பட்டு வந்தது. ஆனால், இத்தகைய மாத்திரையில் எத்தகைய வேதியியற் பொருளை உள்ளிடுவது என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. இதற்கான முக்கியமான கண்டுபிடிப்பு, 1937ம் ஆண்டிலேயே செய்யப்பட்டது என்பது வியப்புக்குரியது. அந்த ஆண்டில் ஏ.டபிள்யூ மேக்பீஸ், ஜி.எல். வெய்ன்ஸ்டீன், எம்.எச். ஃபீரீட்மன் ஆகிய மூவரும் பெண்பால் இயக்குநீர்களில் (Harmones) ஒன்றான 'புரோஜஸ்டிரோன்' (Progesterone) என்ற பொருளை உட்செலுத்தினால், ஆய்வுக்கூட விலங்குகளில் கருத்தரிப்பது தடைப்படுகிறது என்பதைச் செயல் விளக்கம் செய்து காட்டினார்கள். எனினும், தோலடியூடான ஊசி போடுதல் (Hypodermic injection), ஓர் ஏற்புடைய கருத்தடை முறையாகக் கருதப் படாத காரணத்தாலும் அந்தக் காலத்தில் புரோஜஸ்டிரோன் மிகவும் விலையுடையதாக இருந்தமையாலும், அந்த முறைக்கு கருத்தடை ஆதாரவாளர்களிடம் வரவேற்புக் கிடைக்கவில்லை.

எனவே, கருத்தடை மாத்திரையை உருவாக்குவதற்கான முக்கிய முயற்சி 1950 ம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படவில்லை. அமெரிக்க உயிரிலறிஞர் கிரிகோரி பிங்கஸ் 1950 ல் அந்த முயற்சியைத் தொடங்கினார். குடும்பக் கட்டுப்பாட்டை நெடுங் காலமாக வலியுறுத்தி வந்த மார்கரெட் சாங்கரின் (Margaret Sanger) வலியுறுத்தலின் பேரிலேயே பிங்கஸ் இந்த முயற்சியில் ஈடுபட்டார்.

பிங்கஸ் மிக விரைவிலேயே, தமது நுட்பமான தொழில்நுட்ப அறிவினாலும், அறிவியல் உள்ளுணர்வாலும், இந்தச் சிக்கலுக்குரிய ஒரு பொதுவான தீர்வினைக் கண்டுபிடித்தார். புரொஜஸ்டிரோனை வாய்வழியாக உட்செலுத்தினால், ஆய்வுக்கூட விலங்குகளில் கருவுறுதல் தடைப்படுகிறதா என்பதைப் பரிசோதிக்கும்படி ஒர்செஸ்டர் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளராகிய டாக்டர் டின்-சூயே-சாங் என்பவரை பிங்கஸ் கேட்டுக்கொண்டார். சாங்கின் பரிசோதனைகள் வெற்றிகரமாக அமைந்தன. சில ஆண்டுகளுக்கு முன்னர் ரஸ்ஸல் மார்க்கர் (Russel Marker) என்ற வேதியியல் வல்லுநர், புரோஜஸ்டிரோனைக் குறைந்த செலவில் செயற்கையாகத் தயாரிக்கும் முறையொன்றைக் கண்டுபிடித்திருந்தார். எனவே, சாங்கின் வெற்றி ஊக்கமளிக்கும் ஒரு தொடக்கமாக அமைந்திருந்தது.

தமது முயற்சிகள் சரியான திசையிலேயே செல்கின்றன என்று பிங்கஸ் கருதினார். எனவே, அவர் தம் முயற்சிகளைக் கைவிடவில்லை. புரோஜஸ்டிரோனிலுள்ள குறைபாடுகள் இல்லாத வேறொரு வேதியியல் கூட்டுப்பொருள் இருக்க வேண்டும் என்று அவர் உறுதியாக நம்பினார். எனவே, புரோஜஸ்டிரோனை ஒத்ததாக இருக்கும் வகையில் நாங்கள் தயாரித்துள்ள செயற்கை வேதியியற் பொருள்களின் மாதிரிகளைத் தமக்கு அனுப்பிவைக்கும்படி பல்வேறு வேதியியற் பொருள் தயாரிப்பு நிறுவனங்களை 1953ம் ஆண்டு செப்டம்பரில் பிங்கஸ் கேட்டுக் கொண்டார். தமக்கு வந்த வேதியியற் பொருட்கள் அனைத்தையும் பிங்கஸ் சோதனை செய்துபார்த்தார். அவற்றுள் 'ஜி.டி.சீயர்லே அண்டு கோ' என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட நோரியத்தைனோடிரல் (Norethynodrel) என்ற பொருள், சிறப்பாகச் செயல் விளைவு கொண்டிருப்பதைக் கண்டார்.

இது பிங்கசுக்கு தற்செயலாகக் கிடைத்த ஒரு நற்பேறு எனலாம். ஏனெனில், 1950ம் ஆண்டில் அவர் தமது ஆராய்ச்சியைத் தொடங்கியபோது, நோரித்தைனோடிரல் என்ற பொருள் தயாரிக்கப்பட்டிருக்கவே இல்லை. இந்தப் பொருளை 1951ம் ஆண்டில்தான் சீயர்லே ஆய்வுக் கூடத்தில் பணியாற்றி வந்த டாக்டர் ஃபிராங்பி. கோல்ட்டோன் (Dr.Frant B Colton) என்ற வேதியியல் வல்லுநர் செயற்கை முறையில் தயாரித்திருந்தார். பின்னர் அவர் தம் பெயரில் அதற்குப் புத்தாக்க உரிமையும் பெற்றிருந்தார். ஆனால், கருத்தடை மருந்தை வாய்வழிச் செலுத்துவதற்கு கோல்ட் டோனோ, அவரது மேற்பார்வையாளர்களோ முயன்று பார்க்கவில்லை. அச் சமயத்தில் அவர்கள் அத்தகைய மருந்தைத் தாங்கள் கண்டுபிடித்திருப்பதை அறிந்திருக்கவுமில்லை.

பிங்கஸ் தமது ஆராய்ச்சிக் குழுவினருடன் மேலும் பரிசோதனைகள் செய்து, நோரித்தைனோடிரலுடன் மெஸ்டிரானோல் (Mestranol) என்றும் மற்றொரு பொருளைச் சிறிதளவு சேர்த்தால் அதிகப் பயன் விளைவு ஏற்படும் என்பதைக் கண்டார். இந்த இணைப்புப் பொருள் தான் இறுதியில் 'ஈனோவிட்' என்ற பெயரில் ஜி.டி. சீயர்லே நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டது.

உலக வரலாற்றில் பதிவானவர்கள்



NÆRKØB TRAVELS Ltd
MONEY & TRANSFER



* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)

★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

★ **NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark**

★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42

NÆRKØB பேருந்துசேவை	ஒருவழி	இருவழி
Danmark _London	540 Kr	890 Kr
Danmark _Paris	540 Kr	865 Kr
Danmark _Hombrg	205 Kr	327 Kr

* பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூர்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

சரித்திரத்தில் முதல்முறையாக நியூசிலாந்துக்கு முக்கிய வெற்றி



15.10.2000 அன்று கென்யாவின் தலைநகர் நைரோபியில் முடிவுற்ற மினி உலகக்கிண்ணப் போட்டியில் எதிர்பாராத வெற்றியைப் பெற்றதன் மூலம் நியூசிலாந்து சரித்திரத்தில் முதல் தடவையாக முக்கிய வெற்றி ஒன்றினை கொண்டாடியது.

இறுதி ஆட்டத்தில் பூவா தலையா பார்த்ததில் சந்தர்ப்பத்தை தனதாக்கிய நியுசிலாந்து அணியின் தலைவர் பிளமிங், இந்தியாவை முதலில் துடுப்பாடப் பணித்தார். பிளமிங்கின் முடிவை பிளப்பதுபோல் இந்தியாவின் ஆரம்பம் பெரும் அட்டகாசமாக இருந்தது. 141 ஓட்டங்கள் வரை விக்கட்டுக்கள் இழக்காமல் அடித்தளம் சிறப்பாக அஸ்திவாரம் போடப்பட்டது. அதுவும் 26.2 ஓவர்களில் மட்டுமே நிகழ்த்தப்பட்டது. இந்த நிலையில் "இந்தியா 300ஐத் தாண்டுவதைத் தடுக்க நியூசிலாந்தால் முடியுமா?" என ஊகிக்க வைத்தது. டெண்டுல்கர் முதலில் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஓட்டவேகமும் ஆட்டம் கண்டது. இந்தப் போட்டியின் மூலம் டெண்டுல்கர் உலகின் அதிகூடிய ஒருநாள் ஓட்டங்களைப் பெற்றவீரனாகச் சாதனை படைத்துள்ளார். கங்குலியின் தவறான ஒரு அழைப்பை அடுத்து ஓட்டமெடுக்க முயன்று தேவையற்ற முறையிலேயே டெண்டுல்கர் ஆட்டமிழந்தார். இதற்குப் பரிகாரமாகத் தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய கங்குலி இச்சுற்றுப் போட்டியில் தனது இரண்டாவது சதமாக 117 ஓட்டங்களைப் பெற்றார். கங்குலியின் இழப்பைத் தொடர்ந்து இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் "குழப்பல்" ஆட்டமாக மாறியது. பின் வந்த வீரர்களை விரட்டி வெளியேற்றுவதில் நியூசிலாந்து அணி பெருவெற்றி கண்டதால், எதிர்பார்த்த 300 இலக்கு 264 உடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது.

பதிலுக்காடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் 2 விக்கட்டுக்களை இழந்துவிட இந்தியாவுக்கே வெற்றி என்ற முடிவு பலருக்கு ஏற்பட்டுவிட்டது. ஆனால், நியூசிலாந்தின் இடைநிலை மட்டையாளர்கள் தளர்ந்துவிடவில்லை. மாறாக இந்திய வீச்சாளர்களை தவிடுபொடியாக்கப் புறப்பட்டனர். அதிலும் 102 உடன் கெயிர்ன்ஸ் ஆடியவிதம், அற்புதம்! அணியின் விக்கட்டுகள் இடையிடை கழன்றபோதும், இவரின் மட்டை மட்டும் ஆட்டத்தில் துடித்துக்கொண்டது. இறுதிவரை வெற்றியாளர் யார் என்பதை தனிமனிதனாக கெயிர்ன்ஸின் ஆட்டமாற்றமே நிரூபிக்கவேண்டியதாயிற்று. குதப்பலான இந்தியப் பந்து வீச்சு, நியூசிலாந்தின் வெற்றியை தடுக்கமுடியவில்லை. இறுதி இரு பந்துகள் மீதமாக உள்ளபோது 6 விக்கட்டுகள் இழப்புக்குத் தனது இலக்கை நியூசிலாந்து பெற்று, மினி உலகக்கிண்ணத்தையும் தனதாக்கியது. இவ்வெற்றிக்குக் கதாநாயகனாகத் தன்னை மாற்றிய கெய்ர்ன்ஸ் சிறப்பு ஆட்டக்காரனாக கௌரவிக்கப்பட்டார்.

மாவீரர் நாள் 2000

ஓவியப் போட்டிகள் நடைபெறும் இடங்கள்

21.10.2000 சனிக்கிழமை

1. நியுலி சூர்மான் (த.சோ.ம.) (Neuilly Sur Marne) - 14.00 மணி
2. மாந்த் (த.சோ.ம.) (Mante.) - 14.00 மணி
3. சார்சல் (த.சோ.ம.) (Sarcelles) - 16.00 மணி
4. வில்லியோலுபல் (த.சோ.ம.) (Villiers le Bel) - 15.30 மணி
5. ஒல்னே சுபுவா (த.சோ.ம.) (Aulnay sous bois) - 15.30 மணி
6. துளூஸ் (த.சோ.ம.) (Toulouse) - 10.00 மணி

22.10.2000 ஞயிற்றுக்கிழமை

1. கிளிச்சி சுபுவா (Clichy sous bois) -15.00 மணி
2. மொன்த்றோய் (Mentreuil) -14.30 மணி
3. ஆர்யென்தெய் (Argenteuil) -10.30 மணி
4. சென்டெனி (Saint Denis) -15.30 மணி
5. மோ (Meau) - 14.00 மணி
6. சேர்ஜி 1, 2 (Cergy) - 15.00 மணி
7. செவ்றோன் (Sévran) - 14.00 மணி
8. பாரிஸ் சோதியா மண்டபம் (Paris) - 11.00 மணி, 14.00 மணி
9. ஒல்னே சுபுவா 2, (Aulnay sous bois) - 15.30 மணி

ஓட்டம் குவிப்பதில் டெண்டுல்கர் உலக சாதனை

15.10.2000-இல் நிறைவடைந்த மினி உலகக்கிண்ணத்தை இந்தியா தவறவிட்டாலும், சாதனை படைப்பதில் இந்திய இளம்புயல் டெண்டுல்கர் தவறிவிடவில்லை. உலகின் உன்னத துடுப்பாட்ட வீரரான இவர் 69 உடன் வெளியேறினார் என்பதைவிட, உலக சாதனை படைத்துச்சென்றார் என்பதே சாலச்சிறந்தது. இதுவரை ஒருநாள் பந்தயங்களில் 9378 ஓட்டங்களைப் பெற்றிருந்த அசாருதீனை முந்திக்கொண்டு 9433 ஓட்டங்களுடன் உள்ளார் டெண்டுல்கர்.

இதுவரை கூடிய ஓட்டங்களுடன் திகழும் முதல் 10 வீரர்களை வரிசைப் படுத்தியபோது,

வீரர்	தேசம்	ஓட்டங்கள்	சதம்	சராசரி
1. டெண்டுல்கர்	இந்தியா	9433	25	42.11
2. அசாருதீன்	இந்தியா	9378	7	36.92
3. கென்ஸ்	மே.இந்தியத்தீவுகள்	8648	17	41.33
4. அரவிந்தடிசில்வா	சிறீலங்கா	8334	11	35.6
5. சயிட் அன்வர்	பாகிஸ்தான்	7573	19	39.44
6. மார்க் வோவ்	அவுஸ்திரேலியா	7565	14	37.82
7. ரணதுங்கா	சிறீலங்கா	7454	4	35.83
8. இம்சாம் உல் ஹக்	பாகிஸ்தான்	7418	7	39.45
9. யாவிட் மியன்டாட்	பாகிஸ்தான்	7381	8	41.70
10. சலிம் மலிக்	பாகிஸ்தான்	7169	5	32.88

சொந்த நாட்டில் வெற்றி கொண்டாடும் கிங்கிஸ்

முதல்நிலை டெனிஸ் வீராங்கனையான சுவிஸ் நாட்டின் மார்டீனா கிங்கிஸ், முதல் தடவையாகச் சொந்தநாட்டில் வெற்றிபெற்றுள்ளார். 14 வயதில் டெனிஸ் போட்டிகளில் உலகதரத்தில் கால் பதித்து முதல்நிலையிலுள்ள கிங்கிஸ் இதுவரை 32 ஓப்பன்களைத் தனதாக்கியுள்ளார். இவை அனைத்தும் தாய்நாட்டுக்கு வெளியே ஆகும். இந்த நிலையில் 1996ம் ஆண்டு சூரிச் ஒப்பனில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றதால் வெற்றி பெறுவாரென்று எதிர்பார்க்க, ஜானா நெவாட்னாவிடம் 6:2, 6:2 என தோற்றார். இதேபோல் இதே ஓப்பனில் இறுதியாட்டத்தில் சென்றவருடம் வீனூஸ் வில்லியம்சிடம் 6:3, 6:4 எனத் தோற்றார்.

எப்போது இவர் சொந்தநாட்டில் தன் ரசிகர்களை மகிழ்விக்கப்போகின்றாரென எதிர்பார்க்க 15.10.2000 அன்று சூரிச் குளோட்டன் நகரில் நடைபெற்ற "சுவிஸ்கொம் சலஞ்சர்" கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் 2ம் நிலையிலுள்ள டவன்போட்டிடம் எதிர்கொண்டார். ஏற்கனவே இருதடவையின் தோல்வியை அடுத்து, இம்முறையும் அதுவே என்பதுபோல் ஆட்டம் அமைந்தது. இறுதிக்கட்டத்தில் அதிர்ஸ்டம் கிங்கிஸ்சை தட்ட, அவர் 6:4, 4:6, 7:5 என வெற்றிபெற்றுச் சொந்த நாட்டின் கன்னிவெற்றியையும் ஈட்டிவிட்டார்.

தொகுப்பு: பொன். தாமோதரம்

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில்
சகல விதமான திருத்த வேலைகளுக்கும்
காத்திருக்கின்றார்கள்.

VICTOR Sarl

கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த
வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான
தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள

VICTOR SARL
43, Rue de la Reunion, 75020 Paris
Tel: 01 44 93 90 30

பொங்கல் நாள் முதல் ஒரு புதிய உலகம்

IBC - TRT நிறுவனங்கள்

இணைந்த புதிய தொலைக்காட்சி

தைத்திருநாளில் தமிழர் இல்லம் வருகிறது

- தரமானதொரு தொலைக்காட்சியைத் தரும் நோக்குடன் IBC, TRT கைகோர்த்துக் கொண்டமை நீங்கள் அறிந்த செய்தி
- இந்த இணைவை விரும்பாத பணியாளர்களின் திடீர் வெளியேற்றமும் அதனால் ஏற்பட்ட தடங்கலும் அசௌகரியங்களும் நீங்கள் உணர்ந்த விடயங்கள்
- தொடர்ந்தும் TRT-தமிழ் ஒளி நிகழ்ச்சிகள் சீரமைக்கப்பட்டு ஒளிபரப்பப்படுவதும் நீங்கள் அறிந்ததே
- ஆனால் தற்போது நீங்கள் பார்ப்பது, ரசிப்பதுதான் எமது புதிய தொலைக்காட்சி என நீங்கள் எண்ணினால் அது தவறு.
- IBC, TRT இணைந்த புதிய பெயருடனான தொலைக்காட்சி இதே அலைவரிசையில் அறிமுகப்படுத்தப்படும்

அடுத்த வார தொலைக்காட்சியில்

கவிஞர் வைரமுத்துவின்

கவிதை நேரம் தொடர்

சனி / ஞாயிறு கிழமைகளில் மாலை 8.30 மணி

வைகோவின் முழுநேர

திருச்சி எழுச்சி மாநாடு

ஞாயிறு மாலை 8.00 மணி

REUTERS

ராய்டர் (Reuters) சர்வதேச செய்தி நிறுவனத்திடமிருந்து செய்திக்கான ஒளிப்படங்கள் பெறப்படுகிறது

செய்தி நேரம் சீரமைக்கப்படுகின்றது

இன்னும் பல புதிய தொடர்களும் நிகழ்ச்சிகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன

இந்த முயற்சிக்காய்

- ☐ புதிய நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.
- ☐ மேன்மையான தொழில்நுட்பம் திரட்டப்படுகின்றது.
- ☐ அனுபவமும் முதிர்ச்சியும் . மிக்க பணியாளர்கள் இணைக்கப்படுகின்றனர்.
- ☐ பயிற்சிப் பட்டறைகள் பல நடாத்தப்படுகின்றன.
- ☐ ஒவ்வொரு நாடுகளிலும் தயாரிப்பு நிறுவனங்கள் நிறுவப்படுகின்றன.

★★★

உங்கள் வாசல் தேடி ஒரு புதிய உலகம் உங்கள் உணர்வுகளுக்கு உயிர் கொடுக்க வருகின்றது.

அதுவரை தமிழ் ஒளி மெருகூட்டப்பட்ட புதிய புதிய நிகழ்ச்சிகள் மூலம் உங்களை மகிழ்விக்கும்.

கடந்த சில மாதங்களாக சந்தாவைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் நவம்பர் 1ம் திகதிக்குள் எமது தொடர்பாளர்களிடம் பெயர்களைப் பதிவு செய்து 2001ம் ஆண்டிற்கான முழுச் சந்தாவை மட்டும் செலுத்தி இப்போதிருந்தே எமது தொலைக்காட்சியை பார்ப்பதை உறுதிப்படுத்துங்கள்.

(2001-ற்கான வருட சந்தாவை நவம்பர் 15ம் திகதிக்குள் செலுத்தினால் இதுவரையான நிலுவை செலுத்தவேண்டியதில்லை)

எமது தொடர்பாளர்கள்

FRANCE
LUNE INTERNATIONAL - 01 42 09 21 43
KUMAR SHOP - 01 42 59 35 10

SWITZERLAND
MOORTHY - 0792047405

SWISS
NEW MILLENIEM COMPUTERS AND ELECTRONICS.
Tellstr.31, 8004 Zurich
TEL.01/240 25 08
FAX.01/240 30 85

LONDON
IBC - 00442077878000

SWISS
ASIAN ENTERPRISE
Hohlstr.535, 8004 Zurich
TEL.01/431 99 67 / FAX.01/431 99 69

SWISS
THAMILARSI JEWELLERY
Neugasse 58, 8005 Zurich
TEL.01/440 60 50 / FAX.01/440 60 52

GERMANY
LEEMA மக்கள் கடை (Neuss)
- 02131546311

மேலதிக முகவர்கள் பற்றிய விபரம் அடுத்த இதழில் தரப்படும்

4ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்
23.09.1977

விண்ணுலகில்
31.10.1996

செல்வன் புவனேந்திரன்

ஆனந்தன் (ராஜா)

இனிய நண்பன் ராஜாவே !
அன்பாலும் பண்பாலும் உன் புன்சிரிப்பாலும்
உள்ளங்களைக் கவர்ந்து பழகிய நாட்களை
எம்மால் மறக்க முடியவில்லையே...
உன் மறைவுகண்டு
நான்காண்டு கழிந்துவிட்டன - ஆனால்
உன் பால்முகம், வற்றாத நதியைப்போல்
எங்கள் மனதைவிட்டு என்றும் நீங்கவில்லை.
உன் பிரிவால் கலங்கி நிற்கும்

- நண்பர்கள்.

வன்னியில் கடும் மழை

சமைக்க, உறங்க முடியாத நிலையில் மக்கள்

(16.10.00)

வன்னிப் பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களே இம் மழையினால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் பெய்துவரும் கடும் மழையினால் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சுமார் 3000 வரையான குடும்பங்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. மழை காரணமாக வெள்ளம் குடிசைகளின் உள்ளே தேங்கி நிற்பதால் சமைக்கவோ, உறங்கவோ முடியாத நிலையில் மக்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நிறுவனங்களும் தம்மால் இம் மக்களுக்கு உதவ முடியவில்லையென தெரிவித்துள்ள நிலையில், ஒரேயொரு நிறுவனம் மட்டும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான குடிசைகளை திருத்தியமைக்க நிதியுதவி வழங்க உடன்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சியில் 48 இடம்பெயர்ந்தோர் குடியிருப்புக்களில் 599 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 758 பேர் வாழ்கின்றனர். கரைச்சியில் 15 குடியிருப்புக்களில், கண்டாவளையில் 7 குடியிருப்புக்களில், பூநகரியில் 23 குடியிருப்புக்களில் அமைக்கப்பட்டுள்ள குடிசைகள் மழையினால் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில்...

ஆண்டுகளாக போராடி, இன்னுயிர்களை அர்ப்பணித்தும், சொல்லொணாத் துயரில் ஆழ்ந்தும் வருகிறார்கள். சிங்களப் பேரினவாத அரசு, இந்தியா உட்பட பல நாடுகளையும் ஏமாற்றி ஆயுத உதவியும் நிதி உதவியும் பெற்று தமிழின மக்களின் உரிமைக்குரலை நசுக்கி வருகின்றது. எனவே நிலையான உண்மையான அமைதி இலங்கையில் ஏற்பட வேண்டுமானால் தமிழீழ மக்களின் தன்னுரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டியது அவசியம். இத்தகைய முயற்சியையே இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என இக் கூட்டத்தின் மூலம் கேட்டுக் கொள்கிறோம், என தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்ப்ஸ்...

துச் செல்லப்பட்ட இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இரு நாட்களுக்கிடையே 60 சென்டி மீற்றர் மழைவீழ்ச்சி அல்ப்ஸ் மலைப்பகுதியில் பொழிந்ததால் இம் மலைப் பகுதியின் தொடர்பு நாடுகளான இத்தாலி, பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் பெரும் வெள்ளப் பெருக்கும் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இந்நிலைமைகளால் ஏராளமான மக்கள் மேற்கண்ட நாடுகளின் அவசரகால மீட்புப் படையினரால் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அல்ப்ஸ் மலைப் பகுதிக்கான போக்குவரத்துக்களும் மோசமடைந்துள்ளன.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்....

செல்ல படைத்தரப்பில் முடிவெடுக்கப்பட்டமை யாழ். செயலக ஊழியர்கள் இடையே பதட்டத்தையும் தோற்றுவித்துள்ளது. இராணுவத்தின் பிரிவு செயலகத்திற்குள் அமைக்கப்பட்டால் யாழ். மாவட்டச் செயலகத்தின் சகல நடவடிக்கைகளையும் இராணுவத்தினர் கண்காணிப்புக்கு உட்படும் நிலை தோன்றியுள்ளது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

மல்லாவியில்...

தான வீதிவழியாக யோகபுரம் மகாவித்தியாலய மைதனத்தை வந்தடைந்தததும் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. இதனை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன், தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் சாம்பவி, முழங்காவில் பிரதேச சிறப்புப் பொறுப்பாளர் அருண் ஆசிரியர், புதுக்குடியிருப்பு பிரதேச சிறப்புப் பொருப்பாளர் விதுரன், தமிழீழ எல்லைப்படை நிர்வாகப் பொறுப்பாளர் மணிவண்ணன் ஆகியோர் உட்பட பலர் ஏற்றுக்கொண்டனர்.

லெப்.கேணல் குமரப்பா புலேந்திரன்
உட்பட பன்னிரு வேங்கைகளின்
பதின்மூன்றாம் ஆண்டு நினைவு சுமந்த

எழுச்சி மாலை

*விடுதலைக் கனல் சுமந்து 1987ம் ஆண்டு
வீரச்சாவைத்தை தழுவிக் கொண்ட
வீரமறவர்களின் கனவு சுமந்து
எழுச்சி கொள்வோம்.*

தேச விடுதலையை நெஞ்சிலே சுமந்து வீரம் விளைவிக்க நஞ்சருந்தி விடுதலை நெருப்பை வளர்த்த வேங்கைகளின் கனவை நனவாக்குவோம் என அவர்களின் பாதம் தொட்டு மலர் வணக்கம் செலுத்த வாரீர்.

காலம்: 22.10.2000 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: Salle du Marche
Bd Jean Jaures
92110 CLICHY.
M°: Mairie de Clichy (Line 13)
Mc Donalds க்குப் பின்புறமாக அமைந்துள்ள மண்டபத்தில்.

மேலதிக தொடர்புகளுக்கு : 01 43 58 11 42

2000ம் ஆண்டில் இலாபநோக்கமற்ற 14வது வருட சேவையின் தொடர்ச்சி.... (1986 - 2000)

பாரிஸ் தமிழர் கல்வி நிலையம்

பிரெஞ்சு அரசால் அங்கீகரிக்கப்பட்டது
No d'Ordre 86-3394

Centre Parisien d'Education pour les Tamouls

கல்விச் சேவையில் நாம் முன்னணியில் திகழ்வது தற்செயலானதல்ல

புதிதாக பிரான்சுக்கு வந்ததால் பிரெஞ்சு மொழி அறிவின்மை உங்கள் அன்றாட அலுவல்களுக்கு தடையாக உள்ளதா?
ஏற்கனவே பல பாடசாலைகளில் பிரெஞ்சு கற்றும் சரளமாக உரையாட, எழுத முடியாமல் உள்ளதா?

புதிய பிரெஞ்சு வகுப்பு

- உச்சரிப்பு (*La phonétique*)
- அடிப்படை இலக்கணம் (*La grammaire*)
- உயர் இலக்கணம் (*La grammaire*)
- உரையாடல் (*Les conversations*)
- கடிதம் எழுதுதல் (*Les lettres*)

28/10/2000

17:30 → 19:00

ஆசிரியர்
கஜன்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் உள்ளதால் உங்களுக்கான
பதிவுகளை முன்னதாகவே பதிவுசெய்து கொள்ளுங்கள்

அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும் (சனி, ஞாயிறு 13:00 – 21:00) 165, Rue de Charonne, 75011 Paris.
Tél : 01.43.56.17.91 URL : http://www.ptec.fr.st E-Mail: ptec@online.fr M° : Charonne ou Alexandre Dumas

தங்க மாளிகை
ஜுவல்லர்ஸ்

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும் காலை 10.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்

மங்கையர்க்கொரு மாளிகை தங்க மாளிகை

Thanga Maligai Jewellers

Amalia House

276, Lewisham High Street,
London,
SE13 6JZ.

Tel: 020 8690 3686
Fax: 020 8690 4157

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

அக்கரைப்பற்று பள்ளிவாசலினுள் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்

ஐந்து பேர் காயம்

(16.10.00)

அக்கரைப் பற்று பள்ளிவாசலினுள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சிறீலங்காப் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக தெரியவருகிறது. நள்ளிரவு வேளையில் பள்ளிவாசலில் கூடியிருந்த மக்கள் மீதே பொலிசார் இத் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர். பள்ளிவாசலினுள் திடீரென உள்நுழைந்த பொலிசார் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் மட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்காவின் தேர்தலை அடுத்து, அக்கரைப்பற்று பகுதியில் ஐக்கியதேசிய கட்சி - முஸ்லீம் ஆதரவாளர்களுக்கிடையே மோதல்கள் நடைபெற்றுவரும் நிலையில் இப் பள்ளிவாசல் துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இத் துப்பாக்கி பிரயோகம் பற்றி சிறீலங்கா பொலிஸ் தரப்பு செய்தி தெரிவிக்கையில் பொலிசார் மீது தாக்குதல் நடாத்தவென ஒரு கும்பலொன்று பள்ளிவாசலில் நடுநிசிவேளையில் திட்டம் தீட்டியபோதே தாம் அவர்கள் மீது தாக்குதல் நடாத்தியதாகவும் அவர்களிடம் இருந்து இரண்டு துப்பாக்கிகளை கைப்பற்றியதாகவும் தெரிவித்துள்ளது. இச்சம்பவத்தில் பள்ளிவாசலினுள் கூடியிருந்தோரில் ஒரு சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுள் முஸ்லீம் பத்திரிகையாளர் ஒருவரும் அடங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிசாரின் இத் துப்பாக்கி பிரயோகத்தை கண்டித்து இன்று அக்கரைப்பற்று பகுதியில் பகிஸ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தை ஆக்கிரமிக்கும் சிங்களப்படை

(16.10.00)

சிறீலங்கா இராணுவத்தின் யாழ். குடா நிர்வாக அலுவலகம் யாழ். செயலகத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளமை யாழ். செயலக வட்டாரங்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. யாழ். குடாவில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் ஏதேச்சதிகார முடிவுகள் யாவும் அவர்களின் நிர்வாகப் பிரிவினாலேயே நடைமுறைப்படுத்தப்படுவது வழக்கம். குறிப்பாக மக்களின் நடமாட்டத்திற்கு கட்டுப்பாடுகள் விதிக்கும் செயற்பாடுகளையும் அமுல்ப்படுத்துவது இராணுவத்தின் குடிசார் நிர்வாக பிரிவுதான். இந்நிலையில், இப்பிரிவை செயலகத்திற்குள் கொண்டு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

இலங்கையில் அமைதி ஏற்பட தமிழ் மக்களின் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் – எஸ்.டி.சோமசுந்தரம்

(16.10.00)

இலங்கையில் நிலையான அமைதி ஏற்பட ஈழத்தமிழ் மக்களின் தன்னுரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என புரட்சித் தலைவர் அ.தி.மு.க கட்சியின் பொதுச் செயலரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.டி.சோமசுந்தரம் தெரிவித்துள்ளார். சென்னையில் கடந்த சனியன்று நடைபெற்ற கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசியபோது, ஓரின மக்கள் ஒரு நிலப்பகுதியில் தனியரசோடு வாழ்ந்த வரலாறு இருந்தால், அவர்களுக்கு தன்னுரிமை வழங்கவேண்டும் என்பது உலக மன்றம் ஒப்புக்கொண்ட ஒரு தீர்வு. தமிழீழ மக்கள் தன்னுரிமைகோரி கடந்த பதினேழு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

அல்ப்ஸ் மலையில் பொழிந்த மழை இத்தாலி, பிரான்ஸ், சுவிசில் உயிரிழப்புகள்

(16.10.00)

மேற்கு ஐரோப்பாவின் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் கடந்த சில நாட்களாகத் தொடரும் சீரற்ற காலநிலையால் பலர் உயிரிழந்தும் பலர் காணாமல் போயும் உள்ளனர். வட இத்தாலியிலும் சுவிசின் தென்பகுதி அல்ப்ஸ் பிரதேசத்திலும் பிரான்சின் அல்ப்ஸ் மலைப் பிரதேசத்திலும் தொடர்ந்து பெய்த பெரும் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கிலும் மண்சரிவிலுமே கூடுதலான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இத்தாலியில் உயிரிழந்தவர்களில் ஐவரது சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. சுவிசில் 13 பேர் காாணமல் போயிருக்கின்றார்கள். வெள்ளத்தில் அடித்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

மல்லாவியில் இராணுவப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சி நிறைவு நிகழ்வு

(16.10.00)

விடுதலைப் புலிகளின் மக்கள் படை கட்டுமானத்திற்கான இராணுவப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கான பயிற்சி நிறைவு நிகழ்வும், அணி வகுப்பு நிகழ்வும் நேற்று மல்லாவியில் இடம் பெற்றுள்ளன. யோகபுரம் மகா வித்தியாலய மைதானத்தில், மல்லாவி பிரதேச போரெழுச்சிக் குழு பேராளர் தியாகராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பொது ஈகைச் சுடரினை தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வே.இளங்குமரன், தமிழீழ போரெழுச்சிக் குழுக்களின் பொறுப்பாளர் இளம்பருதி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை முள்ளியவளை பிரதேச சிறப்புப் பொறுப்பாளர் ரூபன் ஏற்றிவைத்தார். மல்லாவி அன்னிச்சங்குளம் அ.த.க பாடசாலையில் முன்றலில் இருந்து பயிற்சி ஆசிரியர்கள் அணிவகுத்து பிர

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

Southharrow Food & Wines
234 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 02084236321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub